முருகா

மயிலம் திருப்புகழ் திருப்படி விழா

வெள்ளி விழாமலர்

1956—1980



மலர் வெளியிடுபவர்

உயர்திரு G. சுப்பிரமணியம்

நிலைய இயக்குநர்

வானொலி நிலையம் பாண்டிச்சேரி

வெளியீடு

மயிலம் திருப்படி விழாத் தலைமையகம்

சன்மார்க்க சங்க நிலையம்

மேல மங்கலம்

26—1—80

உ

முருகன் துணை.

மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் மடாலயம்

மயிலம்

எங்கள் சிவஞான பாலசித்தருக்குக் காட்சியளித்த முருகப்பெருமான் எங்கள் மயில மலையில் அன்பர்களுக்கு அருள்புரிய வள்ளி தெய்வயானை அம்மையாருடன் திருவோலக்கங்கொண்டு அமர்ந்துள்ளார். யாவர்க்கும் விளங்கும் பொருளைக் குன்றின் மேலிட்ட விளக்கென்பர். பெருமானே அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரமமாய் நின்ற ஜோதிப் பிழம்பாக விளங்குகின்றான். இறைவன் மறைந்திருக்கவில்லை. சேய்மையிலுள்ளவர்க்கும் புலனாகுமாறு உயரிய இடத்திலிருந்து காட்சி நல்குகிறான், அங்ஙனம் அன்பர்க்கு எளியனாய் விளங்கும் அப்பெருமான் திருவருளைப் பெற பல வழிகள் உண்டு. அவற்றுள் திருவிழா ஒன்று. அம்முறையில் திருப்படி விழாவும் கொள்ளத்தக்கதாகும்.


மயிலமலை திருக்கோயில் திருப்படி விழா இருபத்து நான்காண்டு களாகத் தொடர்ந்து நடைபெற்று இப்பொழுது இருபத்தைந்தாவது ஆண்டுவிழா நடைபெறுகிறது. இவ்விழா வெள்ளிவிழா. இவ்விழாவை நடத்திவருபவர்கள் நம் பேரன்பிற்குரிய மேலமங்கலம் தவத்திரு, இராமதாஸ் சுவாமிகளாவார். அவர் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர், மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்பது அவர்களுக்கே பொருந்தும். செயலைச் சொல்லாமலே செய்து காட்டுபவர். அவர்கள் அன்பர்கள் உதவியுடன் இவ்விழாவை நன்முறையில் நடத்தி வரு கின்றார்கள். படி விழா அன்று அன்பர்கள் திருப்புகழ் முதலிய இசைப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு ஒவ்வொரு படியாக ஏறிவரும் காட்சி கண்ணிற்குப் பெருவிருந்தாகும். சிறந்த பேரறிஞர்களின் சொற்பொழிவு கள் செவிக்கு நல்லுணவாகும். பல்லாயிரக் கணக்கான மக்கள் முருகப் பெருமானைக் கண்டு தரிசிப்பதற்கு இப் படிவிழா நன்முறையில் நடந்து வருகிறது.

இத்திருப்படிவிழாவின் வெள்ளி விழா நினைவாகக் கல்மண்டபம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இவையாவும் முருகப்பெருமான் திருவருளேயென எண்ணி உள மகிழ்கின்றோம்.

இந்நல்லறப் பணியில் ஈடுபட்டுவரும் தவத்திரு மேலமங்கலம் சுவாமிகளும் அன்பர்களும் பல்லாண்டுவாழ எங்கள் மயிலம் முருகப் பெருமான் திருவருளும் எங்கள் ஆதி சிவஞான பாலய சுவாமிகள் திருவருளும் துணைபுரிகவென வாழ்த்துகின்றோம்.

இவ்வெள்ளிவிழாச் சார்பில் வெளிவரும் மலர் செந்தமிழ் நறுமணம் பெற்று நாற்றிசையும் கமழ்வதாகவென வாழ்த்துகிறோம்.

35/3



மயிலம் - பொம்மபுர ஆதீனம் குருமகா சந்நிதானம்


ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

(19ஆம் பட்டம்)

பால யோகி ராமதாஸ் சுவாமிகள்



ஞாலம் ஓங்க நற்பொறுப்பாற்றும்
பால யோகி ராமதாஸ் சுவாமிகள்



மயில மலை முருகன் திருக்கோவில் தோற்றம்



மயிலை மலை முருகன்

(உற்சவமூர்த்தி)

காணிக்கைக் கவிமலர்

கஞ்சத் தவிசிருக்கும் கற்பகமே எனவுமையாள்
களிப்போடு எடுத்தணைத்த கந்தப் பெருமானே
வஞ்சிக் கொடியிடையாள் வள்ளிக் குகந்தோனே
வையத்து உயிரெல்லாம் வளங்காண வைப்போனே
செஞ்சொல் தவஞானி சிவஞான பாலையர்க்கும்
திருவருண கிரியார்க்கும் தித்தித்த தெள்ளமுதே
மஞ்சு முகடோங்கும் மயிலப் பெருமானே
மலரடிக்கிம் மலரிட்டோம் மனதோ டருளுகவே.

மழைமுகில் கண்டுதான் மாமயில் ஆடும்
மங்கல முழக்கினுல் தினமுமே யாடும்
விழவரு மயிலமலை வீற்றிருந் தருளும்
விரிசடை யீசனின் மார்பிலே ஆடி
முழவதிர் உடுக்கையை விழைவுடன் முழக்கி
முளைமதி நெளியரவு கங்கை நடுங்க
அழகுசெய் வேல்முருக மால்மருக ஐயா
அடிமலர்க்குக் காணிக்கை யாக்கினேம் மலரே.

பலநதியும் பயன்ஈந்து கடல்பக்கம் சேரும்
பாங்குபோல் பலதிசையின் பக்தரினங் கூடி
தலமருண கிரிநாதர் தந்ததமிழ் பாடி
தரிசிக்கப் படிவிழா தக்க மூவெட்டு
நலவாண்டு நல்லோர்கள் ஒருமையால் நாட்டி
நல்லருள் மணம்வீசும் வெள்ளி விழாவில்
கலைமணம் கமழ்மயில மலைமுருக னடியில்
காணிக்கை யாக்கினேம் கனிவொடு இம் மலரே.

திருக்கயிலாய
பரம்பரைத் தருமையாதீனம்
26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ
சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்

உ
குருபாதம்

தருமபுரம்
மாயூரம் (அஞ்சல்) 609 001

26—11—1979

ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே

அழகே வடிவமாக - என்றும் குமரனாக விளங்குபவன் முருகன். 'என்றும் இளையாய் அழகியாய்' என்று அப் பெருமானை அழைக்கிறார் நக்கீரதேவர். முருகன் எழுந்தருளி அருள்வழங்கும் தலங்கள் பலவாயினும் மயில்வடிவாக விளங்கும் குன்றின்மீது வீற்றிருக்கும் தலங்கள் இரண்டு. ஒன்று குன்றக்குடி; மற்றொன்று மயிலம். மயில் வடிவாகிய சூரபதுமன் எப்போதும் தான் ஊர்தியாக இருக்கும் பேற்றைப் பெறுவதற்காக மயில்போலும் மலைவடிவு கொண்டு தவஞ்செய்து வரம் பெற்றான் என்ற வரலாற்றுச் சிறப்பினை உடையது மயிலம். அத்தலத்தில் திருப்புகழ்த் திருப்படித் திரு விழா, ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று இவ் வாண்டு வெள்ளி விழாவாகக் கொண்டாடப்பெறுவதும், அவ்விழா நினைவாக அறிஞர்களின் கருத்தோவியங் களைத் தொகுத்து மலர் வெளியிடுவதும் அறிய மகிழ்ச்சி.

மலர் இனிது மலர்ந்து தெய்வமணம் பரப்பவும், மலர் வெளியீட்டுப் பணியில் பங்கு கொள்ளும் மலர்க் குழுவினர்களும் அன்பர்களும் எல்லா நலனும் பெற்று நீடுவாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

சிவ சிவ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள்
அவர்கள்



ஸ்ரீகாசிமடம்
திருப்பனந்தாள்-612 504
தஞ்சை ஜில்லா

22—11—1979

ஆசியுரை

"மயிலம் திருப்புகழ் திருப்படித் திருவிழா" இவ் ஆண்டு வெள்ளி விழா ஆண்டாக மலர்வதறிந்தும் அது நினைவாக மலர் வெளியிட இருப்பதறிந்தும் மகிழ்ச்சி.

குன்றுதோறும் வீற்றிருந்த அன்பர்களின் குறை போக்கி நிறையருளும் குமரப்பெருமானின் திருநாமங்களையும், திருப்புகழினையும் ஓதியவாறு திருப்படியேறி திருவருள் பெற முயற்சிக்கும் இத்திருப்பணியானது பாராட்டுதற்குரிய புனிதப் பணியாகும். இப்பணியினை இருபத்தைந்து ஆண்டுகளாக நடத்தி இன்று வெள்ளி விழாக் காண்பதை நோக்கும்பொழுது விழாக் குழுவினரின் பக்திப் பரவசத்தையும், பணி செய்யும் பாங்கினையும் நம்மால் ஊகிக்க முடிகிறது.

வெள்ளி விழா மலர் பொன்மலராகப் பொலிந்து ஓங்கவும், விழாவில் பங்கேற்கும் அனைவருக்கும் எல்லா நன்மைகளும் பெருகவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம்

Telephone: 22793 Telegrame: "Aadheenam" Madurai

HIS HOLINESS TIRUVARUL THAVAYOGA

Sri-la-Sri Somasundara Sri Gnanasambanda Desika
Paramachariya Swamigal

MADURAI AADHEENAM

70, South Avani Moola Street MADURAI-625 001 S. India

எல்லாம் வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.

19ந் தேதி எழுதிய கடிதம் கிடைத்து, மயிலம் திருப்புகழ்த் திருப்படித் திருவிழாவும், வெள்ளி விழாவும் 26—1—80 அன்று நடைபெற இருப்பதை அறிந்து மகிழ்கிறோம்.

அவ்விழாக்கள் யாதொரு விக்கினமுமின்றி நடைபெறவும், அதில் கலந்து கொள்ளும் அன்பர்களும், விழாக்களுக்கு ஒல்லும் வகையால் உதவி செய்த பக்தர்களும் எல்லா நலங்களும் பெற்றுத் திகழவும் திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

ஞானசம்பந்ததேசிகர்

உ

ஸ்ரீசந்தரமௌளீச்வராய நம:

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம்

காஞ்சீபுரம்

27—11 - 1979

ஸர்வ மங்களையான (எல்லா மங்களங்களையும் கொடுப்பவள்) அம்பாளுக்கும், சிவ (மங்கள) பெருமானுக்கும் திருக்குமாராக ஆவிர்பவித்த முருகப்பிரான் தாரகன் முதலிய அஸுரர்களை ஸம்ஹரித்து பக்தர்களுக்கு அருள்புரிவதற்காக ஆறுபடை வீடுகளிலும், மற்றும் அனேக ஸ்தலங்களிலும் கோயிற் கொண்டிருப்பது ப்ரஸித்தமான விஷயம்.

இம்முறையில் தொண்டை நாட்டில் விளங்கும் மயிலம் என்னும் ஸ்தலத்தில் கோயிற் கொண்டிருக்கும் முருகப்பெருமனுக்கு பக்தர்கள் ஆண்டு தோறும் நடத்தி வரும் திருப்புகழ்த் திருப்படித் திருவிழாவை ஸமீபத்தில் வெள்ளி விழாவாகக் கொண்டாட முன் வந்திருப்பதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

முருகப்பெருமானின் அருள் பெற்ற அருணகிரியாரின் அருட்பாக்களான திருப்புகழ்களை பாடிக்கொண்டு படியேறி முருகனை வழிபடும் அடியார் கூட்டத்தில் ஆஸ்திகர்கள் கலந்துகொண்டு வழிபட்டு இப்பெருமானின் அருளால் எல்லாவாழ்க்கை நலன்களையும் அடைவார்களாக.

நாராயணஸ்ம்ருதி

உ

குருவே துணை

மகான் வண்ணச்சரபம் அருள்மிகு

தண்டபாணி சுவாமிகள் திருமடம்

அடிவாரம் :: பழநி

தலைவர்: தி. செ. முருகதாச சுவாமிகள்

வாழ்த்துக்கவி

தவஞானத் தோர்பலரும் சார்ந்து பணியும்
சிவஞான பாலையப்பேர்த் தேவன் – அவஞானம்
போக்கி அருள்செய் புகழ்முருகன் பொற்கோயில்
ஆக்கி அளித்ததினி தாம்.

தண்டமிழ்வண் ணச்சரபத் தண்டபா ணிப்பெரியோன்
விண்டதுதி நல்லாற்றூர் மேவுபுகழ் – கொண்ட
சிவப்பிரகாச சப்புனிதன் செப்புதுதி யேற்று
நிவப்புறுவான் வேல்முருக னே.

சிரவையிரா மானந்தத் தேசிகன்முன் வந்து
பரவுசிவப் பாலையனுர் பண்பு – விரவ
விளங்கும் புகழ்மயில வேலவன்பல் நன்மை
உளங்கொளத்தந் தாள்வான் உவந்து.

அயிலணியும் செங்கை அவிர்முருகன் மேவும்
மயிலமலைக் கோயிலிடை வந்து – பயிலடியார்
கூடிப் படிவிழாக் கொண்டாடிச் சந்தவெண்பா
பாடிப் பணிவார் பரிந்து

அப்பெருமான் அன்பார் அருண கிரிநாதர்
செப்பு திருப்புகழ் சீர்பாடி – ஒப்பும்
குடியரசு நாளில் குலவன்பர் செவ்வேள்
அடிபரவிக் கொள்வார் அருள்

பாலயோ கித்திருப்பேர் பற்றவரும் ராமதாஸ்
ஞாலமுளார் போற்றவரும் நற்பணிகள் – சீலமுற
முன்னின்று செய்ய முயங்கிருபத் தைந்தாண்டு
துன்னியதின் நாளிற் தொடர்ந்து.

வெள்ளிவிழா வாக விளங்குமிந்த நன்னுளில்
தெள்ளியநற் பாவாணர் சிந்தனையன் – உள்ளுவப்பார்
கட்டுரைகள் சேர்ந்து கவினும் மலரில் மணம்
சொட்டுமின்பத் தேனின் சுவை,

பதினெட்டோ(டு) ஒன்றிவரும் பட்டத் தவிர்ந்தே
அதிநட்பார் பாலையனுர் ஆசி – முதற்கொள்ள
பண்பார் மயிலப் படித்திருவி ழாமேலும்
விண்பார் சொல்வளர்க வே.

RAJ BHAVAN
MADRAS-600 022
7—12—1979

MESSAGE

I am glad to know that the Thiruppugazh Tiruppadi Festival will be held at Mailam on 26—1—80.

The people of Tamil Nadu offer worship to Lord Muruga at several temples dedicated to Him. The hymns of saints and poets, sung in praise of Lord Muruga, form an integral part of Tamil literature. The Thiruppugazh of Saint Arunagirinathar is so popular and powerful that festivals like this are organised.

I pray that the Lord may grant every happiness and prosperity to the people of India.

Prabhudas B. Patwari
Governor of Tamilnadu

பதிப்புரை

தமிழ்க் கடவுள் முருகன். இவன் வழிபாடு மனித நாகரீகம் தொடங்கிய நாள்களிலிருந்து உண்டு. மலைபோல் நிலையாக இருந்து மாளாத் துயருறும் மக்கள் வேண்டுவதை மறுக்காமல் அளிப்பவன் மால் மருகன். இவன் எழுந்தருளிய கோயில்களில் வழிபடுவதும், இக்கோயில்களைக் காப்பதும் தமிழர் தம் கடனாகக் கொண்டிருக் கின்றனர்.

"சேயோன் மேய மைவரை உலகமும்" என்று முருகனைக் குறிப்பிட்ட தொல்காப்பியர்.

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாது ஆதல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே"

என்றும் குறிப்பிடுவதால், தமிழர்கள் குடும்பம் நடத்தப் பொருள் தேடுவதற்கு மனைவியைப் பிரிந்து செல்வதோடு, தெய்வப்படிமம் உள்ள கோயில்களைக் காக்கவும் புதுப்பிக்கவும் பொருள் தேடுவ தற்குப் பிரிந்து செல்வது உண்டு என்பதையும் அறிகிறோம்.

இன்று தமிழகத்தில் கவனிப்பாரற்று பல கோயில்களின் மேல் பெரிய மரங்கள், செடிகொடிகள் அடர்ந்த-நாகம் முதலியன சஞ்சரிக்கும் நந்தவனங்களைக் காண முடிகிறது. அந்தோ பரிதாபம்! சில கோயில்களில் பல இலட்சம் மக்கள் கூடி வழிபடுவதையும் பார்க்க முடிகிறது. இவ்வாறு அழகிய கோயிலைக் கண்டுகளிக்கும் முருகன் தலங்களுள் ஒன்று திருமயிலம்.

இங்கு இருபத்துநான்கு ஆண்டுகட்கு முன் அறுபத்து ஆறு அடியார்களுடன் அறிவானந்த சுவாமிகள் தேங்காய் உடைத்து தீபாராதனை செய்து திருப்படி ஏறிய வேளை, மங்கல வேளையாக அமைந்ததால், மேலமங்கலம் தவத்தரு. பாலயோகி சுவாமி ராமதாஸ் அவர்களின் பெருங்கருணை முயற்சித் திறத்தாலும், திருப்படி விழாக் குழுவினரின் இடைவிடாத் தொண்டுச் சிறப்பாலும் ஒற்றுமையாலும், பலவூர் அன்பர்களின் பேராதரவாலும் 25-ஆம் ஆண்டு வெள்ளி விழாவாக இப்போது கொண்டாடப் பெறுகிறது.

இக்குழுவில் இல்லறத்தார், துறவறத்தார், இசை ஞானிகள் இயற்பாவலர், புலவர்கள், கூத்துக்கலைஞர்கள், மகளிர், சிறுவர், சிறுமியர், பொறியாளர்கள், வணிகர்கள், வேளாளர்கள் முதல்

யாவரும் அன்று முதல் இன்றுவரை ஒருடல் உறுப்புகள் போல் ஒன்று பட்டு பணியாற்றி வருவது ஒரு தனிச் சிறப்பாகும். இதுவே முருகன் பேரருள் திறத்திற்குச் சான்று.

ஈன்றதாய்போல் இனிமையுடன் வரவேற்று உபசரிக்கும் பொம்மபுர ஆதினத் தலைவர் அவர்களின் பேருக்கம் மணிமுடியாக அமைந்துள்ளது.

இவ்வெள்ளிவிழாவின் ஒப்பற்ற சின்னமாக விளங்குவது மயிலம் மலையின் முகப்பில் "வெள்ளிவிழா நினைவுக் கருங்கல் மண்டபமாகும். இது தங்கத் தாம்பாளத்தில் வைரக்கல் பதித்தது போன்றதாகும்.

சைவ சமய குரவர் நால்வர், அருணகிரியார் ஆழ்வார்கள் முதலிய அருளாளர்களின் சொல்லாலயத்தால்தான் கல்லாலயத்திற்குப் பெருமை யென்பது உண்மை இதனை நினைவு கூர்ந்து விழாக் குழுவினர் அக்கால அருளாளர்களின் பாடல்களோடு, இக்காலச் சான்றோர்களின் வாக்குகளையும் கொண்டு, நக்கீரர் வாக்கான,

"பெரும் பெயர் முருகன்"

என்ற தலைப்பில் வெள்ளிவிழா மலர் வெளியிடுகிறார்கள் இது வள்ளி மணாளருக்குச் சாத்தும் மாலையில் நாயக மணிபோல் அமைந்துள்ளது.

இதில் ஆதீனகர்த்தர்களின் ஆசியுரை இதழ்கள், கவிஞர்களின் கவியிதழ்கள், புலவர், பெருமக்களின் கருத்துமிகு கட்டுரையிதழ்கள், அருளாளர்களின் தேவாரம், திருப்புகழ், நாமாவளி, பஜனைப்பா இதழ்கள், வணிகப் பெருமக்களின் விளம்பர இதழ்கள் முதலிய யாவும் சிதம்பரம் வேலன் அச்சகத்தார் கைவண்ணத்தால் தெய்வ மலராகி அருள்மணங்கமழ்கிறது.

குறித்த நாட் கடந்து வந்தமையால் சிலரது பகுதிகள் சேர்க்க இயலவில்லை. மிக நீண்ட பகுதியாக இருந்தனவும் தாள் விலை மிகுதியால் சேர்க்க இயலவில்லை. பொறுத்தருள்க.

கருத்துரை வழங்கிய சான்றோர்கள் அனைவருக்கும் கந்தன் பெருவாழ்வருள வேண்டி வாழ்த்தி நன்றி கூறுகின்றோம். விளம்பரப் பகுதி தந்து விழா மலருக்குப் பொருள் உதவிய பெரியோர்கட்கு வள்ளி மணாளன் அருளையும் பொருளையும் வழங்க வேண்டி வாழ்த்துகிறோம். வானோரும் போற்றும் முருகன் புகழுரைகளை ஏனோரும் படித்து இன்புற வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

மலர்க் குழுவினர்

வடிவேலன் அருள்பெற வாரீர்!

கவிஞர். கண்ணப்பன்
கண்டாச்சிபுரம்

அன்பரெலாம் வாருங்கள் மயிலம் நாடி
ஆறுமுகன் திருக்கோயில் படிமீ தேறி
துன்பமெலாம் பறந்தோடும், இன்பம் சேரும்.
தூயதிருப் புகழ்பாட, ஞானம் கூடும்.
தென்புவரும், தெளிவுவரும், செல்வம் சேரும்;
திருவருளும் குருவருளும் சிறந்து கூடும்.
என்புருகும் இசைபெருகும்; பஜனை கோஷ்டி
எழில்பெருகும்; காட்சியினைக் காண வாரீர்!

வெள்ளிவிழா இவ்வாண்டு; மகளிர் தங்கள்
வீதியிலே எழிற்கோல விளக்கம் செய்வார்.
புள்ளிமயில் மீதேறி முருகன் தோன்றும்
பொற்பான நற்காட்சி காண வாரீர்!
வள்ளலவர் மண்டபமும் வாய்க்கப் பெற்றோம்.
வசதியுடன் மேலுமதை விரிவு செய்வோம்.
உள்ளமெலாம் 'ஆன்மீக ஒருமை' தன்னில்
ஒன்றிடவே நின்றிடலாம். வாரீர்! வாரீர்!!

குடியரசு தினத்தன்று, வழக்க மாகக்
கூடிவரும் பக்தர்களே! மயிலை நாதன்
முடியழகும் அடியழகும் முழுதும் காண்போம்.
மூலவரும் பழவினையின் முடிவும் காண்போம்.
படிமிசையில் ஞானிகளின் பாதம் பாவும்
பாங்கதனை நாம் வணங்கி, மேலே செல்வோம்.
வடிவழகன் திருக்கோயில் காட்சி காண்போம்.
வடிவேலன் அருள்பெறுவோம் வாரீர்! வாரீர்!!

உ

குருவே துணை

மயிலம் திருப்படி

வெள்ளி விழா வாழ்த்துப்பா

கௌமார மடாலயம் திருவாமத்தூர்

சீரார் மயிலமலைச் செவ்வேள் திருப்புகழைப்
பாரா யணம்செய்து பத்தியுடன் – ஆராதிக்
கின்றவர்கட் கெப்பயணம் கிட்டுமென ஆன்றோர்கள்
துன்றவுரைத் திட்டார் துணிந்து.

ஞால மிசைவீர சைவமும்நற் செந்தமிழும்
சீலமுடன் வாழச் சிவஞான – பாலயனர்
மாமலையில் மிக்க மயிலத்தில் மேவியருட்
சேமமுடன் உற்றார் திகழ்ந்து.

குடியரசு நாளிலன்பர் கூடித் தொடர்ந்து
படியேறிப் பாடிப் பரவிச் – செடியாய
வல்வினைகள் தீர்வர்; வடிவேலன் நல்லருளால்
பல்வளமும் கொள்பவர் பரிந்து.

இருபத்தைந் தாண்டுநிறை வெய்துமிந்த ஆண்டில்
குருபத்தி கொண்டஅன்பர் கூட்டம் – ஒருமித்து
வெள்ளிவிழாச் செய்தின்பம் மேவுதல்போற் பல்லாண்டு
நள்ளுவப்பாய் வாழ்க நயந்து.

பதினெட்டாம் பட்டத்து பாலயனர் நாளில்
அதிநட்பி னூற்றொடங்கி ஆன்ற – பதினென்பான்
பட்டத்துப் பாலயப் பண்ணவர்முன் இந்நாளில்
இட்டத்தாம் வெள்ளிவிழா வே.

அன்பு மலிராம தாசர் அருள்தலைமை
முன்பமர அன்பரினம் முன்னின்றே – இன்பமுடன்
வெள்ளிவிழாச் செய்தார் மிளிர்பல் விழாக்கொள்க
வள்ளிமண வாளனருள் வாய்ந்து.

குயிலனைய வள்ளிக் குறமின் மருவும்
மயில மலைவள்ளல் வாழ்க – பயிலும்
படிவிழாச் செய்துவக்கும் பண்பாளர் எல்லாம்
நெடிதுநாள் வாழ்க நிலத்து.

புலவர் தி. மு. சங்கரலிங்கம்

உ

குருவே துணை

கௌமார மடாலயத் தலைவர், கொங்குத் தங்கம், வித்துவான்

சுந்திர சுவாமிகள் வழங்கிய

மயிலம் திருப்படி விழா வெள்ளி விழா வாழ்த்து

கொச்சகக்கலிப்பா

பற்றுபுகழ் மயிலமலை பாலையப்பேர் மாமுனிவர்
நற்றவத்துக் கிரங்கியருள் ஞானபண்டி தப்பெருமான்
கொற்றவடி வேலேந்திக் குஞ்சரித்தாய் வள்ளியுடன்
உற்றருளும் தலப்பெருமை உணரார்யார் உலகினிலே.

மயிலமலைத் தலத்தினிடை வள்ளிதெய்வ யானையுடன்
அயிலணியும் பெருமான்தன் அருள்வேண்டிக் குடியரசு
பயில்நாளில் ஆண்டுதொறும் படிவிழா நன்முறையில்
செயுமியல்பில் வெள்ளிவிழா சேர்ந்தமைந்த(து) இவ்வாண்டே.

சாலநலம் தரும்மயிலத் தக்கதிருப் படிவிழா
மலமங்க லத்தமரும் மேன்மைமிகு ராமதாஸ்
சீலமிகு சுவாமிகள்தம் திருத்தலைமை யேற்றருளக்
கோலஇரு பத்தைந்து குலவாண்டு பெற்றதுவே.

வெள்ளிவிழா வாக்கொண்டு விளங்குதிருப் படிவிழா
உள்ளுணர்வாய்ச் செய்கின்ற உண்மைமிகு அன்பரெலாம்
வள்ளிதெய்வ யானைமண வாளமுரு கோனருளால்
தெள்ளுநலம் பெற்றுலகில் சிறப்பாக வாழியவே!

பாலயப்பேர் முனிமரபு பாங்குடனே வாழிஉயர்
சீலமுடன் செய்யன்பர், திருப்பசனைக் குழுவினர்கள்,
ஞாலமுய்ய படிவிழா நடத்துகின்றோர், மயிலமலை
வேலனரு ளால்எல்லா மேன்மையுடன் வாழியவே.

உ

சிவமயம்

வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம்

தொலைபேசி எண்: 26479
பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர்-641 010

28—11—1979

காண்போர் வாழி

செந்தமிழ் வளமும் சைவத் திருநெறி நலமும் ஓங்க
வந்தருள் பாலசித்தர் வரம்பெறும் மயில வெற்பில்
நந்தமக் கருளும் தெய்வம் நலிவெலாம் போக்கி ஞானக்
கந்தனுய் இருபால் தாயார் கவினுறும் காட்சியாகும்

அடியவர் கூட்டம் சென்று அணியணி யாகப் போற்றி
மிடியெலாம் போக்கும் எந்தம் வேலவா என்று நிற்பர்
பொடியணி தொண்டர் பாடிப் புகழ்தமிழ் பரவி வாழ்த்த
படிவிழாச் செய்தே அன்பர் பயன்பெறு கின்றூர் வாழி

சொற்றமிழ் வளர்த்துத் தொன்மை வளம்பெறும் வீரசைவப்
பெற்றியை தோங்கச் செய்யும் சிவஞானி பெரிதும் போற்றி
நற்றவம் செய்யும் ஞானத் தலமதாம் மயிலந் தன்னில்
கற்றவர் புகழச் செய்யும் படிவிழாக் காண்போர் வாழி.

தசகாரியம்

1	தத்துவரூபம்	6	ஆன்ம சுத்தி
2	தத்துவ தரிசனம்	7	சிவரூபம்
3	தத்துவசுத்தி	8	சிவதரிசனம்
4	ஆன்மரூபம்	9	சிவயோகம்
5	ஆன்மதரிசனம்	10	சிவபோகம்

ஞானகுருதேசிகனே!

உன்னை நினைந்து என்னை மறந்து உள்ளுருகும் ஆசை தந்து ஆண்டருள்.

உ

ஸ்ரீவைஷ்ணவி துணை

நல்வாழ்த்து

அருட்கவி தவத்திரு ஸாதுராம் ஸ்வாமிகள்


சென்னை

எழுசீரடி ஆசிரிய விருத்தம்

குன்றுதோ றுடும் குமரவேள் மயிலம்
குன்றின்மேல் நின்றிருக் கின்றுன்
மன்றுதோ றுடி மைந்தனும் குருவும்
வடிவுமாம் அவனேயே வாழ்த்தா
நின்றுதோ ராது திருப்படி விழாவை
நிகழ்த்தினர் இருபத்தைந் தாண்டாய்
சென்றுதோ லாத செலவினுல் மயிலம்
திருப்படித் திருவிழாக் குழுவோர்


அக்குழுத் தலைமைப் பாலயோ கியெனும்
அடிகளார் ராமதாஸ் ஸ்வாமி
மிக்குழைப் பதனுல் நினைவுமண் டபமும்
வெள்ளிநல் விழாநினை வாக
அக்குலத் தலத்தில் எழுந்ததோ டன்றி
அரியதோர் சிறப்புமா மலரும்
கைக்குளே மலரக் கண்டுநாம் கொண்டு
கருத்தமு துண்டுமொண் டெவர்க்கும்

வழங்கவும் வாய்த்த வாய்ப்புதான் என்னே!
மலர்க்குழு, விழாக்குழுச் செயலர்
புழங்குபேர் கொள்திருக் காமுப்பில் ஊயென்பார்
புலவர்கள் பொன்னப்பிள் ஊயொடும்
முழங்குமுத் தமிழ்ச்சீர்ச் சங்கர லிங்கம்,
மொழிபழ. முத்தப்பன் முக்கட்
பழங்குடி கொள்சிதம் பரம்சுந்த ரேசன்
பதிப்பிக்க மலர்ந்த திம்மலரே!



படிவிழாச் சிறக்க உதவும்

சாதுராம் சுவாமிகள்




அமரர் S. ஆறுமுகம் பிள்ளை


நிர்வாகக் குழு



P. V. அருணாசலம் செட்டியார்
(அமரர்)




து. சி. கோவிந்தசாமி செட்டியார்
(அமரர்)



V. சுந்தரமய்யர்




P. V. ராஜகோபால், B.A., B.E.




A. பாலசுப்ரமணிய பக்தர்
தலைவர்



A. இராதாகிருஷ்ண செட்டியார்
துணைத்தலைவர்



T. M. திருக்காமுப்பிள்ளை
செயலர்



M. இரத்தினசபாபதி பிள்ளை
துணைச்செயலர்



A. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை
பொருளாளர்



G. ஜெயராமப் பிள்ளை
துணைப்பொருளாளர்



N. குமாரசாமிப் பிள்ளை
திருத்தொண்டர்



V. முத்துசாமிப் பிள்ளை
திருத்தொண்டர்




K. P. முத்துவிஜய ரெட்டியார்
திருத்தொண்டர்



T. G. கணேசன்
திருத்தொண்டர்


மலர்க்குழு



பழ. முத்தப்பன் M.A.



தி. பொன்னப்பிள்ளை
B.A., B.Ed.



புலவர்
வா. ச. சுந்தரேசம்
பிள்ளை




புலவர் ச. தமிழரசன்



புலவர் த. மு, சங்கரலிங்கம்

செயற்குழு - I



செயற்குழு - II






பலவூரின் பஜனைக் குழுவினில் சிறந்து படியேறிப் புகழ்பாடும் பாங்கினைப் பாரீர்!
(விழுப்புரம் திருப்புகழ் சபை)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



வெள்ளி விழாவிற்குத் தில்லைத் திருமுறைக் கழகத்தார்

வாழ்த்து

உலகமகிழ் தருசைவ நீதி ஓங்க
உமைபாகன் அருள்நெறியே உயிர்கள் தாங்க
அலகில்புகழ் அப்பர்முதல் இருபத்தேழு
அரனருள்பெற் றடியவர்கள் அருளிச்செய்த
இலகுநான் மறைவிளக்கம் பன்னிரண்டு
இனியதிரு முறைப்பாக்கள் எளிதில் கொள்வோர்
கலகமனந் தவிர்ந்துலகக் களிப்புந் துய்த்துக்
கதிகாண்பர் நிதிகாண்பர் பதியும் ஆள்வர்.

கதிர்அழலால் பஞ்சியினைப் பற்றவைக்கக்
கையில்காந் தத்தாடி ஒன்றுவேண்டும்
முதிர்அரனின் அருள்பெறற்கு முந்தைநோன்பால்
முழுமுதல்வன் அருள்பெற்ற அடியார்வேண்டும்
சதுர்மறையின் சாரமிது தெளியவேண்டிச்
சங்கரனுர் அளித்தவழி வழியடியார்
இதுவரையில் பலநூறு அடியாருள்ளும்
இன்பருண கிரிநாதர் என்பார்தாமே.

காட்சிக்கும் கருணைக்கும் கடையவர்க்கும்
காமவலை வீழ்ந்தோர்க்கும் ஆணவர்க்கும்
வீட்சிக்கே வழிகாட்டும் வீணருக்கும்
விரைந்தருளும் ஒருதலைவன் முருகன்அன்றோ ?
சாட்சிக்கு நாயகமாய் சிகரம்வீழ்ந்த
சங்கீத அருணகிரி உடலைத்தாங்கி
மாட்சிக்குத் தமிழுக்குச் சந்தப்பாக்கள்
மடைதிறந்த தேனூற்றில் மயங்காதார்யார் ?

மாணிக்க மணியில்வரும் ஒளிபோல் ஈசன்
மாற்றுருவில் முருகனுய் மதியிலோர்க்கும்
ஆணிப்பொன் சுரந்தவரின் அடிமையேற்று
அனைவருக்கும் அருள்வாழ்க்கை அமைத்துக்காட்டும்
வேணிப்பெருமானே வேலா சீலா
வேட்டுவச்சி யையமணந்த வீராதீரா
தாணுமயி லம்அமர்ந்த தாதாவேதா
தரணிக்குள் நீஎமக்கும் தலைவனன்ரே ?

திங்களொடு ராசியும் பனிரெண் டெண்ணே
திருமுருகன் கரங்களும் பனிரெண் டெண்ணே
கங்காளன் திருமுறைகள் பனிரெண் டெண்ணே
கருணைவிழி புறத்தார்க்குப் பனிரெண் டெண்ணே
சங்கீரண ஐம்பைக்குப் பனிரெண் டெண்ணே
சரவணு உன்னடியார் பனிரெண் டெண்ணே
இங்கார்வப் படிவிழா இருமடங்கெண்
இயற்றிய அடியவர்கட் கீடுஏது ?

மாங்குயிலும் பைங்கிளியும் மறைகள் பேசும்
மயிலமலைப் படிவிழா நடத்து கின்ருேர்
தேங்கமழும் தெய்வப்பா உணர்ந்த நல்லார்
தேயமெலாம் வாழவரம் கேட்கும் வல்லார்
தாங்கும்அருள் நெஞ்சுடையார் தவத்தோர் யோகர்
தமிழுக்கே தமையளிக்கும் தகுதியாளர்
ஓங்குபுகழ் நிலவளத்தார் வணிகத்தார்கள்
ஒன்றுமிலார் யாவருமே ஒருமை மிக்கார்

புனல்வழியே புல்சாயும் புவியில் உண்மை
புரிந்தவர்கள் பாலயோகி சுவாமி உள்ளம்
தனில்உறைந்து உத்தமத்தில் தக்க செய்து
தண்கருணைக் குன்றேறி நின்று ஆண்டு
பனிரெண்டு ரெண்டுமுடித் திந்த வாண்டு
பலர்புகழ வெள்ளிவிழா நடத்துகின்ருர்
பனிகயிலைப் பதிபயந்த பரமன் வேலன்
பக்கமிரு கன்னியரால் வாழ்க! வாழ்க!

தலைவர்
S. திருநாவுக்கரசுபிள்ளை B.A.

செயலர்
வித்துவான் V. S. சுந்தரேசம்பிள்ளை

கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகன்னாதன் M.A.

மயிலாசலத்தில் வெள்ளி விழா

இத்தலத்தில் பலஅன்பர் தாம்விழையப் படிவிழா
இன்பின் ஓங்கச்
சித்தசுத்தி பெரும்பால யோகியெனும் ராமதாஸ்
திருவுள்ளங் கொண்(டு)
எத்தலத்தும் வாழ்புலவர் பலர்புகழும் படிசெய்தார்
இனிதே போற்றும்
மெத்துபஜ னைஅன்ன தானமெலாம் நிகழ்த்துகிறார்
விருப்பி னோடே;

படிவாழும் உயிரெல்லாம் நலமுற்று நனிவாழும்
படியே செய்யப்
படியேறி முருகனடி பரவியன்பு தனைச்செய்யும்
படியே காட்டப்
படியேறும் விழாவதனைச் செய்பவர்கள் உயர்வுமிகும்
படியே இந்தப்
படியேறும் வெள்ளிவிழாப் பயனெல்லாம் துய்த்துயிர்கள்
பாரில் வாழி !

பஞ்சாக்கரப் பஃறொடை வெண்பா

இறைவன் திருவைந்தெழுத்தை உபதேசித்து, அநுபவநிலை கூடச்செய்த அநுபவத்தை உரைக்கும் சிவநூல் 84 அடிகளையுடையது. பேரூர் வேலப்ப தேசிகர் அருளியது.

இழிவு எது ? உயர்வு எது ?

ஈயென இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று,
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று

கந்தபுராணக் கதைச் சுருக்கம் அல்லது சூரசம்ஹாரக் கதை

S. கார்த்திகேயன்
தில்லைப்புலியூர்

முகவுரை

மெய்யன்பர்களே ! தாய்க்குலத்தோரே ! நண்பர்களே ! குழந்தைகளே ! உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

ஆலயம் செல்லவேண்டும், அதைத் தூய்மைப் படுத்த வேண்டும். புராணம் சொல்லவேண்டும். அதைச் சொல்ல வைக்கவும் வேண்டும். புராணம் கேட்கவேண்டும். குருவைக் காணவேண்டும். இவைகள் எல்லாம் சிவ புண்ணியச்செயல்கள். இவற்றில் புராணம் கேட்பது செலவு இல்லாத எளிய செயல் அல்லவா ?

வேதப் பொருள்களைப் பூதக் கண்ணாடி போல் விரிவாக விளக்குவது புராணம். இது பதினெட்டு வகை. ஒவ்வொன்றும் தரும முறைகளை – வாழும் வழிகளை – பாபநீக்கங்களை – பக்தி நெறிகளை – கடவுள் அருட் செயல்களை நம் கண்முன் அழகாக விளக்குகின்றன.

நம் புராணங்கள் 18ல் பத்து சிவ சம்பந்தமான புராணங்கள். மற்றவை பிரம்மா, விஷ்ணு, சூரியன், அக்கினி சம்பந்தப்பட்டவை. மொத்தப் பாடல்கள் 4 இலட்சம், 17 புராணம் 3 லட்சம் பாடல்கள். 1 இலட்சம் பாடல், நம் கந்த புராணப் பாடல்கள்.

இவற்றை 6 காண்டமாக்கியுள்ளனர். இதை 6 நாள் சொல்லவேண்டும். நான் சில மணித்துளிகளில் சுருக்கித்தான் சொல்லப்போகிறேன்.

திரைப்பட டிக்கட்டிற்கும், க்ஷவரம் செய்து கொள்வதற்கும் நாம் எவ்வளவு நேரம் காத்திருக்கிறோம் ?

தீமை நீங்கி நன்மை ஓங்கி வாழ வைப்பது கந்தபுராணம் ஆதலால் இதைக்கேட்டு, இகபர சௌபாக்கியங்களை அடைய வேண்டுகிறேன்.

பிறையணி சடைமுடிப் பிரான்தன் காதைகள்
இறையும்ஓர் மறுவில யாவும் மேன்மையே
மறைபல சான்றுள வாய்மையே அவை
அறிஞர்கள் நாடியே அவற்றைக் காண்கவே.

கந்தபுராணம்

கந்தபுராணம்

சுருக்கம்

விநாயகர்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சச்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் பேற்றுவாம்.

முருகர்

மூவிரு முகங்கள்போற்றி முகம்மொழி கருணைபோற்றி
ஏவரும் துதிக்கநின்ற இராறுதோள் போற்றிகாஞ்சி
மாவடி வைகும்செவ்வேள் மலரடி போற்றிஅன்னுன்
சேவலும் மயிலும்போற்றி திருக்கைவேல் போற்றிபோற்றி!

திருக்கயிலாயமலையில் உமாதேவி பரம சிவனைப் பார்த்து "சுவாமி! தங்களை இகழ்ந்த தச்சன் வளர்த்த என் உடலையும், அவன் வைத்த தாட்சாயணி என்ற பேரையும் நீக்கித் தங்களுடன் இணைந்து வாழ அருள்புரிக" என்று வேண்டினாள்.

"குழந்தை வரம் வேண்டி தவம் செய்யும் பருவத மன்னனுக்கு நீ குழந்தையாகுக" என்ற கடவுள் கட்டளைப்படி உமாதேவியார் பார்வதி என்ற பெயருடன் வளர்ந்து சிவனை மணந்து கொள்ள ஐந்து வயது முதல் தவம் புரிந்து வருகிறார்.

இது இவ்வாறு இருக்க பெருந்தவம் புரிந்து சிவபெருமானிடம் 1008 அண்டங்களும், 108 யுக ஆயுளும், நினைத்த அளவில் எங்கும் செல்லும் இந்திர ஞாலத் தேரும், சிங்க வாகனமும், அழியாத உடலும், பதினாயிர கோடி வெள்ள சேனைகளும் வரமாகப் பெற்ற சூரபன்மன் முப்பத்து முக்கோடி தேவர்களையும் துன்பப்படுத்தி, சிறைப்படுத்தி ஆண்டு கொண்டு வருகிறான்.

அப்போது பிரமன் புதல்வர்களாகிய சனகர் முதலிய நால்வரும் கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள சிவபெருமானிடம் ஞான உபதேசம் கேட்க, அவர் சின்முத்திரை காட்டி ஞான விளக்கம் செய்து மௌனமாகக் காட்சித் தருகிறார்.

மன்மதனைத் தவிர மற்றவரை விட வேண்டாம் என்ற சிவன் கட்டளைப்படி காவல் காத்தார் நந்தி தேவர்.

பிர்மா விஷ்ணு தேவர்களால் அனுப்பிய மன்மதன் சிவன் தவத்தைக் கலைக்க வந்தான். நெற்றிக் கண்ணால் சுட்டு அவனை நீறாக்கினார். இரதி புலம்பினாள் பார்வதியை மணம் முடிக்கும்போது உன் கணவனை எழுப்பித் தருகிறேன் என்றார் சிவன்.

இந்த சந்தர்ப்பத்தில் பிர்மாதி தேவர்கள் சூரபன்மன் கொடுமைகளை

எடுத்துக்கூறி அவனை அழிக்கும்படி சிவ பெருமானை வேண்டினார்கள்.

"உமையை மணந்து ஒரு குமாரனைத் தருவோம். அக் குமார மூர்த்தியால் சூர சம்ஹாரம் நிகழும். அஞ்சாதீர்கள்" செல்லுங்கள் என்றார்.

சிவன் கிழ வேதியரானார். தவம் செய்யும் பார்வதியிடம் சென்றார். தவ உறுதியை உலகோருக்கு உணர்த்தினார். ஏழு முனிவர்களை இமவானிடம் அனுப்பி மணம் பேசச் செய்தார். பங்குனி உத்திரத்தன்று பார்வதியை மணம் முடித்தார். மன்மதனையும் எழுப்பிக் கொடுத்தார்.

தேவர்கள் கயிலைமலைக்குவந்து "குமார மூர்த்தியைத் தாருங்கள்" என்று வேண்டினார்கள். சிவபெருமான் ஐந்து முகத்தோடு கீழ் நோக்கிய அதோ முகமான ஆறுவது முகமும் கொண்டார். ஆறு முகங்களிலும் ஆறு அருட்சுடர்கள் தோன்றின. வெப்பம் தாங்காமல் தேவர்கள் வெருண்டு, மருண்டு விலகி ஓடினர்.

மீண்டும் தூரம் வந்து நின்று கொண்டு தஞ்சம்! தஞ்சம்! என்று வேண்டினர்.

சிவபிரான் அஞ்சேல்! அஞ்சேல் என்று அபயம் கொடுத்தார். ஆறு பொறிகளையும் சுருக்கி வாயுவிடம் கொடுத்தார். அவன் தாங்க முடியாமல் அக்கினியிடம் கொடுத்தான். அவனும் தாங்க முடியாமல் கங்கையில் விட்டான். கங்கை சரவணப் பொய்கையில் விட்டாள்.

அங்கு ஆறு தீப்பொறிகளும் ஆறு தாமரை மலரில் பன்னிரண்டு தோள்களும், பதினெட்டு கண்களுமாகி விளங்க உலகம் உய்ய முருகப்பெருமான் அவதரித் தருளினார்.

கார்த்திகைப் பெண்கள் ஆறுபேர் எடுத்து அன்பாக வளர்த்தார்கள். அம்பிகை பாதச் சிலம்பில் நவசக்திகள் தோன்றினார்கள். சிவனது பார்வையால் வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரன் முதலிய நவவீரர்களாக நவசக்திகளும் மாறினார்கள். வேர்வைத் துளியிலிருந்து ஒரு லட்சம் வீரர்கள் தோன்றினார்கள். இந்த ஒரு லட்சத்து ஒன்பது பேரும் முருகனுக்குத் தம்பிகளாக ஆனார்கள்.

சிவபெருமானும் பார்வதியும் சரவணப் பொய்கைக்குச் சென்றார்கள். குமாரனை அம்பிகை எடுத்து அணைத்தாள். ஆறு குழந்தைகளும் ஒன்றாக இணைந்தது. கந்தனான முருகனுக்கு அம்பிகை சிவ ஞானப்பாலைத் தந்தாள். உடனே

"அருவமும் உருவு மாகி
அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்ப தோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலகம் உய்ய"

நாரதர் யாகத்தில் தோன்றிய ஆட்டுக் கடாவை வீரவாகு தேவரால் அடக்கச் செய்து முருகன் ஆட்டுக்கடா வாகனத்தில் காட்சி கொடுத்தார்.

மெய்யன்பர்களே!

ஐமுகச்சிவனே அறுமுகப் பரனாக வந்த முருகன், காங்கேயனாகவும், சரவணனாகவும், கார்த்திகை பாலனாகவும், கந்தனாகவும், பெயர் பெற்று கயிலை மலையின் ஒரு பகுதியாகிய கந்த வெற்பில் வீற்றிருக்கிறார். பிரமதேவன் சிவனைக் காண செருக்குடன் வந்தான். அவனை அழைத்து "ஓம்" என்ற எழுத்திற்குப் பொருள்யாது எனக்கேட்க விடை தெரியாமல் விழித்தான். பிறகு 'நானே' தான் என்றான் அவன். முருகன் அவன்

தலையில் குட்டி திருவடியால் உதைத்து சிறையில் தள்ளினுர். முருகனே முத் தொழிலேயும் செய்து காட்டினுர். சிவனுல் பிரமன் விடுதலே பெற்ருன். சிவன் முருகனைக் கேட்க தந்தைக்குப் பிரண வத்தை முருகன் உபதேசித்து தகப்பன் சுவாமியாகவும் சுவாமிநாதனுகவும் பளங்கினுர். இவரோ விலசுப்பிரமணியர்.

திருமாலின் கண்களில் இருந்து தோன்றிய அமிர்தவல்லி சுந்தரவல்லி என்ற பெண்கள் முருகனை மணக்க சரவணப் பொய்கையில் தவமிருந்தனர். அமிர்தவல்லியை தேவலோகத்திலும் சுந்தரவல்லியை பூலோகத்திலும் பிறக் கும்படிக் கட்டளையிட்டார். சூரசம் ஹாரம் முடித்து உங்களை திருமணம் புரிந்து கொள்கிறேன் என்ருர்.

தேவர்கள் சிவனிடம் சூரபன்மன் கொடுமைகளைக் கூறி விடுதலை வேண்டி னுர்கள். பதினேரு உருத்திரர்களை பதினேரு ஆயுதமாக்கி ஞானசக்தியை வேலாயுதமாக்கி சிவன் முருகனிடம் தந்தார். இலட்சத்து ஒன்பது வீரருட னும் இரண்டாயிரம் பூதசேனையுடனும் நீ திருச்செந்தூர் சென்று சூரனுதி அரக்கர்களைக் கொன்று வா என்று போருக்கு அனுப்பினுர்.

வாயு, மனேவேகமாகத் தேரைச் செலுத்தினுன். சூரபன்மனின் சகோதர னுகிய தாரகன் மாயமாபுரத்தை அரசு புரிந்தான். கிரவுஞ்சன் என்ற அசுரன் மலைவடிவாக இருந்து தாரகனுக்கு உதவி புரிந்தான். வழியில் இவன் செய்த கொடுமையை அழிக்க எண்ணி வீரவாகு முதலிய வீரர்களைப் போர்புரியச் சொன்னுர். தாரகன் முருகன் சேனைகளை மயக்கிக் கொன்று விட்டான். முருகன் உடனே தன் வேலாயுதத்தால் மலையைப் பிளந்து, தாரகனையும் அழித்து, மயங்கிய தமது வீரவாகு முதலிய வீரர்களைப் பிழைப்பித்தார்.

இந்தக்கதையை தாரகன் மகன் அசுரேந்திரன் என்போன் தன் பெரியப்பா வாகிய சூரபதுமனுக்குச் சொன்னுன்.

முருகன் புறப்பட்டுக் காளத்தி, திருவண்ணுமலை, விருத்தாசலம், சிதம் பரம் முதலியவற்றைத் தரிசித்தார். சேய்ஞ்ஞலூரில் தங்கினுர். சிவபூசை செய்தார். திருச்செந்தூர் வந்து சேர்ந் தார்.

திருச்செந்தூரில் வியாழபகவானை நோக்கி சூரபதுமன் முதலியவர்களது வரலாற்றைக் கூறும்படிக் கேட்டார். மகன் தந்தைக்குச் சொல்வதுபோல் வியாழபகவான் சூரபதுமன் முதலியவர் களது வீர வரலாற்றை முருகனுக்குச் சொல்கிருன்.
(சூரபதுமன் கதையைக் கவனமாகக் கேளுங்கள்)

அசுரர்கள் 66 கோடிபேர். இவர்களுக் குத் தலைவன் அசுரேந்திரன். இவன் மனைவி மங்கலகேசி. இவர்களுக்கு ''சுரசை'' என்பவள் பிறந்தாள். இவள் சுக்கிர பகவானுல் மாய வித்தைகளைக் கற்ருள். இதனுல் இவள் மாயை என்ற பேர் பெற்ருள். இம்மாயை காசிபருடன் கூடி சூரபதுமன், சிங்கமுகன், தாரகன் என்ற மூன்று பிள்ளைகளையும், அசமுகி என்ற பெண்ணையும் பெற்ருள். மாயை யின் வியர்வையில் 200 ஆயிரம் அசுரர் கள் பிறந்தார்கள்.

சிங்கமுகனுக்கு ஆயிரம் தலைகள். இரண்டாயிரம் கைகள். தாரகனுக்கு யானைமுகம். அசமுகிக்கு ஆட்டுமுகம்.

சூரபதுமன் தன் தம்பிமார்களுடன் சென்று சுக்கிரபகவானிடம் உபதேசம்

பெற்றுன். அதன்படி சிவனை நோக்கி யாகம் வளர்த்தான். அக்கினிமேல் வச்சிராயுதம் நட்டு அதன்மேல் இருந்து தவமிருந்தான். சிவபெருமான் தோன்றினர்.

1008 அண்டங்களை ஆளவேண்டும்.
108 யுகம் ஆயுள் வேண்டும்.
இந்திர ஞாலத்தேரும் சிங்கவாகனமும் வேண்டும்.
பதினுயிரம் கோடிசேனைகள் வேண்டும்.
சக்தியைத் தவிர மற்றவரால் அழியாத உடல் வேண்டும்.
என்றெல்லாம் சிவனிடம் வரம்பெற்றுன்.

வீரமகேந்திரத்தை சூரனும்
அசரநகரை சிங்கமுகனும்
மாயமாபுரத்தை தாரகனும்
ஆட்சிபுரிந்து வந்தார்கள்.

இவர்கள் ஆட்சி சர்வாதிகார ஆட்சியாக மாறியது. பிர்மா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களை வென்று அடிமையாக்கினர்கள். தேவர்கள் கொத்தடிமையால் கொடுமை பல அனுபவித்தார்கள்.

திருமால் தானுகவந்து வரம்தர வேண்டும்.
பிரமன் பஞ்சாங்கம் சொல்ல வேண்டும்.
சூரியன் சந்திரன் மண்ணில் செல்ல வேண்டும்.
வாயு தெருக்கூட்டி தென்றலடிக்க வேண்டும்.
வருணன் பன்னீர் தெளிக்க வேண்டும்.
அக்கினி விறகில்லாமல் எரிய வேண்டும்.
வான் சுமந்த இந்திராதிதேவர்கள் மீன்சுமக்க வேண்டும்.

இப்படி எல்லாம் தேவர்களை அடக்கிக் கொடுமைப்படுத்தி ஆண்டான் சூரபதுமன்.

தேவதச்சன் மகள் பதுமகோமளையை சூரபதுமன் மணந்தான். இவள் வயிற்றில் தான் பானுகோபன், அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு முதலியோர் பிறந்தார்கள்.

எமன் மகள் விபுதையை சிங்கமுகன் மணந்தான். இவனுக்கு அதிசூரன் பிறந்தான்.

நிருதி மகள் சவுரியை தாரகன் மணந்தான். இவனுக்கு அசுரேந்திரன் பிறந்தான்.

அசமுகி துர்வாசரை வலிதில் கூடி வில்வலன் வாதாபி என்ற இரு அரக்கர்களைப் பெற்றுள். இவர்கள் முனிவர்களை அழித்து உண்டார்கள். அகத்தியரால் வில்வலன் வாதாபி இருவரும் அழிந்தார்கள்.

இந்திரன், இந்திராணி இவர்கள் மகன் சயந்தன் மூவரும் சீர்காழியில் சூரனுக்குப் பயந்து மூங்கிலாகி இருந்தார்கள். இந்திராணியைத் தன் அண்ணன் சூரபதுமனுக்குத் தரும் பொருட்டுத் தூக்க வந்த அசமுகியின் கையை "மகாகாளர்" வெட்டி வீழ்த்தினர். இதையறிந்த சூரபதுமன் கடுங்கோபங் கொண்டான். இவன் மகன் பானுகோபன் தேவலோகத்தைக் கொளுத்தினன். இந்திர குமாரன் சயந்தனையும், தேவர்களையும், தேவமாதர்களையும் சிறையில் அடைத்துக் கொடுமைப்படுத்தினன்.

சிவனை வணங்கும் தேவர்கள் ஏன் இப்படி அசுரர்களால் தொல்லை அனுபவிக்கவேண்டும்? சொல்லுங்கள் வியாழபகவானே! என்றுர் முருகன்.

சிவனை அழிக்க யாகம் புரிந்தான் தக்கன். அந்த யாகத்திற்குப் போனர்கள் பிர்மாதி தேவர்கள். போனதுடன்

நில்லாமல் யாகத்தின் அவிப்பாகத்தை யும் உண்டார்கள். இப்படி சிவனுக்கே அதிபாதகம் செய்ததால்தான் தேவர் கள் இப்படி 108 யுகங்கள் அடிமையாகி அல்லற்படுகிறார்கள் என்றார் பிரகஸ்பதி யான வியாழபகவான். இக்கதைகளைத் தலையசைத்துக் கேட்டுக்கொண்டிருந்த முருகப்பிரான் ''சிவபாதகத்தால் உண் டான தண்டனை முடிந்து விட்டது. இனி அரச தருமப்படி தேவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று முடிவு செய்தார்.

வீரமகேந்திரபுரியை ஆட்சிசெய்யும் சூரபதுமனிடம் வீரவாகுவைத் தூது விட்டார் முருகன். வேலனை வணங்கி விடை பெற்றான் வீரவாகு.

செல்லும் வழியில் இலங்கையைக் காவல் புரிந்த வீரசிங்கனையும், அடுத்து நின்ற அதிவீரனையும் கொன்று சென்றார்.

இந்திரன் மகன் சயந்தன். இவன் கனவில் கந்தவேள் தோன்றி ''விரைவில் உன் தந்தை முதலானோர் விடுதலை பெறுவார்கள் அஞ்சாதிரு'' என்று அருள் புரிந்தார். வீரவாகுவும் சிறைக்கூடம் சென்று தேவர்களைத் தேற்றினார்.

சூரபதுமன் அரண்மனைக்குச் சென்ற வீரவாகுதேவர் சூரனின் ஆட்சியின் மாட்சிகண்டு ஆச்சரியம் அடைந்தார். முருகனை நினைத்தார். சூரன் ஆசனத்து எதிரே மணி பதித்த ஆசனம் வந்தது. அதில் அமர்ந்த வீரவாகு சூரபதுமனை நோக்கி, ''தேவர்களை விடுதலை செய். இல்லையேல் உன் ஆணவம் அழிந்து விடும்'' என்று எச்சரித்தார். மண்ணளந்த மாயனும் மண்படைக்கும் பிரமனும் காணமுடியாத சிவனின் நெற்றிக் கண்ணில் தோன்றிய அருட்ஜோதி குழந் தைதான் முருகன்.

ம – 4

ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன் காண். ஆசிலா அவன் அறு முத்து உண்மையால் அறிநீ, பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன். தேசுலா அகல் மணியிடைக் கதிர் வரும் திறல்போல் என்றெல்லாம் முருகன் பெருமையைக் கூறி எச்சரித்தார்.

சூரனுக்குச் சொன்ன அறவுரை, சுட்ட விதை முளைக்காதது போலப் பயனில் லாமல் போயிற்று.

சூரன் நர நர என்று பல்லைக்கடித் தான். இக்குறிப்பைக் கண்ட சதமுகன், வச்சிரவாகு முதலானோர் வீரவாகுவை எதிர்த்தார்கள். வீரவாகு அவர்களைக் கொன்றதோடு, வீரமகேந்திரபுரியையும் அழித்தார். திருச்செந்தூர் வந்தார். முருகனிடம் சூரபதுமனின் ஆணவ நிலை யைக் கூறினார்.

சூரபதுமன், தன்மகன் வச்சிரவாகு வீரவாகுவால் மாண்டான் என்பதை யறிந்து வருந்தினான். கடுங்கோபம் கொண்டான். உடனே அழிந்த நகரை யும் வரத்தின் வல்லமையால் திருத்திக் கொண்டான்.

வீரவாகு முதலியோரை அழிக்கவும், தேவர்களை சிறைவிடுதலை செய்யாதிருக் கவும் வழி யாது என்று மந்திராலோசனை செய்தான் சூரபதுமன்.

பானுகோபன் அக்கினிமுகன் முதலிய அசுரர்கள் துடிதுடித்து எங்களை அனுப் புங்கள். நாங்கள் திருச்செந்தூர் சென்று வீரவாகுவையும் முருகனையும் கொன்று, வென்று வருகிறோம் என்றார்கள்.

தம்பி சிங்கமுகன் சூரபதுமனைப் பார்த்து, அண்ணா! விளக்கைப்பழம் என்று கருதி, விட்டில் பூச்சி விழுந்து மடிவதுபோல் வீணாக மடியாதே!

சிவபெருமானே தன் திருவிளையாட லால் செவ்வேள் குழந்தையாக வந்துள்

ளான் என்று வீரவாகு கூறியும் உனக்கு விளங்கவில்லையே! புல் நுனியில் மழைத் துளிபோல் முருகனின் ஒரு உரோமத்தில் அண்டங்கள் எல்லாம் அமரும் என்று வீரவாகு கூறினரே அது உன் செவியில் விழவில்லையா?

கண்ணில்லாதவன் சூரியனைக் கண்டான். வாயில்லாதவன் அதைப்பழம் என்றான். கையில்லாதவன் அதை எட்டிப் பறித்தான் என்று சொல்வதுபோல் ஆயிற்று உனக்குத் தூதுவன் சொன்னவை! நான் என்ன சொல்லப் போகிறேன்.

உடன் பிறப்பாயிற்றே என்று சொல்கிறேன். ரெத்தத்தின் ரெத்தமாயிற்றே என்று சொல்கிறேன் அண்ணா! கேள்!

தூயசந்திரன், நீண்ட சடைமுடி, பவள மேனி, நான்கு திருப்புயம், நீலகண்டம் இவையில்லாமல் சிவனே முருகனாக, ஆறு முகனாக, பன்னிரு தோளனாக, பாலனாக வந்துள்ளான். வந்துள்ள செந்தில் குமாரன் அருவம், உருவம், அருவுருவம், எல்லாம் கொள்வான். ஞானமும் உபநிடதமும் அறிய முடியாதவன். முன்னைப் பழம் பொருட்கும் பழம் பொருள் அவன். பின்னைப் புதுமைக்கும் புதுப் பொருள் அவன். உயிர்க்கு உயிராய் நிற்கும் பரம்பொருள் அவன். இத்தகையவனை நீயும் நானும் அறிய முடியாதண்ணா! அறிய முடியாது.

அண்ட கோடிகளை இமைப்பொழுதில் அமைப்பார். இமைப்பொழுதில் ஆக்குவார். இத்தகைய முருகக் கடவுள் உன்னுடன் போர்புரிய திருச்செந்தூரில் வந்துள்ளார். வீணாக வெந்து நொந்து அழியாதே. ஆணவமும் ஆத்திரமும் அவசரமும் உன்னையே அழிக்கும் ஆயுதங்கள் என்பதை மறவாதே!

திருமால் பிரமன் முதலியோரது தேகமே அழியும் தன்மையது. அப்படி இருக்க உன் சரீரம் மட்டும் வச்சிரயாக்கை என்று எண்ணாதே!

சிவன் தந்த வரத்தை அவனே தன் சக்தியால் மாற்ற வந்துள்ளான் என்றெல்லாம் முருகன் பெருமையைக் கூறி தேவர்களை விடுதலை செய்யும்படி சிங்கமுகன் வற்புறுத்திக் கூறினான். கேட்டானில்லை சூரபதுமன். நீட்டினான் கையை. நெருப்பாக ஆனது அவன் கண்கள். பல்லை நர நர என்று கடித்தான். கதாயுதத்தை ஓங்கி தரையில் அடித்தான். தம்பியைப் பார்த்து சூரபதுமன் அடா தம்பி சிங்கமுகனே! நீயா இப்படிப் பேசுவது?

காற்றால் தள்ளப்பட்டு, நெருப்பால் சுடப்பட்டு, கங்கை நீரில் அலக்கழிக்கப் பட்டு, சரவணப் பொய்கையில் சங்கடப் பட்டு, வேறு பெண்களின் பாலைக் குடித்து, அழுது விளையாடும் நேற்றையப் பயலையா பரம்பொருள் பரம்பொருள் என்கிறாய்......... ஹ......... ஹ......... ஹ...... பல்முளைக்காத பயல். பால்மணம் வீசும் பயல். இவனைக் கண்டா அஞ்சுகிறாய்? தம்பி சிங்க முகா! உன் புத்தி என்ன இவ்வளவு சக்தியில்லாமல் போயிற்று! ஐயோ? உனக்கு நான் அண்ணனாகப் பிறந்தேனே! என்று ஏளனம் செய்தான். தலையில் அடித்துக் கொண்டான். தம்பி சிங்க முகன் செய்வதறியாமல் விதியை நினைத்து கதிகலங்கி அமர்ந்திருந்தான்.

என்ன தலை கவிழ்ந்து மௌனம் சாதிக்கின்றாய்? நான் தேவர்களை ஒருபோதும் விடுதலை செய்யமாட்டேன். இப்போதே முருகனிடம் போர் புரிந்து அவனை

அழிப்பதே என் முதல் வேலை. ஹ ...... ஹ......... ஹ.........! என்று ஆணவத் துடன் சிரித்தான்.

முருகன் தன் சேனைகளுடன் (இப் போது "கதிர்காமம்" என்று வழங்கு மிடத்தில் உள்ள) ஏமகூட மலையில் போர்ப்பாசறை அமைத்தார். முருகன் போருக்கு வந்துவிட்டதை நாரதர் சூரபதுமனுக்குச் சொன்னார்.

முதல் நாள்

முதல்நாள் சூரபதுமன் தன் முதல் மகன் பானுகோபனை சேனையுடன் போருக்கு அனுப்பினான். விடை பெற்ற மைந்தன் பானுகோபன், வேலாயுதக் கடவுள் ஆணையைப் பெற்ற வீரவாகு தேவர் இருவரும் கடும் போர் செய்தார் கள். பானுகோபன் மோகாஸ்திரத்தால் நவ வீரர்களையும் மயக்கி கீழேவிழ வைத்துவிட்டான். இவனது மாய வேலையை அறிந்த தூய வேலாயுத முருகன் அம்மோகாஸ்திரத்தால் அனை வரையும் எழுப்பி விட்டார். இதனை அறிந்த பானுகோபன் எதிர்க்க முடியாமல் மாயமாக மறைந்தோடி விட்டான்.

இரண்டாம் நாள்

சூரபதுமன் பல்லாயிரக் கணக்கான சேனைகளுடன் இரண்டாம் நாள் போருக்கு வந்தான். வீரவாகு முதலிய வர்களை வென்றான். தாமரை முகம், பன்னிருகை.அவற்றில் விளங்கும் ஆயுதம் முதலியவற்றோடு முருகனைக் கண்டான்.

தேவரும் யாவரும் காணமுடியாத கந்தப்பெருமானை சூரன் காண்பதற்கு அவன் எவ்வளவு தவம் செய்திருக்க வேண்டும்? பாருங்கள்.

முருகன் "சக்ராயுதத்தை" விட்டார். அது ஒரு முகூர்த்த நேரம் போர் புரிந் தது. எதிர்த்து ஆரவாரம் புரிந்த ஒரு லட்சம் வீரர்களையும் அழித்தது. இதைக் கண்ட சூரபதுமன் "பிரமாஸ்திரத்தை" ஏவினான். பெருமை மிக்க இந்த பிரமாஸ்திரம் முருகன் வரை சென்றது நின்றது. முருகனது "வேலாயுதம்" பிரமாஸ்திரத்தை ஒரே விழுங்காக விழுங்கிவிட்டது.

பிறகு சூரன் 'நாராயணஅஸ்திரத்தை' விட்டான். அது பலப்பல நாராயண வடிவம் கொண்டது. அவற்றையும் முருகன் கைவேல் விழுங்கிவிட்டது.

பிறகு "பாசுபதாஸ்திரம்" விட்டான். இதைக்கண்ட முருகன் ஆகா! இது என் தந்தை பாணம் அல்லவா? என்று கருதி தன் கையை நீட்டி அடக்கமாக வாங்கிக் கொண்டார்.

படையிழந்து, வலியிழந்து, பதை பதைத்து நின்றான் சூரபதுமன். அப் போது முருகன் சூரனைப்பார்த்து அடேய்! ஆணவக்காரா! இதோ என் கை வேலா யுதம் உன் தம்பியை அழித்தது. உன்னை அழிப்பது ஒரு பெரிய காரியமில்லை. படைகளை இழந்து விட்டாய். இப்போது உன்னை அழித்தால் எனக்குப்பழி. இதுவே போர் தருமம். அதனால் தாமதிக் கின்றேன்.

நெடுங்காலம் சிறைவைத்திருக்கும் தேவர்களை உடனே விட்டுவிடு. உனக்கு உயிர்ப்பிச்சை தருகிறேன். இல்லையேல் உன்னை விரைவிலேயே அழித்துவிடுவேன். என்ன சொல்கிறாய்? என்று கேட்டார். இதைக்கேட்ட சூரபதுமன் பதில் கூறாமல், உடனே ஆகாயத்தில் மறைந்து தனது வீரமகேந்திரபுரிக்குச் சென்றான்.

மூன்றும் நாள்

மூன்றும் நாள் பானுகோபன் போருக்கு வந்தான். இவனுடன் வீரவாகு தேவர் கடும் போர் புரிந்தார். பானுகோபன் ஆகாயத்தில் மறைந்து கொண்டு ''மாயாஸ்திரத்தை விட்டான். இதனல் வீரவாகு தேவரும் மற்ற நவ வீரரும், பல்லாயிரக்கணக்கான பூத சேனைகளும் மயங்கி விழ்ந்தனர். அனைவரையும் கட்டி எடுத்துச்சென்று கடலுக்குள் விழ்த்தி வெளியில் கிளம்ப முடியாதபடி அமுத்தி விட்டது அந்த மாயாஸ்திரம். இதனல் பானுகோபன் மிகவும் கர்ஜித்து மகிழ்ந்தான். தந்தை சூரனிடம் கூறினன். இருவரும் சேர்ந்து வெற்றி விழாக் கொண்டாடினர்.

அன்று இரவில் முருகன் வேலாயுதம் விட்டார். அது சென்று கடலுள் அழுந்தியிருந்த வீரர்களை நல்லுணர்வு படுத்தியது. மாயாஸ்திரத்தை அழித்தது. எழுந்த வீரவாகு முதலிய வீரர்கள் வீரமகேந்திரபுரியை அழித்தார்கள்.

இதையறிந்த சூரன்மகன் – மூன்று தலை உடையவன் – நீதிநெறி கற்றவன் – இரணியன் என்பவன் முருகன் பெருமை கூறி ''சரவணனைச் சரண் அடையுங்கள் அப்பா'' என்றுன்.

இதனல் சினந்த சூரன், தன் மகன் இரண்யனுடன் சண்டை செய்தான். இரணியன் தோற்று மீன் வடிவாகி கடலுள் மறைந்து கொண்டான். இப்படி மூன்றும் நாள் போர் முடிந்தது.

நான்காம் நாள்

நான்காம் நாள் ''காலை'' சூரன் மகன் அக்கினிமுகாசுரன் சேனையோடு வந்து போர் புரிந்தான். இவன் இளமையில் வழிபட்ட காளிதேவியும் இவனுக்குத் துணையாக வந்து போரிட்டாள். தோற்றுள். ஓடிவிட்டாள்.

வீரவாகு அக்கினி முகனைக் கொன்றுர் ''மாலை'' நேரத்தில் சூரனின் மற்ற மூவாயிரம் மக்கள் வந்து போரிட்டனர். முருகனுடைய வீரர்களில் ஒருவரான ''விஜயர்'' என்பவன் முருகன் தந்த ''வைரவப் படை'' யால் மூவாயிரம் பேரையும் கொன்றுர். ''இரவு'' சூரனுடைய முதல் மந்திரியாகிய தருமகோபன் போரிட்டான். இவனை வீரவாகு தேவர் கொன்று வெற்றிக்கொடி நட்டார்.

ஐந்தாம் நாள்

ஆகாயத்தில் மறைந்து சண்டையிட்ட மகன் பானுகோபன் ஐந்தாம்நாள் தன் தந்தை சூரனைப் பார்த்து தந்தையே! முயல் வேட்டை ஆடுபவன் புலிக்குகையில் புகுந்து மடிவதைப்போல தேவர்களைத் துன்பஞ் செய்த நாம் முருகனல் நம் வலிமை இழந்து அழியப் போகின்றோமே! வீணுக அழிய வேண்டாம் தந்தையே! விட்டுவிடுவோம் தேவர்களை என்றான். திருந்தாத மனம் படைத்த தீயவனன சூரபதுமன் தானே போருக்குப் புறப்பட்டான். மகனைப் பார்த்து, அப்பா! மகனே! பானுகோபா! கூன் குருடு செவிடு முதலிய குற்றம் இருந்தால் அந்தப் பிறப்புடன் அவை அழிந்துவிடும். ஆனல், மானம் இழந்து, வலிமை இழந்து உலகில் வாழ்ந்தால் நம்மைவிட்டுப் பழி நீங்காது. நம் மானம் பெருமையுடையது. ஆகவே, வா போருக்கு என்றுன்.

பானுகோபன் பல்லாயிர சேனையுடன் தந்தைக்கு உதவியாகப் போர்தொடுத்தான். வீரவாகுதேவர் பானுகோபனைக் கொன்றுர். சூரன் மிகமிக அழுது புலம்பி

னன். "தந்தைக்கு மகன் நீர்க்கடன் செலுத்த இருக்க, நான் என்மகனுக்கு நீர்க்கடன் செலுத்தும்படி ஆயிற்றே!" என்று வருந்தினன் சூரன். தம்பி சிங்க முகனை அழைத்துப் போருக்கு அனுப்பி னன்.

ஆறும் நாள்

மகன் பானுகோபனை இழந்து வருந்திய சூரனின் ஆணையால் தம்பி சிங்கமுகன் ஆறுவதுநாள் காலை போர்க்கோலம் பூண்டான். தனது ஆயிரம் தலைகள், இரண்டாயிரம் கைகள் யாவற்றையும் கொண்டு அண்ணன் சூரனை வணங்கினன். வணங்கி, அண்ணு! முதலும் முடிவும் இல்லாத மூர்த்தியைப் பாலன் என்று பரிகசித்தாயே! உன் அழிவை ஆராய வில்லையே! என் சொற்கள் எல்லாம் உனக்கு நஞ்சாக ஆயினவே! ஐயோ! நான் எப்பிறப்பில் இனி உன்னுடன் பிறக்கப் போகிறேன் அண்ணு! உம்! முன் செய்த வினையை யார் வெல்ல முடியும்? உனக்காகப் போருக்குப் போகிறேன் அண்ணு! என்று சொல்லிப் புறப் பட்டான்.

தன்னுடன் இலட்சம் வீரர்களையும், தன் மக்கள் ஆயிரம் பேர்களையும் உடன் அழைத்துச் சென்ருன். இவர்களை வீரவாகுதேவர் கொன்ருர். சிங்கமுகன் "மாயா பாசத்தை" விட்டான். அது வீரவாகு முதலிய அனைவரையும் கட்டி உதயகிரியில் கொண்டுபோய் வைத்து மயக்கியது.

இதனையறிந்த முருகவேள் தன் பூத கணங்களுடன் போருக்கு வந்தார். சிங்கமுகன் ஆகாயம் வரை வளர்ந்தான். தன் மாய வடிவத்தைக் காட்டினன். முருகனுடன் வந்த பல்லாயிரக் கணக் கான பூதப்படைகளையும் அள்ளி விழுங்கி விட்டான். முருகப்பிரான் சிங்கமுகனின் வீரம்கண்டு வியந்தார். எதிர்த்து வந்த சேனைகளை எல்லாம் கொன்ருர்.

ஒரு பாணத்தால் மாயா பாசத்தை அழித்தார். உதயகிரியில் மயக்கத்தில் இருந்த வீரவாகு முதலிய பல்லாயிரம் வீரர்களையும் மீட்டு வந்தார்.

சிங்கமுகனது ஆயிரம் தலைகள், இரண் டாயிரம் கைகள் இவைகளை முருகன் அறுக்க அறுக்க அவைகள் மீண்டும் மீண்டும் முளைத்து முருகனுடன் போரிட்டன.

குமாரக்கடவுள் "குலிசாயுதம்" ஏவி சிங்கமுகனை அழித்தார். தம்பி சிங்கமுகன் மாண்டதையறிந்த சூரன் வெம்பி, கதறி அழுதான்.

7, 8, 9, 10-ஆம் நாள்

என் உடன் பிறப்பே! இனி எப்பிறப் பில் உன்னைப் பெற முடியும்? முடியாதே! பொன்னை, நிலத்தைப், பொருளை, புதல் வர்களை, மாதர்களை இழந்தால் திரும்பப் பெற்றுவிடலாம். தம்பியைப் பெறமுடி யாதே! என்று அழுத சூரன் ஒருவாறு தேறினன்.

ஏழாம்நாள் காலை, தன் ஆட்சிக்கு உட் பட்ட ஆயிரத்து எட்டு அண்டங்களிலும் உள்ள சேனைகளை அழைத்துக் கொண்டு முருகனிடம் போருக்குப் புறப்பட்டான். இதுகண்ட முப்பத்து முக்கோடி தேவர் களும் அஞ்சி நடுங்கினர்கள்.

திருமால் தேவர்களைத் தேற்றினர். முருகனும் சூரபன்மனும் கடும் போர் இட்டனர். 1008 அண்டத்திலுள்ள அசுர சேனைகளையும் ஆறுமுகத்து அண்ணல் அழித்தார். அண்டங்கள் தோறும் முருக னும் சூரனும் சென்று சென்று போர் புரிந்தார்கள்.

சூரன் தன் தாய் மாயையை நினைத்தான். அவள் கட்டளைப்படி அமிர்த சஞ்சீவி மலையைத் தன் இந்திர ஞாலத் தேரில் வரச்செய்தான். இறந்த அத்தனை பேரும் எழுந்தார்கள். எழுந்த சிங்கமுகன், பானுகோபன், முதலியவர்களையும் 1008 அண்ட வீரர்களையும் முருகன் தன் சர்வ சங்காரப் படையை ஏவி ஒரு நொடியில் அழித்தார்.

அமிர்த சஞ்சீவி மலையுடன் நின்ற இந்திர ஞாலத் தேரையும் தம்முடன் முருகன் நிறுத்திக்கொண்டார்.

இத்தனை இழந்தும் மனம் கலங்காத சூரன், சிங்க வாகனம் ஏறி போர் புரிந்தான். சிங்கத்தை செவ்வேள் கொன்றார். சூரன் "சக்ரவாகப் பறவையாக" மாறிப் போரிட்டான். "இந்திரன்" முருகனுக்கு "மயிலாக" வந்து நின்றான். அதன் மேல் முருகன் ஏறி அப்பறவையை வெட்டி வீழ்த்தினார். சூரன் பல மாயா வடிவங்கள் எடுத்துப் போரிட்டான். மாயாவடிவம் எல்லாவற்றையும் முருகன் அழித்தார். இறுதியில் சூரனுக்கு முருகப் பெருமான் தனது தூய 'விசுவரூப' தரிசனத்தைக்காட்டி யருளினார்.

"தேரையும் நிறுத்திக்கொண்டு போரையும் செய்து வென்று, யாரையும் காக்கும் அண்ணல் பாரும் விண்ணும் தொட மிகப் பெரிய விசுவரூப காட்சி தருகிறாரே!

ஆகா!

கோலமா மஞ்ஞை தன்னில்
குலவிய குமரன் தன்னைப்
பாலன் என் றிருந்தேன் அர் நாள்
பரிசிவை உணர்ந்திலேனால்
மாலயன் தனக்கும் ஏனை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற
மூர்த்தி இம்மூர்த்தியன்றோ!

என்று சூரபதுமன் போற்றினான். காலே கண்டுமுடியாதபடி காலழகிலேயே கண்ணைச் செலுத்தினான். சிந்தித்தான். சே! இவன் நம் பகைவன் அல்லவா? நம் மானமும் வீரமும் அல்லவா பெரிது? உடல் அழியும். புகழ் அழியாது அல்லவா? என்று நினைத்தான். மீண்டும் முருகனுடன் போர் செய்யத் தொடங்கினான்.

தன்வடிவைச் சுருக்கினார் வடிவேலர். அவனது ஆற்றலில் சிறிது குறைக்கக் கருதினார். கருணை சிறிதே காட்டினார். பூதஉடல் அழியட்டும். புகழ் அழியா திருக்கட்டும் என்று போரிட்டான் சூரன். மாயாசக்தியால் மிகப்பெரிய இருள் வடிவாகி தேவர்களை விழுங்க முயன்றான். முருகன் அப்போது வேலாயுதத்தை விடுத்தார். சூரன் கடல் நடுவில் ஓடி பெரிய மாமரமாகி நின்றான். வேல் அதை இருகூறாகப் பிளந்தது. சூரன் மீண்டும் வேலை எதிர்த்தான். வேல் அவனுடைய வச்சிர உடம்பைப் பிளந்தது.

ஒருபகுதி சேவலாகவும், மறுபகுதி மயிலாகவும் வந்தன. கந்தன் கருணை நோக்கால் நோக்கினார். மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் கொண்டு பேரருள் புரிந்தார்.

தேவர்களின் சிறையை மீட்டார். தேவ சேனாபதியின் பெருங் கருணையால் விடுதலை பெற்ற தேவர்கள் அளவிலா ஆனந்தங் கொண்டார்கள். முருகன் கட்டளைப்படி வருணன் மகேந்திரபுரியைக் கடலில் அழியுமாறு செய்தான். மீன் உருவாக இருந்த சூரன்மகன் இரணியன், இறந்த அனைவருக்கும் ஈமக் கடன் செய்தான்.

முருகன் தனக்குத் துணையாக வந்து இறந்த பூத கணங்களை எல்லாம் எழுப்பினார். திருச்செந்தூர் வந்து தங்கினார். அங்கு சிவலிங்கத்தை நிறுவிவழிபட்டார். தேவர்கள் அனைவரும் முருகனை வழிபட்டார்கள்.

திருமுருகன்
திருவடிகளே சரணம்!

ஸ்ரீகந்தர் சஷ்டி கவசம்

தேவராய சுவாமிகள் அருளியது

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்—கதித்(து) ஓங்கும்
நிட்டையுங் கைகூடும். நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்

பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் ரீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திரு வயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க

என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவை செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க

ம – 5

தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெறி தணலெறி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்நரி நாயும்
எலியும் கரடியும் இனிதொடா தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக

ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொர்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனுர்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவாய்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்

நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தெழுவர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.

இதனால் அறி.

நிலத்தின் பெருமையை அதில் விளையும் பயிரால் அறி
குலத்தின் பெருமையை ஒருவர் பேசும் பேச்சால் அறி,

வலிமையாளர்

கடவுள், உண்மை இரண்டையும் கைக்கொள்பவர் ஆயிரக்கணக்கான வரைவிட வலிமை பொருந்தியவர்.

சான்றோன்

தவறு செய்யாதிருந்தும் பிறர் பழிச்சொல்லைப் பொறுத்துக்கொள்பவன் சான்றோன்

படிவிழாத் தோற்றமும் வளர்ச்சியும்

தணிகையில் தோற்றம் :

சிவப் பரம்பொருளே அறுமுகப் பரமன். அவன், ஆதரிப்போருக்கு ஆருயிராய், அகத்தாமரையின் மீதிருக்கும் தெய்வ ஒளி விளக்காய் விளங்குபவன். ஓதிய ஐந்து எழுத்தும் அவன். ஓங்காரத்து உள் ஒளியும் அவன். விண்ணோர் குறை நீக்க, மண்ணோரை வாழ வைக்க ஐந்து முகத்தோடு ஆறுமுகமாய் பூங்கயிலையில் தோன்றி, புண்ணியத் தமிழ்நாட்டில் பொருந்தினான். அவன் தமிழ்த் தெய்வம். தமிழர் தெய்வம். அவனது அருள் வெள்ளத்தில் திளைத்தவர் பல்லாயிரவர்.

அவருள் ஸ்ரீ வள்ளிமலைசுவாமி சச்சிதாநந்தா என்பவரும் ஒருவர் ஆவார். அப்பெரியார் தமது சீடர்கள் ஆங்கில ஆண்டு ஜனவரி முதல் நாள் ஆங்கிலத் துரைமார் களைப் பார்த்து வருவதைவிட அண்டமெலாம் ஆளும் ஆறுமுகனைக் கண்டு அருளுண்டு வருவோம் என்று 1918ல் திருத்தணியில் ஜனவரி முதல் நாள் திருப்புகழ் திருப்படி விழாவினைத் தொடங்கி வைத்தார்கள்.

பஜனை தந்த பலன் :

திருவெண்ணெய் நல்லூர் புகைவண்டி நிலையத்தில் வெள்ளிதோறும் திருப்புகழ் பஜனை செய்து வந்த ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் திரு. C. பொன்னையாப்பிள்ளை, உதவி ஸ்டேஷன் மாஸ்டர் திரு. V. சுந்தரம் ஐயர் இவர்களுடன் தென் மங்கலம், தடுத்தாட்கொண்டூர், வளையாம் பட்டு, கீழ்மங்கலம், கூரானூர், அன்பர்களும் கலந்து கொண்டு முருகபஜனை நடத்தி வந்தனர். இதில் எழுந்த ஆர்வத்தால் திரு. சுந்தரம் ஐயர் தாம் சென்ற இடமெல்லாம் திருப்புகழ் பரப்பியும், பஜனைக் குழு நிறுவியும் வந்தார்கள் திருத்தணிப் படிவிழாவைக் கண்டு வந்த ஐயரவர்கள் அவ்விழாவை அன்பர்களைக் காண வைத்ததோடு நாமும் ஒரு படி விழாச் செய்யலாமே என்ற ஆசையையும்ஊட்டினார்கள். இதுவும் ஆறுமுகப் பெருமான் ஆணைதான் என்றெண்ணினோம். இதன் பயனால் வளையாம்பட்டு திரு. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் புதல்வர் திரு. A. இராமமூர்த்தி பிள்ளை, தென்மங்கலம் திருக்காமுப் பிள்ளை இருவரும் திருத்தணிப் பயணத்திற்கு நீர் விட்டு வளர்த்து அதன் பயனால் 1954 டிசம்பர் 31உ திருத்தணி சென்று படிவிழாவையும், புள்ளி மயிலேறும் வள்ளி மணாளனையும் கண்டனர்.

> ''பலகாலும் உனைத் தொழுவோர்கள்
> மறவாமல் திருப்புகழ் கூறி
> படிமீது துதித்துடன் வாழ.........
> அருள்வோனே!''

என்று காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி கந்தனைத் தரிசித்தனர். பாடும் பணியே பரிசாகப் பெற்று வந்தனர்,

மயிலம் யாத்திரை :

''பூதமும் கரணமும் பொறிகள் ஐம்புலனும்
பொருந்திய குணங்களோர் மூன்றும்

நாதமுங் கடந்த வெளியிலே நீயும்
நானுமாய் நிற்கும்நாள் உளதோ?''

என்று பட்டினத்தடிகள் ஏங்கி வேண்டியது போல், தணிகை சென்று வந்த முருக பக்தர்கள் மயிலத்திலும் ஒரு படி விழா நடத்தி மால்மருகன் அருளை மன்னுயிர்களும் துய்க்க வேண்டுமென்று மாளாத் தாகம் கொண்டனர். இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும், தனித்து உண்ணுமல் மற்றவர்க்கும் தருவதே தமிழரின் தலையாய பண்பு அல்லவா? இதை மெய்ப்பிக்கும் அளவில் மயிலம் செல்ல அடியார் குழுவும், இயக்குதற்குத் தலைமைப் பொறுப்பும், வண்டி - யுண்டிக்குச் செலவும், வழிபடு பொருளும் தேவையல்லவா?

மேலமங்கலம் பாலயோகி இராமதாஸ் சுவாமிகள் இயக்கத் தலைமைக்கும், வளையாம்பட்டு, திரு. ஆறுமுகம்பிள்ளை, விழுப்புரம் இரயில்வே மாவட்டப் பொறியாளர் திரு P. V. இராஜகோபால் செட்டியார் B.E. மற்றும் 66 பேர் செல்வது என்ற முடிபுக்கும் வழிவகுத்தான் வடிவேலன். இவனது அருளாணையும், மயிலம் ஆதீனகர்த்தரது அகங்கனிந்த வரவேற்பு ஆணையும் பெற்று விழுப்புரம் இரயில்வே விநாயகர் கோயிலில் 1956 ஜனவரி முதல் நாள் காலை வழிபாடு செய்து, புகைவண்டி ஏறி மயிலம் செல்ல ஆயத்தமானுர்கள். காணவில்லையே! காணவில்லையே! பாலயோகி சுவாமியை இன்னமும் காணவில்லையே! எந்த ஊருக்குச் சென்ருர்களோ? என்று வழிமேல் விழிவைத்து வாய்வெருவி நின்றனர்.

வழிமாற்றிய வடிவேலன் :

சுவாமிகள் சில தினங்களுக்கு முன்னரே வெளியூர் சென்றிருந்தார்கள். துறவிக்கு ஒரு ஊர்தானு சொந்தம்? அப்பயணத்தில் இந்த யாத்திரை நினைவில்லை போலும். சேலம் புகைவண்டி நிலயத்தில் தாம் திட்டமிட்டபடி பெங்களூருக்கு டிக்கட் எடுக்கச் சென்றவர்கள், பெங்களூர் என்று கேட்காமல் விழுப்புரம் என்றே கேட்டுவிட்டார்கள். டிக்கட் வாங்கிய பின்புதான் மாற்றி கேட்டுவிட்டோம். இதுவும் மயில் வாகனன் கட்டளை போலும்! விழுப்புரமே செல்வோம்! என்று விழுப்புரம் வந்து இறங்கினுர்கள். சுவாமிகளைக் கண்டவுடன் தாய்கண்ட சேய் போல அடியார்கள் மகிழ்ந்தார்கள். அரஹர முழக்கம் அண்டம் எட்டியது. வெற்றிவேல் முழக்கம் விண்ணைப் பிளந்தது. இரயில் முழக்கம் செய்து 66 பேர்களையும் மயிலம் நிலயத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தது. இரயில் மக்கள் எல்லாம் முருக நாம அமுதத்தையும், திருப்புகழ்த் தேனையும் உண்டுமகிழ்ந்தனர். காலை 11-30க்கு மயிலம் மலை வந்தார்கள். வருணன் ஆலவட்டம் வீசுவது போல் மென்காற்றின் இடையே மேகப்பந்தல் இட்டு வாட்டம் தவிர்த்து வரவேற்ருன்.

மயிலத்தில் முதல் படிவிழா

மயில்ஆட, குயில்பாட, கிளி மகிழ்ந்து உரையாட, மக்கள் ஆனந்தக் கூத்தாட, மங்கல முழக்கம் அதிர, ஆதீனகர்த்தர் அருளாசி வழங்கி வரவேற்க, அரஹர முழக்கம் இட, அருணகிரிநாதரின் திருப்புகழ் இசை இசைக்க, ''அறிவானந்த சுவாமிகள்'' முதல்படியில் தேங்காய் உடைத்து, தீபாராதனை செய்ய, 1956 ஜனவரி முதல்நாள் முதல் படிவிழா இன்பகரமாகத் தொடங்கியது.

மலைப்படிகள் ஏறி, மயிலாசலக் கடவுளைக் கண்குளிரக் கண்டு தொழுதார்கள். விழுப்புரம் அன்பர்கள், வளையாம்பட்டு அன்பர்கள், மயிலம் ஆதீனகர்த்தர் முதலானேரின் ஆதரவால் ஒரு மூட்டை அரிசி அன்னதானமும் சிறப்பாக நடந்தது.

குடியரசுப்படிவிழா

மேலமங்கலம் சன்மார்க்க சங்கத்தைத் திருப்புகழ் திருப்படி விழாக் குழுவின் தலைமையகமாகவும், பாலயோகி ராமதாஸ் சுவாமிகளைத் தலைமைக்காப்பு நற்பொறுப்பாளராகவும், பெரும் பொறுப்பாளர்களான விழுப்புரம் திரு P. V. அருணசலம் செட்டியார் அவர்கள், வளையாம்பட்டு திரு. S. ஆறுமுகம்பிள்ளை அவர்கள், மற்றும் பலரை விழாச் செயற்குழுவினராகவும், செயற்குழு உறுப்பினராகவும் அமைக்கப் பெற்றது. குழுவின் முடிபின்படி ஆண்டு தோறும் இந்தியக் குடியரசு நாளான ஜனவரி 26ல் திருப்புகழ் திருப்படி விழாவை மயிலத்தில் நடத்தி வருவது எனவும் தீர்மானித்தார்கள். அதன்படி இன்றுவரை 24 ஆண்டுகளாக இப் படிவிழா மென்மேலும் மலைவிளக்குப்போல் உலகமறிய வளர்ந்து வருகிறது. இலட்சக்கணக்கான மக்கள் கூடுகின்றனர். அன்னதானம், சொற்பொழிவு, கதாகாலட்சேபம், பட்டி மன்றம், இசைக்கச்சேரி, பலவூர்களின் பஜனைக்குழு நிகழ்ச்சிகள், ஸ்ரீமுருகனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை, சந்தனக் காப்பு அலங்காரம், தங்கமயில் வாகனக் காட்சி, மேளக்கச்சேரி, வாணவேடிக்கை, முதலியனவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

வாழ்க உலகெலாம் !

இறைவா இன்பம்

இவ்வாண்டு வெள்ளி விழாவாக மலர்வது அனைவருக்கும் மகிழூட்டுவதாகும். அன்று தொட்டு இன்று வரை விழாவின் செயற் குழுவினர் அனைவரும், மற்றும் தொண்டர்களும் ஒற்றுமையாகப் பணியாற்றி வருகிறார்கள். இதற்கு அருள்பாலித்து வரும் திருவருளையும் குருவருளையும் நினைத்து இன்புறுகிறோம். உடல், உள்ளம், உரை, பொருள் முதலிய பல்லாற்றாலும் உதவி வரும் சிவதருமச் சீலர்களையும், ஆலயப் பணியாகிய பதிபுண்ணியத்தையும் உயிர்ப் பணியாகிய பசுபுண்ணியத்தையும் செய்து வரும் அனைவரையும் நினைந்து போற்றுகிறோம்.

“ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே” என்ற அப்பர் பாடலும், பாட்டுவித்தால் பாடுகின்றேன்பரமா” என்ற அருட் பிரகாசர் பாடலும் எவ்வளவு பொருத்தம் என்பதை நினைந்து மகிழ்கிறோம். மேலும் இப் படிவிழா வாழையடி வாழையாக பல்லூழி காலம் வளர்ந்து வரவும், மக்களுக்குப் பணி செய்யவும் மயிலம் மால் மருகன் முருகன் மலரடியை முப்போதும் எப்போதும் வாழ்த்துகின்றோம்.

வளர்க படிவிழா !

வணக்கம் !

மயிலம் திருப்புகழ் திருப்படி
விழாக் குழுவினர்

படிகள் தோறும் பாடுவதால் பரமன்பதம் பதியும்
பச்சைமயில் வாகனமும் பரிவுடனே வதியும்

மயிலம் திருப்படி விழாக் குழுவினர்

தவத்திரு சுவாமி இராமதாஸ் அவர்கள்
மேலமங்கலம். காப்பாளர்
திரு A. பாலசுப்ரமண்ய பக்தர், விழுப்புரம். தலைவர்
திரு G. A. இராதாகிருஷ்ண செட்டியார் விழுப்புரம்
துணைத்தலைவர்
திரு T. M. திருக்காமுப்பிள்ளை, தென்மங்கலம். செயலர்
திரு M. இரத்தினசபாபதிப்பிள்ளை, சிறுவத்தூர். துணைச்செயலர்
திரு A. கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை, வளையாம்பட்டு. பொருளர்
திரு G. ஜெயராமப்பிள்ளை, வளையாம்பட்டு. துணைப்பொருளர்

நிர்வாக உறுப்பினர்கள்

திரு/திருமதி

V. சுந்தரமய்யர் சென்னை
A. இராமமூர்த்திப் பிள்ளை வளையாம்பட்டு
G. கணேசன் B. E. பனமலைப்பேட்டை
அ. கந்தசாமிக் கவுண்டர் தி. வெ. நல்லூர்
S. M. முத்துவீரா ரெட்டியார் சாத்தனூர்
S. N. பாலசுப்ரமணியம் சாரம்
S. B. பட்டாபிராம ரெட்டியார் சேமக்கோட்டை
V. முத்துசாமிப்பிள்ளை கீழையூர்
M. ஆறுமுகம்பிள்ளை, அரகண்டநல்லூர்
N. குமாரசாமிப்பிள்ளை, இருவேலிப்பட்டு

பொதுக்குழு உறுப்பினர்கள்

டாக்டர் மாசிலாமணி அகத்தியர் இல்லம், புதுவை
கு. திருஞானசம்பந்தம் விழுப்புரம்

திரு / திருமதி

R. ஜெயராமன் செட்டியார் விழுப்புரம்
தங்கவேல் முதலியார் பண்ருட்டி
E. R. சிதம்பர பத்தர் விழுப்புரம்
P. G. ஜானகிராமன் திண்டிவனம்
V. L. சுப்புராயப்பிள்ளை திண்டிவனம்
T, குப்புசாமிப்பிள்ளை நீலமங்கலம்
G. ஜானகிராமன் ராகவன்பேட்டை
மகாலட்சுமி அம்மாள் சிறுவந்தாடு
M. கண்ணன் வளையாம்பட்டு
கோவிந்தக்கவுண்டர் மேலமங்கலம்
K. குப்புசாமி வடகோடிப்பாக்கம்
V. நாராயணசாமி குண்டக்கல்
ஜனார்த்தனம் செம்மார்
P. சின்னராஜ் செம்மார்
T. பக்தவச்சலு ஈச்சேரி
G. பழனிவேலு காரைக்குடி
N. கோவிந்தசாமிப்பிள்ளை மேலமங்கலம்
J. குமரகுருபரன் V சாலை
V. சொக்கலிங்கமுதலியார் V சாலை
அகஸ்தீஸ்வரன் சாரம்
G. மோகன் ஜக்கம்பேட்டை
விஜயரங்கமுதலியார் புறங்கரை
A. கிருஷ்ணமூர்த்தி நெல்லிக்குப்பம்
M. சுந்தரமூர்த்தி நயினார் சோழவல்லி
M. ராமசாமி ரெட்டியார் ஏனதிரிமங்கலம்
விநாயக முதலியார் நரமாகாணி

திரு / திருமதி

T. சீனுவாசம்பிள்ளை T. எடையார்
கோவிந்தராஜுப்பிள்ளை மேல்சித்தாமூர்
R. ஆளவந்தார் நெய்வேலி
M. E. திருநாவுக்கரசு மரக்காணம்
V. ராமமூர்த்தி ஐயர் கிடங்கல்
அமிர்தலிங்கம்பிள்ளை சென்னை
A. சிவகுமார் வளவனூர்
K. S. இரத்தின சபாபதி வளவனூர்
S. ராமு வளவனூர்
கதிர்வேல் பிள்ளை வளவனூர்
L. பாலகிருஷ்ண ரெட்டியார் வளவனூர்
வைத்திலிங்க நயினர் ஜா. சித்தாமூர்
முத்து வீரப்ப செட்டியார் விழுப்புரம்
வீராசாமி நயினர் சாங்கியம்
ஆறுமுக முதலியார் ஜம்பை
கணபதி சோழம்பட்டு
நாகராஜ அய்யர் திருக்குணம்
சண்முகக்கவுண்டர் மேலமங்கலம்
ஆறுமுகம் பிள்ளை சத்திப்பட்டு
ஆதிநாராயணன் VM மயிலம்
P. ராமனுதக்கவுண்டர் பேரங்கியூர்
SP. லட்சுமணக் கவுண்டர் பேரங்கியூர்
செல்வராஜ் வங்காரம்

திரு / திருமதி

V. இரத்தின சபாபதி பரனூர்
வேணுகோபால் பிள்ளை பழையனூர்
வேலாயுதம் அன்னியூர்
வெங்கடேச அய்யர் தும்பூர்
அழகப்ப கவுண்டர் அரசமங்கலம்
கோபால் நாயக்கர் காரணை
G. இராமு நாயக்கர் கழுமலம்
சின்னசாமி ரெட்டியார் துறவி
A. ஜானகிராம ரெட்டியார் ராதாபுரம்
தெய்வநாயகக் கவுண்டர் பேரங்கியூர்
கி. பழனிவேல் வளையாம்பட்டு
சொக்கலிங்க முதலியார் தடுத்தாட்கொண்டூர்
R. ராமமூர்த்தி அய்யர் திண்டிவனம்
ராமலிங்கம், சக்தி சவுண்டு சர்வீஸ் புதுவை
M. முத்து, தேவன் அச்சகம், விழுப்புரம்.
A. சரவண முதலியார் திருவிடைமருதூர்
கோவிந்தசாமிப்பிள்ளை விழுப்புரம்
சிவசுப்ரமண்யம் பிள்ளை புதுப்பாளையம்
ஜானகிராமன் பேரங்கியூர்
பொன்னுரங்கக் கவுண்டர் செம்மார்
K. P. முத்து விஜய ரெட்டியார் கூரானூர்
T. S. சுந்தர ரெட்டியார் தென்மங்கலம்
திருநாவுக்கரசுப்பிள்ளை ஏரிப்பாளையம்

25வது ஆண்டு மயிலம் திருப்படி வெள்ளி விழா நினைவு மண்டப நன்கொடையாளர்கள்

திரு / திருமதி	ரூ
T. K. கோவிந்தசாமி செட்டியார் பனமலைப்பேட்டை	1001
து.சி. கோவிந்தசாமி செட்டியார் சன்ஸ் பனமலைப்பேட்டை	1001
V. A. கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை வளையாம்பட்டு	1001
R. சிவகுமார் குமாரகுப்பம் வளவனூர்	1001
அகத்தியர் இல்லம் பாண்டிச்சேரி	1000
காட்ஸ்வில் டிரேடிங் கம்பெனி, மண்ணடி, சென்னை	1000
V. சுந்தரம் அய்யர், மேலமாம்பலம், சென்னை	501
G. ஜெயராமப் பிள்ளை வளையாம்பட்டு	501
G. A. ராதாகிருஷ்ண செட்டியார் விழுப்புரம்	501
M. ஆறுமுகம்பிள்ளை அரகண்டநல்லூர்	501
செ. நா. பொன்னுரங்கக் கண்டர் செம்மார்	501
நா. மொட்டையக் கவுண்டர் மேலமங்கலம்	501
M. முத்துவீரா ரெட்டியார் சாத்தனூர்	301
N. கோவிந்தசாமிப்பிள்ளை மேலமங்கலம்	300
S. ரங்கசாமி நாடார், சீனியப்பா ஆயில் மில்ஸ் விழுப்புரம்.	251
சு. மணிவாசகம் நாகலாபுரம், திண்டிவனம்	250
ரெட்டியார் கோழிப்பாக்கம்	250
K. சரோஜா கிருஷ்ணமூர்த்தி செட்டியார் பண்ருட்டி	201
நா. கிருஷ்ணக்கவுண்டர் மேலமங்கலம்	201
நாராயணமூர்த்தி சாயச்சாலை, ஐயம்பேட்டை சென்னை	201
A. கதிர்வேல் உடையார் வி. அரியலூர்	200
M. அய்யாசாமிக் கவுண்டர் கிராமம்	200
கோ. வடமலைக் கவுண்டர் பேரங்கியூர்	102
M. முத்து தேவன் அச்சகம், விழுப்புரம்	101
வெள்ளாத் திருமலை வகையரா பேரங்கியூர்	101

திரு / திருமதி	
S P. லட்சுமணக் கவுண்டர் & ஜானகிராமன் பேரங்கியூர்	101
நா. நடேசக் கவுண்டர் கிராமம்	101
வி. மொட்டையக் கவுண்டர் தென்மங்கலம்	101
T. M. திருக்காமுப்பிள்ளை தென்மங்கலம்	101
அ. கந்தசாமிக் கவுண்டர் திருவெண்ணெய்நல்லூர்	101
செ. சுப்பராயன் ஏனாதி மங்கலம்	101
V. ஆனந்தமூல் ஜெயின், அச்சிறுப்பாக்கம்	100
வேல் மாறல் மன்றம், ஸோமேஸ்வரபுரம், அலசூர் பெங்களூர்	100
R. அசோதை அம்மாள், பேரங்கியூர்	61
E. N. பட்டாபிராமக் கவுண்டர் அண்டு பிரதர்ஸ், இருவேலிப்பட்டு	61
N. குமாரசாமிப்பிள்ளை இருவேலிப்பட்டு	52
I D. வேலாயுதக் கவுண்டர் இருவேலிப்பட்டு	51
I,D. கதிர்வேல் கவுண்டர் இருவேலிப்பட்டு	51
R. ராமநாதக் கவுண்டர் பேரங்கியூர்	51
M. சுந்தரமூர்த்தி சங்கீதமங்கலம்	51
N. தேவராஜன், திருப்புகழ் ஆசிரமம், வள்ளிமலை	51
S. பாலசுந்தரம் & நாகபூஷணம், பெங்களூர்	51
M. அங்கமுத்து கவுண்டர் அரசமங்கலம்	51
ஸாதுராம் ஸ்வாமிகள், வடதிருமுல்லைவாசல், சென்னை	50
S.V. சுப்பிரமணியம், நங்கநல்லூர், சென்னை	50
G. வேம்பு, மேலமாம்பலம், சென்னை	50
M. அருணகிரி, குசப்பேட்டை, சென்னை	50
V. பாலசுப்பிரமணியம், மேலமாம்பலம், சென்னை	50

திரு/திருமதி	
யமுனா பாலசுப்பிரமணியன், மஹாதானபுரம், சென்னை	50
T.N. கோபாலன், தி.நகர், சென்னை	50
ஸ்ரீவள்ளிமலை சச்சிதானந்த திருப்புகழ் சபை சென்னை	50
S.V. மகாதேவன், ஸ்ரீவைஷ்ணவி இல்லம், நங்கநல்லூர் சென்னை	50
M. சுவாமிநாதன், ஆழ்வார் திருநகர், சென்னை	50
S.M. மணியன், ராஷ்டிரபதிபவனம், நெய்வேலி	50
ஸ்ரீவைஷ்ணவி மாதர் திருப்புகழ்சபை, நெய்வேலி	50
V. முத்துகணேஷ் சீர்காழி	50
P.B. ஜெய்சிங், சாந்திநகர் ஹைதராபாத், (A.P.)	50
சீதா ஜெய்சிங் ,, ,, ,,	50
ஜெயபிரகாஷ்சிங் ,, ,, ,,	50
குமாரி சுஜாதா ஜெய்சிங் ,, ,, ,,	50
பிருதிவி ராஜ்சிங் ,, ,, ,,	50
E. பழனி, குவாலிடி கண்ட்ரோல் பாடி, சென்னை	50
சித்ரா பழனி, ,, ,, ,, ,,	50
V. முத்துக்குமார் சீர்காழி	50
A. மங்கலமுடையார், அண்ணாமலைநகர், சிதம்பரம்	50
ஸ்ரீவைஷ்ணவி சத் சங்கம், வேலூர்	50
N. விஜயநாராயணன் நெய்வேலி	50
M. விஸ்வநாதன், மெயின்பஜார், ஊட்டி	50
P.B. ரஞ்சித்சிங், கல்ஹாத்தி, ஊட்டி, நீலகிரி	50
P.K. நாராயணன் நெய்வேலி	50

திரு/திருமதி	
N.S. ரத்தினகுமார், இந்திராநகர். பெங்களூர்	50
T.P. நடராஜன் பெங்களூர்	50
R. வெங்கடராமன், மல்லேஸ்வரம், பெங்களூர்	50
S.M. சுப்ரமண்யஅய்யர், ஹிம்யத்நகர், ஹைதராபாத்	50
R.R. கணேசர் மஹாவீர் சௌகார், பெங்களூர்	50
S. சுப்பிரமணியம், நடக்குடி, தஞ்சாவூர்	50
ஸ்ரீலட்சுமி நாராயண சேவாசங்கம், விஜயபுரம், திருவாரூர்	50
D. செல்வராஜன் பெங்களூர்	50
B. கிருஷ்ணய்யா குடும்பத்தினர், மேல்பாடி N.A.DT.	50
ஸ்ரீமுருகன் திருப்புகழ்சபை பேட்டை வாய்த்தலை திருச்சி	50
முருகன் திருவருட்சங்கம், திருவல்லிக்கேணி, சென்னை	50
மங்கமுடையார் அண்ணாமலைநகர், சிதம்பரம்	50
ஸ்ரீமதி G. ஜெகதாம்பாள் 20. தேவராயநகர், திருச்சி	50
சத்சேவா சமிதி 23.A புதுநகர் வாணியம்பாடி 2	50
V.N. சுந்தரேசன் & P.K. ஆஞ்சநேயன் அலசூர், பெங்களூர்	50
முருகேஷ்கமலம் அலசூர், பெங்களூர்	50
T. அன்னபூரணி ஸடீபன்தெரு. பெங்களூர்	50
M. கண்ணன் சோடாபேக்டரி அலசூர், லட்சுமிபுரம், பெங்களூர்	50
கிருஷ்ணனந்த சுவாமிகள் பழையசென்னைரோடு, பெங்களூர்	50
V. விஸ்வநாதன் 1/115, மவுண்ட்ரோட், சென்னை	11
M. கோகிலாம்பாள் பிள்ளையார்குப்பம், பாண்டி	5
R. சண்முகம் G R S ஒர்க்ஷாப் விழுப்புரம்	50

24 ஆண்டுகளில் படிவிழாச் சிறப்பு நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற அறிஞர் பெருமக்கள்

ஒவ்வொரு ஆண்டும் விழாவிற்கு மயிலம் பொம்மபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் தலைமையேற்று விழாவினைச் சிறப்பித்து வருகின்றார்கள்.

திருப்புகழ் பஜனையை சாது ஸ்ரீபித்துக்குளி முருகதாஸ் அவர்கள் தொடங்கி வைத்துச் சிறப்பித்து வருகின்றார்கள்.

பங்குபெற்றோர் :

திருமுருக கிருபானந்த வாரியார்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
சிரவணபுரம் தவத்திரு சுந்தரசுவாமிகள்
அருட்கவி சாதுராம் சுவாமிகள்
மகாவித்துவான் நாகர்கோவில் ஆறுமுக நாவலர்
எம்பார் விஜய ராகவாச்சாரியார்
கிரிதாரி பிரசாத்
கொத்தமங்கலம் சுப்பு
சிவானந்த விஜயலெட்சுமி
கே. பி. சுந்தராம்பாள்
ஜெயக்குமாரி பாஸ்கரன்
மதுரை சோமு
கி. வா. ஜகந்நாதன்
முன்னாள் நீதிபதி N. கிருஷ்ணசாமி ரெட்டியார்
இரா. இராதாகிருஷ்ணன்
அ. ச. ஞானசம்பந்தம்
சோ. சத்தியசீலன்
அ. வ. ராசகோபாலன்
தெ. ஞானசுந்தரம்
சரசுவதி இராமநாதன்

மு. கணபதி
இரா. செல்வக்கணபதி
அமுதமொழி. சுவாமிநாதபிள்ளை
புலவர் சுந்தரேசம்பிள்ளை
குணபூஷணம்
ஔவை. து. நடராசன்
இரா. காந்திமதி
சுகி. சிவம்
வே. சிவசுப்பிரமணியன்
தவத்திரு. முருகதாச சுவாமிகள்
மா. வே. பசுபதி
குறளரசு. செயபாரதி
யோகி. சித்தானந்தா
K. S. காஞ்சனமாலை அம்மையார்
திருக்குறளார். வீ. முனுசாமி
செயலெட்சுமி அம்மையார்
நவசக்தி அடிகள்
திருப்புகழ் மணி T. M. கிருஷ்ணசாமி ஐயர்
பவானி. மு கண்ணப்பன்
சிதம்பரம் சுவாமிநாதன்
முன்னாள் ஆணையர். K. பாலசுப்பிரமணியன்
அண்ணாமலைநகர் மங்கலமுடையார்
மற்றும் பலர்

வேண்டுக !

பரிபாகம் இல்லாதார்க்கும் பாவ வலி போகாது. ஞானம் உதியாது. ஆதலினால் நல்ல குரு கிடைக்க முருகனை வேண்டுக.

முடியாது

சிக்கனம் இல்லாவிட்டால் செல்வர் ஆக முடியாது.
சிக்கனம் இருந்தால் வறியர் ஆக முடியாது.

இதுவாயினும் செய்

கேட்போருக்கு உதவமுடியாவிட்டாலும் எரிந்து விழாதே !

24 ஆண்டுகளாகப் படியேறும் பஜனைக் குழுக்கள்

ஞானபண்டிதன் திருப்புகழ்சபை சென்னை
அமராபதி விநாயகர் திருப்புகழ்சபை விழுப்புரம்
மனவாசகம் கடந்தார் திருமுறைப்பள்ளி பண்ருட்டி
கந்தசஷ்டி வார வழிபாட்டு சபை மேல் குமார மங்கலம்
சன்மார்க்க சங்கம் கண்டாச்சிபுரம்
சுந்தர விநாயகர் திருப்புகழ் சபை வளையாம்பட்டு
கண்ணன் பக்தஜனசபை செம்மார்
சன்மார்க்க சங்கம் மேலமங்கலம்
சௌந்தர்ய கனகாம்பிகை திருப்புகழ்சபை வீரபாண்டி
ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகள் திருப்புகழ்சபை சென்னை
ஆலய தேவார – திருப்புகழ் சபை மயிலம்
அருள் நெறிக் கழகம் திருவதிகை
தென்னிந்திய ரெயில்வே அச்சகம் } சென்னை
திருமயிலம் திருப்பணிக் குழு } சென்னை
ஸ்ரீ கோதண்டராமன் சபை பேரங்கியூர்
ஷடாங்க சமரச சுத்த சன்மார்க்க சங்கம் சித்தலிங்கமடம்
நாட்டுக்கோட்டை நகரத்தார் பஜனைக்குழு அண்டக்குடி
சன்மார்க்க சங்கம் ப. சாலை
சன்மார்க்க சங்கம் புதுக்குப்பம்
சன்மார்க்க சங்கம் தென்சிறுவனூர்
சன்மார்க்க சங்கம் அன்னியூர்
ஸ்ரீ இராதாகிருஷ்ண பஜனைமண்டலி சி. மெய்யூர்
ஹரி, ஹர, குரு, குக, பஜனைமண்டலி கோடியூர்
ஸ்ரீ முருகன் திருவருள் சங்கம் சென்னை
ஸ்ரீ சிங்காரவேலன் திருப்புகழ்சபை சென்னை
விசாலாட்சி அம்மையார் தவச்சாலை மாதர் சங்கம் வடலூர்
ஸ்ரீ வைஷ்ணவி மாதர் திருப்புகழ் சபை நெய்வேலி
ஹரி பஜனைக்குழு கழுமலம்
தில்லைத் திருமுறைக்கழகம் சிதம்பரம்
ஸ்ரீ குமாரகிருஷ்ண பக்தர்குழு தென்மங்கலம்
பாண்டுரெங்கன் பக்தசபை கிராமம்
கம்பன் அருட்கழகம் புதுவை
சத்திய சாயிபாபா பஜனைக்குழு அரியமாநகர்
மற்றும் சில.

கச்சியப்பரின் கவிநயம்

திருமுருக. கிருபானந்தவாரியார்

கடலில் முழுகி ஒருவன் சில முத்துக்களை எடுத்துத் தந்தால் கடலில் இன்னும் பல்லாயிரக் கணக்கான முத்துக்கள் இருக்குந் தானே. அதுபோல் கச்சியப்பர் கந்தபுராணக் கவிக்கடலில் முழுகி உவமை நயங்களான சில முத்துக்களை உங்களுக்கு எடுத்துக் கொடுக்கின்றேன். நீங்களும் அத்தமிழ் இன்பக்கடலில் முழுகினால் இன்னும்பல முத்துக்கள் கிடைக்கும். இதனைப்படித்த நீங்களும் முழுகி முத்துக்கள் எடுங்கள்.

கந்தபுராண முகப்பில் சிறந்து காட்சி தருவது ஆற்றுப்படலம்.

கரியமேகம்; இடையில் வளைந்த வானவில்லுடன் தோன்றிய இருண்டமேகம். இது நந்திமலையின் மீது வாய் திறந்து குளிர்ந்த நீரைப் பொழிகின்றது.

கரிய மேகத்தையும், அரிய வானவில்லையும், நந்தி மலையையும், மேகம் பொழிகின்ற மழையையும் நம் மனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்த அழகிய ஒரு உவமை கூறுகின்றார்.

கரிய வடிவுடைய கண்ணப்பர், சிறந்த வில்லுடன் சென்று, பொன்முகலி நதியில் வாயே கலசமாக நீர் முகந்து வந்து, காளத்தி மலையிலுள்ள சிவலிங்கத்தின்மேல் வாய் திறந்து நீரைச் சொரிகிறது போல் இருக்கிறது என்கிறார்.

பெரியவர்களுக்கு உயர்ந்த பொருள்தான் உவமையாக வரும். சிறியவர்கள் சிறிய பொருளைத்தான் உவமை கூறுவார்கள்.

புலால் உண்ணும் ஒரு கீழ்மகன் பந்தியில் உண்ணத் தொடங் கினான். அவனுக்கு நெய்யில் செய்த போளி என்ற பலகாரம் படைத்தார்கள். அது கனமாக இருந்தது. அவன் ' எருமை மாட்டு நாக்கு போல் மொத்தமாக சுவையாக இருக்கிறது என்றானாம். இதோ கந்தபுராணப் பாடலைப் பாருங்கள்.

"பூட்டு கார்முகந் தன்னெடு தோற்றிய புயல்வாய்
ஊட்டு தண்புனல் நந்தியங் கிரிமிசை உகுத்தல்
வேட்டு வக்குலத் திண்ணனார் மஞ்சனம் விமலற்கு
ஆட்டு கின்றதோர் தனிச்செயல் போன்றுள தன்றே."

— கச்சியப்பர்

"கண்டுஷாம்பு நிஷேசனம் புரரிபோர் திவ்யாபிஷே காயதே"
— ஆதிசங்கரர்

"கூசாமல் வேடன் உமிழ்தரு நீராடி"
— அருணகிரிநாதர்

கச்சியப்பர் மற்ெரு பாடலில், கழனிகளில் வளமாக விளைந்த கரும்புகளை வெட்டுகின்ருர்கள். ஆலேயில் இட்டு ஆட்டுகின்ருர்கள். இது அறநெறியில் நில்லாத பாவிகளை யமதூதர்கள் நரகிலே துன்புறுத்துவது போல இருக்கின்றது என்கிருர்.

நெறியிடை ஒழுகலா இழுதை நீரரை
மறலிதன் நரகிடை வருத்தல் போலுமால்
குறைபடத் துணித்தவண் குறைசெய் கன்னலை
அறைபடும் ஆலைகள் இடையிட்டு ஆட்டலே.

மற்றும் ஒரு கவியில், தேவர்கள் சூரபதுமனுல் துயருறுகிருர்கள். துன்பப்படும் தேவர்களைப் பார்த்து பிரமதேவன், அமரர்களே! நாம் வலிமை நிறைந்த சூரபதுமன் முதலிய அசுரர்களால் அல்லற்பட காரணம் என்ன? முன்பு தக்கன் சிவனை நிந்தித்துச் செய்த யாகத்தில் நாம் கலந்து கொண்டோமல்லவா? அத்தீவினைப்பயனே இது என்கிருர்.

இங்கே ஒரு உவமை காட்டப்படுகிறது. கருணை நிறைந்த தாய் தந்தையர் தமது பிள்ளைகளுக்குக் கடும்நோய் ஏற்பட்டால் மருத்துவரைக் கொண்டு அறுத்தும், சுட்டும், பட்டினி போட்டும் நோயைத் தீர்ப்பார்கள். அது கருணையின் செயலா? பிள்ளைகள் மீதுள்ள சீற்றத்தின் செயலா? பெற்றவர்க்குள்ள பெருங் கருணையே யாகும். அதுபோல் தட்ச யாகத்தில் கலந்து மகிழ்ந்த நமக்கு வந்த சிவ அபராதம் என்ற பெரும் பாவத்தைச் சூராதி அசுரர்களைக் கொண்டு இறைவன் தீர்க்கின்ருன். எனவே இது சிவன் நம்மீது காட்டும் கருணைச் செயலேயாகும். இவ்வுவமை எத்துணை அழகுடையது கவனியுங்கள்.

பெற்றிடுங் குரவ ரானேர்
பிள்ளைகள் தம்பால் நோய்ஒன்று
உற்றிடில் பிறரைக் கொண்டும்
உறுதுயர் செய்து தீர்ப்பார்
மற்றவர் தம்பால் அன்போ?
வன்கணே? அதுபோல் நம்பால்
பற்றிய பவங்கள் தீர்ப்பான்
பரமனும் இவைகள் செய்தான்

என்பது கச்சியப்பர் வாக்கு.

பெரிய புராணத்தில் முதல் திருப்பாட்டு

தவத்திரு சுந்தர சுவாமிகள்
கௌமார மடாலயம் கோயமுத்தூர்

இறைவனுடைய இலக்கணத்தை முதல் திருப்பாட்டிலேயே அருளிச் செய்திருக்கிறார் சேக்கிழார். அவன் அருவ நிலையிலேயே இருக்கும்போது உலகெலாம் உணரவும் ஓதவும் முடியாதவனாக இருக்கின்றான். மனத்தினாலே உணரமுடியாதவனாகவும் வாக்கினாலே சொல்ல இயலாதவனாகவும் இறைவன் அருவ நிலையிலே விளங்குகிறான் என்பதை 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்று தொடங்கி, அவன் கருணையினாலே அருவ நிலையில் இருந்து அருவுருவ நிலையாகிய சோதியாகத் தோன்றுகிறான்; அந்த சோதி, ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி என்பதை 'அலகில் சோதியன்' என்று குறிப்பிடுகின்றார்.

அருவ நிலையிலும் அருவுருவ நிலையிலும் நம் போன்றவர்கள் அனுபவிக்க முடியாது என்பதனாலேயே இறைவன் உருவ நிலையில் குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும், பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும், இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் கொண்டு காட்சி தருகின்றான். அப்படி உருவ நிலையில் காட்சி தருவதிலும் எங்கேயோ ஓர் அறையில் இல்லாமல் அம்பலத்தில் காட்சி தருகின்றான். அந்த அம்பலத்திலும் எழுந்தருளி அமர்ந்து காட்சி தந்தால் நாம் அனுபவிக்க மாட்டோமோ என்று ஆடிக்காட்சி தருகின்றான். ஆடினாலும் கண்ணுக்குத் தானே காட்சி, காதுக்குக் கேளாமற் போய்விடுமோ என்று கருதி அவன் சிலம்புகள் ஒலிக்கும்படி ஆடுகின்றான். "அம்பலத்தாடுவான் மலர் சிலம்படி வாழ்த்திவணங்குவாம்" என்று அருளிச் செய்கின்றார்.

தவறு செய்த சந்திரனை, தன் அடிகளிலே வந்து விழுந்த சந்திரனை முடியிலே எடுத்து அணிந்து கொள்கிறான் இறைவன். அணிந்துகொண்டான் என்று கூடச் சொல்லவில்லை, உலாவ விட்டிருக்கிறான் என்று சொல்கின்றார். அதுமட்டுமல்ல; கங்கையின் கரையில் உலாவ விட்டு, "நிலவுலாவிய நீர்மலி வேணியனாக" இறைவனை வர்ணிக்கின்றார்.

அருவ நிலையிலே இருந்த இறைவன் அருவுருவ நிலையாகிய சோதிவடிவத்திலே' தோன்றி, உருவ நிலையிலே அம்பலத்தில் ஆடுகின்ற பெருமான், கருணையினாலே தன்னை வந்து அடைகின்ற தவறு செய்பவனைக்கூட, அடியிலே வைத்துத் தேய்க்க வேண்டியவனைக்கூட முடியிலே உலாவ வைத்து கங்கைக் கரையிலே நிலவுலாவிய நீர்மலிவேணியனாக வைத்து அருள் செய்கின்றான் என்பதை எடுத்துக் காட்டி இறைவனுடைய

பெருங்கருணைத் திறத்தையும் எடுத்துப் பேசுகின்றார். இறைவனுடைய இலக்கணத்தைச் சொல்வது போல, அந்த இறைவனை நாம் வாழ்த்தி வணங்க வேண்டும் என்ற சாசனத்தையும் அருளிச் செய்துள்ளார். நிலவுலாவிய நீர்மலி வேணியனாக, அலகில் சோதியனாக, அம்பலத்தில் ஆடுபவனாக எழுந்தருளியிருக்கின்ற இறைவனுடைய மலர்சிலம்படியை வாழ்த்தி வணங்க வேண்டும் என்று வாழ்த்துதலும் வணங்குதலும் நாம் செய்ய வேண்டிய சாதனை என்பதை எடுத்துக் காட்டுகின்றார். பெரிய புராணத்தில் வருகின்ற அடியார்கள் எல்லோரும் வாழ்த்துதலும், வணங்குதலும் செய்தவர்கள் என்பதை அந்தச் சொல்லாலே எடுத்துக் காட்டுகின்றார்.

"உலகெலாம் மலர் சிலம்படி'' என்றால் உலகம் எல்லாம் மலர்வதற்குக் காரணமாக விளங்குகின்ற எம்பெருமானின் சிலம்பு பொருந்திய திருவடிகள் என்று பெரியவர்கள் கொள்வார்கள்.

'உலகெலாம்' எனத் தொடங்குகின்ற முதல் திருப்பாட்டிலே, அறுபத்து மூன்று அடியவர்களுடைய வரலாற்றைக் கூறுகின்றது இந்நூல் என்பதை எடுத்துக் காட்டுவது போல, அறுபத்து மூன்று எழுத்துக்களாலே அந்தத் திருப்பாட்டை அமைத்திருக்கிறார் சேக்கிழார் பெருமான்.

'உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்'

என்ற அந்த முதல் திருப்பாட்டில் உள்ள எழுத்துக்கள் அறுபத்து மூன்று.

அதுமட்டுமல்ல; பெரிய புராணத்தில் அறுபத்து மூன்று தனியடியார்கள் தவிர ஒன்பது தொகையடியார்கள் வருகிறார்கள்.

'தில்லைவாழ் அந்தணர்
பொய்யடிமை இல்லாதபுலவர்
பத்தராய்ப் பணிவார்கள்
பரமனையே பாடுவார்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்
திருவாரூர்ப் பிறந்தார்கள்
முப்போதும் திருமேனி தீண்டுவார்
முழுநீறு பூசிய முனிவர்
அப்பாலும் அடிசார்ந்தார்'

என ஒன்பது தொகையடியார்களைச் சேக்கிழார் பெருமான் - தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகையிலே வருகின்ற ஒன்பது அடியார்களையும்-தொகையடியார்கள் என்று குறிப்பிடுகின்றார்.

நாம் பொதுவாக உலக வழக்கில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் என்றுதான் சொல்லுவோம். ஆனால் பிரித்துப் பார்த்தால் தொகையடியார்களோடு எழுபத்திரண்டு நாயன்மார்களாக இருக்கும்.

அது போலவே இந்த முதல் திருப்பாட்டிலே பொதுவாகப் பார்த்தால் எழுபத்திரண்டு எழுத்துக்களும் இருப்பதைக் காணலாம்.

"உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு
அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகு இல் சோதியன் அம்பலத்து
ஆடுவான்
மலர் சிலம்பு அடி வாழ்த்தி
வணங்குவாம்.''

என்று பிரித்துச் சொல்கின்ற பொழுது இகர உகரங்கள் ஒன்பது மறைந்திருப்பது புலப்படும்.

அறுபத்துமூன்று நாயன்மார்கள் என்று பொதுவாகச் சொன்னாலும், சிறப்பாகச் சொல்லுகின்ற பொழுது எழுபத்திரண்டு நாயன்மார்களாக விளங்குகின்றார்களோ அதுபோல, பொதுவாகப் பாட்டினுடைய எழுத்துக்களை எண்ணினால் அறுபத்து மூன்றாகவும், பிரித்து எண்ணுகின்றபொழுது எழுபத்திரண்டு எழுத்துக்களாகவும் அமைந்திருக்கின்ற தன்மை, சேக்கிழார் பெருமானின் பெரிய புராணத்திற்கு அமைந்திருக்கின்ற தனிப் பெரும் சிறப்பு ஆகும்.

இது போன்ற பல சிறப்புக்கள், சேக்கிழார் பெருமானின் பெரிய புராணத்தில் பல இடங்களில் இயல்பாகவே அமைந்திருப்பதைக் காணலாம்.

வள்ளலார் கண்ட பூ

விண்ணிடத்தே முதல் முப்பூ விரிய அதில் ஒரு பூ
விரிய அதின் மற்றொருபூ விரிந்திட இவ்வைம்பூக்
கண்ணிடத்தே பிறிதொருபூ கண்மலர அதிலே
கட்டவிழ வேறொருபூ விட்ட எழுபூவும்
பெண்ணிடத்தே நான்காகி ஆணிடத்தே மூன்றாய்ப்
பிரிவிலவாய்ப் பிரிவுளவாய்ப் பிறங்கியுடல் கரணம்
நண்ணிடத்தேர்ந் தியற்றிஅதில் நடுநின்று விளங்கும்
நல்ல திரு வடிப்பெருமை சொல்லுவதார் தோழி!

இழப்பு

திமிர் பிடித்தவன் கௌரவத்தை இழக்கிறான்.
விஷமம் செய்பவன் நண்பனை இழக்கிறான்.
கர்மாக்களைச் செய்யாதவன் குலத்தை இழக்கிறான்.

P. V. RAJAGOPAL, B.A., B.E., I.R S.E.
Chief Engineer & Administrative Officer (Retd.)
Indian Railways
Managing Partner :
SANTOSH INDUSTRIES (Regd.)

Phone : 607427
No. 6 New Timber Yard Layout
Mysore Road
Bangalore-560 026

10-1-1980

"Lord Muruga is the Supreme Godhood, combining the glories of all important Dieties. He is the embodiment of Divine Love, Light and Beauty with matchless Power. He is present everywhere in his transendental and Subtle form, but can be felt and realised within the heart by every Devotee of His. The indweller is therefore appropriately called Guha. Climbing the steps of a hillock on which His image is installed, should not be a mechanical effort to reach the Sanctum sanctorum, but every step forward must in itself be an exhilaration of communion with Him. This is in keeping with human aspiration that every minute, in every act, one must feel the inspiration from Him, Who is residing within our hearts. The path and the goal are the same."

"Blessed are all those who live such lives and "Padi Viza" is a group participation of blessed souls".

P. V. Rajagopal

மயிலம் கீர்த்தனை

கல்யாணிராகம் பல்லவி ஆதிதாளம்

மாமயிலம் வாழும் மால் மருகா
மங்கை குறவள்ளி மகிழ்முருகா – குகா
(மாமயிலம்)

அனுபல்லவி

தீங்கனி தேன்பால் விருப்புடையாய்
தெய்வபா லையர்உறை பொருப்புடையாய்
(மாமயிலம்)

சரணம்

ஔவைக்குப் பழமீந்த அறுமுகவா
அருண கிரிக்குத்தமிழ் தருமுருகா
கொவ்வை இதழ்மிளிரும் திருக்குமரா
குவலய மக்களுக்கு அருள்முருகா
(மாமயிலம்)

அருட்புகழ் பாடியே படியேறுவார்
அரோஹரா நாமத்தால் உனைநாடுவார்
திருப்படித் திருவிழா தனைநாடுவார்
தினமுமே இவர்க்கெலாம் நலந்தருவாய்
(மாமயிலம்)

புலவர் சுந்தரேசம் பிள்ளை

வணங்குவோம் வாரீர்

பக்தியிலே எனதுமனக் குயிலிருந்து பாடும்
பாடுகின்ற போது வேலன் ஏறும்மயில் ஆடும்
உத்தமராய் விளங்கிவரும் அன்பர்குழுக் கூடும்
உலகம் மூன்றின் மகிமை கண்டு ஒன்றுகூடி நாடும்
கலையிடையில் பிங்கலையில் காட்டுகின்ற பாதி
கமலமெலாம் மலருகின்ற ககனகாட்சி யாதி
மலையாமல் சென்று விடில் காணும்மலை வீதி
மலைமுடியிற் காண்பதுவோ முருகனருட் சோதி
இணங்கி வரும் பக்தர்குழாம் மயிலமலை மீது
இன்பகீதம் பாடியாடி ஏறுகின்ற போது
வணங்கிநாம் கண்டுவிட்டால் வறுமைதுயர் ஏது
வாழ்வு வளம் கண்டிடுவோம் வையகத்தீர் வாரீர்!

(தொகுப்பு ராமதாஸ் சுவாமிகள்)

சுப்பிரமணியம்

வள்ளலார் இராமலிங்க அடிகள்

சுப்பிரமணியம் என்பது என்ன?

நமது புருவமத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தி இருக்கின்றது. இந்த ஜோதி மணியை ஷண்முகமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதன்றி, நமது மூலாதாரத்திற்கு மேல், மூன்றிடந்தாண்டி, விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலை யுடைய ஒரு நாடியிருக்கின்றது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்லுவார்கள். இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேக மென்பதையும் ஷண்முக மென்பார்கள். ஆறு ஆதாரங்களிலுள்ள ஆறு பிரகாசத்தையும் ஷண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மனிக்கப்பால் சாந்த நிறைவாயுள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவாகிய உள்ளமே சுப்பிரமணியம்.

முகம் ஆறு என்பது:— ஆறு ஜோதியாயும், ஆறறிவாயும், ஆறு தலை யுடையதாயும் இருப்பதால் முகம் ஆறு.

கால் இரண்டு என்பது:— தோன்றும் அறிவு – தோற்றுவிக்கும் அறிவு – என்னும் இரண்டறிவாகிய விஷய உணர்ச்சியும், நிர் விஷய உணர்ச்சியுமேயாம்.

ம – 7

கை பன்னிரண்டு என்பது:— ஆறு ஆதாரங்களிலுள்ள பிரகாச – அப்பிரகாச மாகிய – பன்னிரண்டுமாம்.

தசாயுதம் அபயவரத
மென்பவை யாவெனில்

1. வச்சிரம் என்பது — தீக்ஷண்ணிய வுணர்ச்சி ;
2. வேல் என்பது — சத்தி
3. அருள் என்பது — அறிவு ;
4. மணி என்பது — ஆன்ம விளக்க மாகிய நாதம்;
5. த்வஜம் என்பது — புகழாகிய கீர்த்தி ;
6. ஸரஸிஜம் என்பது — தயவு ;
7. குக்குடம் என்பது — மாச்சரிய மில்லாத நிறைவு ;
8. பராகம் என்பது — பாசநீக்கம்
9. தண்டம் என்பது — வைராக்கிய அறிவு;
10. பாஸம் என்பது — அன்பு

அபயம் என்பது — சமாதான உணர்ச்சி;

வரதம் என்பது—நிராபாரமாகிய ஆதரவென்னுஞ் சகிப்பு.

கடப்பமாலை என்பது:— சர்வ தத்துவ கண்டனம்

மயில் என்பது :—

பல வர்ணமுள்ளதும், விசித்திர வடிவ மானதும், மறதி முதலிய குணங்களுக்குக் காரணமானதும் மாயைக்கு இருப்பிடமா யுள்ளதுமான மூலப்பிரகிருதியே மயில்.

மயிலின்மேல் சுவாமி ஏறிக்கொண் டிருத்தல் முதலியவற்றிற்குக் காரணம் என்ன வென்றால்:—

பிண்டாண்டமாகிய இந்தத் தேகத்திலும் அண்டத்திலும், மூலாஞ்ஞான காரணமா யுள்ள கேவலமாகிய பிரகிருதி, மாயையின் அசுத்த கேவலமாகிய அசுத்தாசுத்த மகா அலங்காரமென்னும் இராக்ஷச அம்சமான சூர தத்துவம், அதின் சோதரமான மூவகைத் தத்துவத்தோடு, அஞ்ஞான தசையில், ஆன்ம அறிவையும்;— பிண்ட விளக்கமான தேவர்களேயும் - விஷய விளக் கமான இந்திரியங்களையும், — நாடி விளக் கமான யந்திரங்களையும், — பிராண விளக் கமான உயிரையும் — விழுங்கி தன்னரசு செலுத்தும். அந்த சூர தத்துவத்தை வதைக்கும்போது, ஷ தத்துவம் மகா மாயையாகிய மாமரமாயும், மாச்சரிய மாயும் கோழியாயும், விசித்திர மாயை என்னும் மயிலாயும் மகாமதமாகிய யானை முகமாயும், அதி குரோதமாகிய சிங்க முகமாயும் விளங்கும்.

சர்வதத்துவங்களையும் தன் வசமாக்கி, அகங்காரக்கொடிகட்டி, அஞ்ஞான நாடகம் செய்த தத்துவ அகங்கரிப்பை அடக்கி, பதி, பசு, பாசம், அநாதி நித்தியம்; என்னும் சித்தாந்தத்தை விளக்கிக் காட்டுவதற் காக, மாச்சரிய குக்குடத்தைப் போதமாகிய கையால் அடக்கியும் — விசித்திர மாயை யாகிய மயிலைக் கீழ்படுத்தி மேலிருந்த டக்கியும், - ஆபாச தத்துவங்களைச் சம்மரித் தும், — சுத்த விஷய புவனமாகிய தேவ லோகத்தை நிலைபெறச் செய்தும்,- இந்திர பதியான தேவேந்திரனுடைய பெண்ணு கிய தாந்தர தத்துவ மென்னுந் தெய்வ யானையை இடப்பாலமைத்தும், - இந்திரி யங்களாகிய வேடர்களின் கண்ணிற் புலப் பட்ட மானசமென்னும் மானினது கர்ப்பத் திலுண்டான வள்ளியாகிய சுத்த மனதை வலத்தில் வைத்தும்:- நவதத்துவ காரண மாகிய நவவைராக தத்துவமாகிய வீரர் களைச் சமீபத்திலிருத்தியும், சகல கேவலங் களுக்கும் நினைப்பு மறப்புக்கும் இடையில்- விவேகவடிவாயும்,-பாத முதல் நாபி வரை யில் உஷ்ணஉருவாயும் நாபிமுதல் கண்டம் வரையில் ஆதார நாடி உருவாயும்,-கண்ட முதல் புருவ மத்தி வரையில் மணி உருவா யும் - உச்சியில் ஒளி உருவாயும் - புத்தியில் சுத்த அறிவாயும் அனுப வத்தில் நித்தியமாயும் - எங்கும் நிறைவா யும் கோணத்தில் ஆறும், - எக்காலமும் மதங்களில் ஆறும் சமயத்தில் ஆறும் — ஜாதியில் ஆறின் கூட்டமாயும் - விளங்கு கின்ற உண்மைக் கடவுளே சுப்பிரமணியம்.

சுப்பிரமணியம் ஒருமுகம், - மூன்று முகம், - நான்கு முகம், - ஆறுமுகம் — ஆனதற்குக் காரணம்:

ஒன்றுமிரண்டு மல்லாத ஒப்பற்ற பரப் பிரம சொரூபம் நம்பொருட்டுக் குழூஉக் குறியாய் - பாவனைக்கு ஒன்றென்று நிச்ச யிக்கும் பரகாரண நிமித்தமாகிய அறிவுரு வமே ஒரு முகமென்று ஞானிகள் சொல்லு வார்கள். சுத்த ராஜசம், - சுத்த தாமசம்,- சுத்த சாத்விகமாகிய மூன்று குணங்களின் கூட்ட விளக்கமாகிய முக்குண விளக்கமே மூன்று முகம். பசுமனம் சுத்தமனம், உள் மனம், சங்கலித மனம் என்னும் நான்கு தத்துவங்களின் கூட்ட விளக்கமே நான்கு முகம். சத்தவறிவின் மூலம், ஒலியறிவின் மூலம், - சுவையறிவின் மூலம், - பரிசவறி வின் மூலம், - வாசனையறிவின் மூலம்; — ஆத்ம அறிவின் மூலம் - என்னும் ஆறு

தத்துவங்களின் கூட்டறிவின் மூல காரண பிரகாச விளக்கமே ஆறுமுகம்.

மயிலின் காலின்கீழும் வாயிலும் பாம்பு இருப்பதென்ன?

விசித்திர மாயையின் காரியவுருவமான அகங்காரம் தோன்றி வெளிப்படுங்கால், மூலாங்காரணத்திலும் அதிகரிப்பிலும் பிராணவாயு வென்னும் பாம்பானது கீழும் மேலும் உண்டாயினும், அகங்காரத்தின் முகப்பாகிய மயில், வாய் மூலமாய் பிராண வாயுவினது வேகத்தை அது விழுங்கிக் கொண்டிருப்பது இயற்கைதான்.

படைவிடென்ப தென்ன?

அடங்கி இருக்குமிடம். அடங்கியிருக்கும் ஸ்தானங்களே இயற்கை விளக்கம் தங்குமிடங்களாகும்.

இவற்றிற்கு ஊர் - 6 - ஆவானேன்?

1. ஏரகம் என்பது:- அழகு பொருந்திய உள்ளம் என்னும் இடம்.

2. திரு ஆவினன் குடி என்பது:- திரு - ஆ—இனன்—குடி : திரு-இலக்குமியாகிய சந்தோஷமும், ஆ — பசுவாகிய விளக்க மென்னுஞ் ஜீவனும், இனன் - சூரியனுகிய புத்தியும் ஒன்று கூடி விளங்கும் ஆன்ம அறிவின் சுத்த காரிய இடம்.

3. பழமுதிர்சோலை யென்பது:- இந்திரிய – கரண – ஜீவ முதலிய அனுபவப் பழங்களாகிய பிரயோசனவின்பங்கள் நீங்கிக் குறைவற்ற அறிவாய் விளங்கும் இடம்.

4. திருச்சீரலைவாய் திருச்செந்தில் செயந்திபுரம் என்பன:— சுத்த மனத்தின் முகத்தில் விஷயக் கடலின் அவாவாகிய அலையடித்துக் கொண்டிருக்கும் இடமாகிய கரை, செந்துக்களினது இருதய ஸ்தான மாகிய மனம், அஞ்ஞான சூரனை நிவர்த்தித்துச் சந்தோஷகரத்தைப் பெற்ற பதி மனத்தின் விளக்கம்.

5. திருப்பரங்குன்றம் என்பது:- அசை வில்லாத ஒன்ருன விளக்கத்தையுடைய விவேக உல்லாச இன்ப நிறைவு.

6. குன்றுதோருடல் என்பது:— மலை தோருடல். மலை என்பது-அலைதல் இல்லாத உணர்ச்சிக்கு முதற் காரணமாயுள்ள துரிய நன்னிலை. இத்துரியம் — 1. ஜீவதுரியம் 2. பரதுரியம், 3. சுத்ததுரியம், 4. குருதுரியம், 5. சிவதுரியம் 6 சத்திதுரியம் முதலிய துரிய மலைகள் அனுபவக் காட்சியில் அனந்தம் உண்டு. மேற்குறித்த அனுபவக் காட்சிகளுக்குத் தேகத்தினிடம்:- 1. கோசத்தினடி. 2. தொப்புளின்கீழ், 3. தொப்புள், 4. வயிற்றில் தொப்புளுக்குமேல்,மார்புக்குக் கீழ் 5. மார்பு, 6. நெஞ்சு ஆக ஆறு.

பிரமாவைச் சிறையில் வைத்ததென்பது யாது?

சுத்தமன சங்கல்ப சிருஷ்டித் தொழிலையுடைய பிரமாவாகிய மனத்தைக் கிரியையில் பிரவேசிக்க வொட்டாமல்.சுத்த விளக்க விவேக நிறைவாயுள்ள சுப்பிரமணிய தத்துவத்தால் — சர்வபிண்ட விஷயங்களாகிய 1) தோன்றல், 2) வளர்தல், 3) குற்றம் நீங்கல். 4) ஒன்றினிடத்தில் மலவடைதல் 5) தெளிதல், முதலிய பஞ்சகிருத்தியங்களை விவேக முன்னிலையில் நடத்துங்கால் – சலிப்பறப் பந்தித்து இருப்பதே சிறையிட்டது.

ஈசுவரனுக்கு உபதேசித்த தென்ன?

உருத்திர தத்துவமாகிய – பிரேரக நிலையான – காரண தத்துவ முடிவான ஈசுவர தத்துவத்தினியற்கை ஞானம் ஏறிக்-கிரியை குறைந்திருப்பதால், கிரியா காரண பூதமாயும் - ஞான காரண அமிசமாயும் விளங்கும் பிரணவமாகிய உண்மை நிறைவான கிரியையற்ற நிர்விஷய அனுபவம் ஈசுவரதத்

துவத்திற்கு - நியதி செய்வது-சுத்தவிவேக தத்துவ அதிஷ்டா-தாவான சுப்பிரமணியம் அன்றித் தோன்ருது. இது பற்றி யுபதேசஞ் செய்தா ரெனலாயிற்று.

கங்கையிலுள்ள நாணற் காட்டிற் பிறந்தது என்பது என்ன?

ஆன்ம இயற்கைக் குணமாகிய தயவே கங்கை. ஆன்மாவின் அனுபவ மத்திய நிலை யாகிய சகித்தலென்னும் - சர்வ விஷயங் களிலும் அகங்காரமென்றும் தலையெடா மல் - கீழ்ப்படிந்த குணமே நாணல், இவ் விரண்டின் மத்தியில், அனுபவத்திற்கு இயற்கை விளக்கமாய் விளங்கும் பகுத்தறி வாகிய விவேகம் தோன்றுவதே உற்பத்தி யானது.

பின் கார்த்திகை அரிவை பால்கொடுத்த தென்ப தென்ன?

விவேகம் விளக்கம் தோன்றுங்கால், பெண்பாலின் குணமாகிய சமனையென்னும் சக்தியின் விளக்கத்தால் இன்பமாகிய அமுத கிரணம் விவேகத்திற்கு ஊட்டுவதே பால் கொடுத்தல்.

சுவாமி அம்மையிடத்தில் குழந்தையைக் கொடுக்க அம்மை குழந்கை ஆறையும் ஒன்ருய்ச் சேர்த்துக் கையால் தடவ முகம் ஆறும் ஒன்றி வேருயும், உடல் ஒன்ருயும், கால் இரண்டாயும் ஆனதென்ன?

பரமாத்மாவாகிய சுவாமி — அரு ளென்னுஞ் சக்தியுடன், — தயவென்னும் நதிக்கரையில் - சகிப்பென்னும் நாணற் காட்டில், - சமாதி முதலிய காலத்தில் — தோன்றி விளங்கும்போது, சுத்த வாசனு தோற்றமாகிய அறுபொறியாகிய குழந் தையை அருள்வசமாக்க, அருட்சக்தி விகார மின்றி அவிகாரமாய் அது பொறியையும் அருட்போதக்கையால் அடக்க விஷயங்களை அறிந்து தேயாமலிருக்க அறுபொறிகள் ஒன்ருயும், குறி ஆருயும், அனுபவ விளக்கம் சாதன விளக்கமிரண்டும் திருவடியாயுந் தோன்றி சமாதிநிலை விளங்குவதே.

பிண்டத்தில் இவ்வண்ணமாக இருக்க அண்டத்தில் இவற்றிற்கு ஊர், ஆலயம் மூர்த்தி, செய்கை முதலியன உண்டா வானேன்?

ஆன்மாக்கள் புண்ணியபாவ கருமங்க ளால் பேதப்பட்டு, மந்தம் மந்ததரம், ராஜ சம், தாமசம், கருமம் முதலிய வேறுபாடு களால் அனுதி தொடங்கி இன்றளவில் — உயிர்த்திரள் ஒன்ருனலும் காரணக் கூட்டு றவால் வெவ்வேறு தன்மையாய் விளங்கு கின்றன. ஆதலால் மா கருணையுடைய கிருபாநிதியாகிய சிவபெருமான் திருவருளை அங்கையிற்கனி யெனவுணர்ந்த அனுதி நித்திய முத்த சித்தராகிய, ஈசுவர தத்துவ புவனனுபவ ஈசுவரனல் நாம் உய்யும் பொருட்டு உலகத்தின்கண், 1. பாசநூல் 2. பசு நூல், 3. பதிநூல் 4. அனுபவ நூல் என்னும் 1. புராண, 2 வேத, 3. ஆகம 4. உபநிஷத்துக்கள், உண்டு பண்ணப்பட்டு இருக்கிறன. அவற்றின் வாயிலாகக் கர்ம காண்டம், பத்திகாண்டம், உபாசன காண்டம், தந்திரகலை, மந்திரகலை, உபதேச கலை முதலிய பேதங்களும், இவற்றிற்கு முக்கியமான ஆசாரம், வருணம், ஆசிரமம் முதலியவைகளும், இவற்றிற்கு ஏதுவான சரியையாதி நான்கும் இவற்றிற்கு அடை வாகிய சாலோகாதி நான்கும் இவற்றிற்கு மார்க்கமாகிய தத்துவம், புவனம், பதம், வர்ணம் மந்திரம். கலை முதலியனவும் நிர்ணயத்து பாபநாசத்திற்கு ஏதுவான அனசன, சாந்திராயண முதலிய பிராயச் சித்தங்களைவிதித்து. இவைகள் செய்வதற்கு யோக்கியமான நதி முதலியவற்றையும். அவற்றிற்கு அங்கமான தத்துவானுபவங் களாகிய உண்மை நாமங்கள் கெடாதிருக்க — திருப்பெயர் முதலியவைகளை, மூர்த்தி

ஸ்தல முதலியவைகளுக்கு ஏற்படித்தி வழங்கச் செய்தார்கள்.

உபாசிக்கின்றவர்களுக்குத் த த் து வ நாமங்கெடாமல் அருட்சக்தி தோன்றக் கிருத்திகையையும், வேதாந்த விளக்கத் திற்கு விசாகத்தையும், சதா [சுபத்தைக் குறிக்கச் செவ்வாயையும், ஆறு குறியைக் குறிக்கச் சஷ்டியையும், ஞான நிறைவைக் குறிக்கத் தைப்பூசத்தையும் சுட்டினுர்கள். தத்துவங்களைக் கையிலெடுத்து ஆடுவதான போதமென்னுங் கையால், விஷயபலத்தைத் தத்துவமாகிய காவடியில் கட்டித், தானு கிய தோளிலேற்றித் தான் கெட்டுத் தான் அவனுகிப் போத வடிவனுய், சங்கல்ப தீவிரனுய், சுப்பிரமணிய தத்துவமாய், விளங்கும். திருவுருவ முன்னுக்கு விஷயா பாவ நியாயமே காவடி எடுத்ததாயும், சுத்த வைராக்கிய நிச்சய சிவபோதமே இடும் பனுயும் குறிக்கப் பட்டிருக்கின்றன. இரு தயாகாச ஷட்கோண வடிவமே யந்திரமாய் அதின் அங்க வேறுபாடே நாற்பத்து முக் கோணமாய், உபாங்கமே நவகண்டமாய்,– உண்மையே சகரமாய், - விஷய நீக்கமே ரகரமாய், – நித்திய திருப்தியே அகரமாய், – நிர்விஷயமே ண கரமாய், – பாப நீக்க ஏதுவே பகரமாய், – ஆன்ம இயற்கைக் குணமே வ கரமாய் – விளங்குவதே ஆறு எழுத்து. நமது சரீர இருதய ஸ்தானமே – கோயிலாய், மாயா விசித்திரமே மயிலாய் நாபியந்தமே-கொடிமரமாய், பஞ்ச கோசங் களே — பிரகாரமாய், முக்குணங்களே — வில்வமரமாய், ஆன்ம தயையே - தடாக மாய், வாயே–வாசலாய், அனுபவ நிலையே – கோபுரமாய் விதிக்கப்பட்டிருக்கின்றன.

ஞானிகள் கடவுளை எங்கும், உபாசிப் பார்களென்றும், யோகிகள் இருதயத்தி லுபாசிப்பார்களென்றும், கர்ம காண்டிகள் அக்கினியில் உபாசிப்பார்களென்றும் பத்தி காண்டிகள் விக்கிரகத்தில் உபாசிப்பார்க ளென்றும் விதித்திருக்கிறது.

அதற்கு ஒத்த வண்ணம், தத்துவ விசா ரத்தையே ஆலய மாக்கினுர்கள். ஆலயத் தில் விளங்கும் மூர்த்தியின்பால் — பாசங் களில் செல்லும் ஆன்மாக்களை, சிவபாசத் தில் பாச நூலைக்கொண்டு அழுத்தி, பசு நூலைக்கொண்டு மேற்குறித்த தந்திரமந்திர கலைகளைக் குரு மூலமாய் உபதேச கலையால் விளக்கி காண்டத்திரயத்தால் நிலைக்கப் பண்ணி, பதி நூலால் அறிவை விளக்கி. அனுபவ நூலால் சமாதியைத் தெரிவித்து இருக்கிறது. இவற்றைச் சீவர்கள் மறவா திருக்க மானைக்காட்டி மானைப் பிடிப்பது போல் ஆலயத்தில் மூர்த்தியாகிய சண்முகப் பெருமானைத் த த் து வ உருவமென்று வி ள க் கி க் காட்ட, அர்ச்சகவுருவமான ஆசாரியன்; நமது அறிவாகிய கற்பூரத்தில் சுப்பிரமணிய உண்மையாகிய விளக்கமென் னும். பிரகாசத்தைக் கொண்டு அசுத்த விஷய முதலிய எண்ணங்கள் நம்முடைய பொறிகட்குப் புலப்படாமலிருக்க உண்மை நாதக் குறியாகிய மணியொலியுடனே தரி சிப்பிக்கச் செய்தும்; வேறு பராக்கன்றித் த தாகாரமாய் நி ற் க, நமது தரத்திற் கொத்த உபசாரதியர்களால் வ ழி ப ட ச் செய்தும் — தத்பலமடைய உத்தமர்கட்கு அன்னவினியோகம் செ ய் வ து மார்க்க மென்று சித்தாந்தம் பண்ணினுர்கள்.

இவ்வண்ணமாய்,அனுதி தொட்டு இன்று வரை சென்ற நாட்களிலுள்ள அருணகிரி யார், குமரகுருபரர், நக்கீரர் முதலிய மகான்கள் தொண்டு செய்து, உ த் த ம ஞானிகளாய் நித்திய முத்தர்களாய் விளங்கு கின்றுர்கள். ஆதலால், நாம் யாவரும் அவ்வுண்மைக் கடவுளை வேதகாம விதிப்படி உண்மையாய்ப் ப த் தி செய்து அவர் அருளைப் பெறவேண்டும்.

சூரபத்ம சம்ஹாரம் என்பது:—

பதுமாசுரன் என்பது:- பதுமம் – நாபி அ – அவா, சுரன் – சுழித்தி எழுதல்; நாபியிளிடமாய் அடங்காமல் எழும்பும் குணத்தை அடக்கியும், தடைபடாதது பத்மாசுரனுகிய அவா. கஜமுகம் என்பது- மதம், சிங்கமுகம் என்பது-மோகம். இவைகளை வெல்வது ஐந்தறிவாலும் உபசத்தியான பஞ்ச சத்தியாலும் கூடாது. ஆதலால் சிவத்தால் தடைபட்டது.

சுப்பிரமணியம் என்னும் ஷண்முகரால் சம்மரிக்க வேண்டியது எப்படி? எனில்:

பஞ்ச சத்தியோடு அனன்னியமாகிய சம்வேதனை என்னும் அருட்சத்தியையும் கூட்டிச் சுத்த அறிவே வடிவாகிய ஆறறிவென்னும் முகங்களோடு, சுத்தஞானம், சுத்தக்கிரியை. என்னும் சத்தியுடன், கூர்மை பொருந்திய வேல் என்னும் விவேகத்தால் தயாவடிவாய் அவாமோக மதங்களை நாசஞ்செய்வது சூரசம்மாரம், மயில் என்பது — மேற்படி தத்துவங்கள் நஷ்டமானுலும் அவற்றின் அக்கிரமம் அதிக்கிரமம் கெட்டுக் கிரமமாத்திரம் இருப்பது. பூர்வ வாசனுதிகள் பலவண்ணமாய் விரிந்து ஆடுவது இயல்பாதலால். அவற்றை அசையவொட்டாது மத்தியில் ஏறி இருப்பதாகிய சுத்த அறிவே ஷண்முகம். விகல்பஜாலமே — மயில். இவ்வண்ணமே அண்டத்திலும் உண்டு. மேலும், நமது புருவ மத்தியில் – ஆறுபட்டையாய் – மணிபோல் ஓர் ஜோதியிருக்கிறது. அந்த ஜோதியே ஷண்முகம்.

பன்னிரு கண்மலர்

பன்னிரு கண் மலர்மலர்ந்த கடலே ஞானப்
பரஞ்சுடரே ஆறுமுகம் படைத்த கோவே
என்னிரு கண் மணியேஎம் தாயே என்னை
ஈன்றுனே என்அரசே என்றன் வாழ்வே
மின்னிருவர் புடைவிளங்க மயில்மீதேறி
விரும்பும் அடி யார்காண மேவும் தேவே
சென்னியில்நின் அடிமலர் வைத்(து) என்னை முன்னே
சிறுகாலை ஆட்கொண்ட தேவதேவே.

— அருட்பா

"திருப்போரூர்ச் சந்நிதி முறை"

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
பேரூராதீனம், பேரூர்

திருப்போரூர் என்பது தமிழ் நாட்டின் தலைநகரமாகிய சென்னை நகருக்கு அண்மையில், மாமல்லபுரம் செல்லும் சாலையில் உள்ள முருகன் தலம். திருப்போரூர்ச் சந்நிதி முறை என்பது திருப்போரூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானைப் பற்றிப் பாடிய நூல் எனப் பொருள்படும். முறை-நூல். திருப்போரூர்ச் சந்நிதியில் கூறிய முறையீடு எனினும் ஆம். முறை-வலியரால் நலிவெய்தினர் அவரை ஒறுத்துத் தம்மைக் காக்கும்படித் தம் தலைவனிடம் வேண்டிக் கொள்ளுதல். வினைப்பகையால் நலிவுற்றார் அதனைத் தேய்த்துத் தம்மை உய்யக் கொள்க வெனத் திருப்போரூர் முருகப் பெருமானிடம் முறையிட்டுக் கொள்ளுதற்குரிய நூல் ஆதலின், திருப்போரூர்ச் சந்நிதி முறை எனப் பெயர் பெற்றதெனலாம்.

இந் நூலை ஆக்கியோர் தலைசிறந்த முருகன் அடியார்களுள் ஒருவராகிய சிதம்பரசுவாமிகள் ஆவர். இச்சிதம்பர சுவாமிகள் காலம் 17ஆம் நூற்றாண்டு என்பர். இவர்கள் நம் திருப்போரூராதினத்தின் ஆதி குரு முதல்வராய் விளங்கிய அருள்மிகு சாந்தலிங்க அடிகளார் மாணுக்கராகிய குமாரதேவரிடம் அருளுபதேசம் பெற்றவர். இப்பரம்பரை வீரசைவப் பரம்பரையாகும். இவர் முருகனையே முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபட்டவர்.

முழுமுதற் பொருளாகிய முருகப் பெருமானே குருவடிவாய்க் குமார தேவர் என்னும் திருநாமத்துடன் வெளிப்பட்டுத் தமக்கு உபதேசம் செய்ததாக

"திடம் பெறு கலைகள் அனைத்தும்
நின்றேத்தும் செய்ய
தாள் பூமிசை பொருந்த, நடந்து
வந்தருளல் குமார
சற்குருவாய் நாயினேன் இருள்தெறு
சுடரே;
அடர்ந்திடு பிணியா லுனது
மெய்யடியான் அசைவுரு
தளித்தருள் புரிவாய், தடங்கரி திரியுஞ்
சந்தனப்
பொழில்சூழ் சமரமா புரியுறை
குகனே"

என்னும் பாடலில் கூறுகிறார். தம் குருவாகிய குமாரதேவர் பற்றி நெஞ்சுவிடு தூது, பதிகம் என்னும் நூல்களும் இயற்றி யுள்ளார்.

இவர் முருகப் பெருமானையே முழு முதற் பொருளாகக் கொண்டு வழி பட்டார் என்பதனைக் "குண்டலியோ டைஞ் சத்தி மாமுகமெனப் படைத்த" எனவும் "அறுசமயக் கடவுள் வேறு வேறின்றியான் ஒருவனே யங்கங் கிருந்தன்பர்க்கு முத்திதரு வித்தென்றி யாவர்க்கும் அறிவித்த வதன மணியே" எனப் பிள்ளைத் தமிழில் வருவனவற்று லும் பிறவற்றாலும் அறியலாம்.

இவர் அருளிய சந்நிதி முறையில் முருகப் பெருமான் தமக்கருளிய உபதே சத்தை, மக்களெல்லாம் அறிந்து உய்தற் பொருட்டுப் பல பாடல்கள் அமைத்துப் பாடிச் சென்றுள்ளார். பதியியல்பு, பாச இயல்பு, பசுஇயல்பு, பந்தம், முத்தி ஆகியவை பற்றிய நுண்பொருள்கள் பல இச்சந்நிதி முறையில் ஆங்காங்கு விரவிக் கிடப்பதைக் காணலாம். இவையெல் லாம் இவர் குருமூலமாகக் கேட்டவை யேயாம் என்பதனை "ஐந்தொழிலும் எனது; இவற்றுள் சிருட்டி முதலிய மூன்றும் சடத்தில் நிகழும்; திரோபவம், அநுக்கிரகம் இரண்டும் சித்தில் நிகழும்; வினை காரணமாய் உயிர் இவற்றின் உண்மையை அறிய மாட்டா; இவற் றிற்குக் காரணமாகத் தன்னையும் பிறரை யும் கருதிக் கொண்டு விழைவு, வெறுப்பு முதலிய வயப்பட்டு மீண்டும் வினையைச் செய்து பிறப்பிலாழும் உயிர் சுதந்திர மிலி; பாசமான கருவிகள் முழுதும் சடம். இவற்றை நடத்தும் பதி நான்! "இவை பகுத்துண் சுதந்திரமறச் சிந்தனை செய் பந்தமறு மென்றெனக் கருள் குரவ செங்கீரையாடியருளே" எனவரும் பிள்ளைத்தமிழ்ச் செய்யுளாலும், பிறவற் றாலும் நன்குணரலாம். இவ்வாறே பிள்ளைத் தமிழில் சப்பாணிப்பருவம் செய்யுள் 4. சிறுதேர்ப்பருவம் செய்யுள் 4, 5, ஆகியவற்றினும் முருகப்பெருமான் தமக்கு அருளிய உபதேசப் பொருளைப் பாடியுள்ளார். சப்பாணிப்பருவம் நான் காம் செய்யுளில் வேதாந்த தசாவத்தை யை அமைத்துப் பாடியுள்ளார்.

"தட்டா திருந்த சிவமென்றுந்
தானென்றிளைக்கும் மயலகற்றித்
தானே யதுவா யதுதானுய்த் தயங்கு
மோனந்தர வருக"

எனவும்,

'இரும்புண்ட நீரில் திரும்பாத
வீடுதரும்
இனிய கவுணியர் விளக்கே"

எனவும்

"சிற்றறிவொன்று நினைப்போடு
நித்திரை சேர்ந்தியங்கு
மற்றிவை நீங்கி லதுதானேவைகளு
மாகிநின்ற
அற்றமில் பேரறி வூடே கலந்திடு
மாயவிதே
பற்றறு முத்தியென் முன்சம ராபுரிப்
பண்ணவனே"

எனவும்

"படல முரித்தவிழி பானுவைக்
கண்டாற் போல்
உடல முத லாணவநோ யோட்டி -
அடியிணையைக்
காட்டியநீ மீட்டுங் கன மயக்கிற்!
போரூரா
கூட்டியெனை யாட்டாதாட் கொள்"

எனவும் வரும் பாடல்களில் முத்தியின் இயல்பை விளக்குகின்றார். நீதி இயலில் "ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள் எஞ்ஞான்றும், காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே. இன்பம் பரனை நினைந்து இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு" என்றொரு பாடல் ஔவையார் பாடியதாகக் கேட்கிறோம்.

தத்துவ இயலில் சிதம்பரசுவாமிகள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் விளக்கும் முறை மிக வியப்பிற்குரியது.

என்போதம் நின்பாலே யிதலே
நல்லறனும்
உன்போதங் கைகொள்வ
தொண்பொருளாம் – உன்பாதத்
தானந்தம் இன்பமாம் ஆரமுதே
போரூரா
மோனந்தான் வீடாகும் மொய்த்து

என்னும் பாடல் ஆன்மா தற்போதத்தைக் கெடுத்துச் சிவ போதத்தால் திருவடியின்பத்தை யனுபவித்து அசைவறநிற்கும் தன்மையினை எவ்வளவு அழகாகக் கூறுகிறது.

இங்ஙனம் சாத்திர முறையில் மட்டுமன்றி – இலக்கியச் சுவை நோக்கிலும் சந்நிதி முறை புலவர்களுக்குப் பெரு விருந்தாய் விளங்குவதாகும். பிள்ளைத் தமிழிலும் அலங்காரம் என்னும் பகுதியிலும் மிக அற்புதமான கற்பனைகளும், வருணனைகளும் சுடர்விட்டொளிர்கின்றன.

"ஆடக நன்கத் தரியால் வேருக்
கம்பு திருத்துவ போல்
அலவன் குறுமுள்தாள் கொடு
குவளையொ
டம்புய இதழ் கிள்ளும் ஓடை"
(பிள்ளைத்தமிழ் முத்தம்-8)

ஆயன் குழலிசை கேட்கும் பணமுடி
யாடரவம்
வாயையங் காந்து மணிகா லுதல்
வள்ளல் பாடல் கொண்டு
தூயகொடை கொடுத்தாங்குறும்
போர்ச் சுராதிபனை
நாயகனைக் குமரேசனை நாடுவர்
ஞானிகளே
(அலங்காரம் 11)

என்பன போன்ற பாடல்கள் காண்க.

உள்ளம் உருகும் திறத்தனவான தோத்திரப் பாடல்களுக்கு அளவேயில்லை. "ஏது பிழை செய்தாலும் ஏழையேனுக் கிரங்கித் தீது புரியாத தெய்வமே – நீதி தழைக்கின்ற போரூர்த்தனி முதலே நாயேன், பிழைக்கின்றவாறு நீ பேசு" எனவும்

"நோயுற்றடராமல் நொந்து மனம்
வாடாமற்
பாயிற் கிடவாமல் பாவியேன் -
காயத்தை
ஓர்நொடிக்குள் நீக்கியெனை யொண்
போரூர் ஐயா நின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து"

எனவும் வரும் பாடல்களில் அமைந்துள்ள உருக்கமான வேண்டுதல்களை ஓதி உணர்க.

சிதம்பரசுவாமிகள் தமக்கு முன்னே முருகனுக்கு அடிமை பூண்டு ஒழுகிய நக்கீரரையும் அருணகிரிநாதரையும் பல இடங்களில் குறிப்பிடுகின்றார். அவ்வருளாளர்கள் அருளிய பாடல்களின் கருத்துக்களும் சாயல்களும் இந்நூலில் பல இடங்களில் காணப்படுகின்றன. திருவாசகத்தைப் போன்ற செய்யுளமைப்பையும் நாம் இச்சந்நிதி முறையில் காணலாம். இதுவரை பிற புலவர்களால் கையாளப்படாத நூலமைப்பு முறை சன்னிதி முறையில் கையாளப்பட்டுள்ளது. அலங்காரம், மாலை, தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி, சின்ன கட்டியம், பெரிய கட்டியம், எச்சரிக்கை,

திருவடிப்பற்று, குயிற்பத்து, கிளிப்பத்து, வண்டுவிடுதூத, சித்தொளி, சிற்சுகம் முதலிய பல தலைப்புக்களில் இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன. இது தமிழ் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க சிறப்புமிக்கதொரு வளர்ச்சியைக் காட்டுகிறது என்பதனை இலக்கிய வரலாற்று ஆராய்ச்சியாளர் உணர்வர். சந்நிதி முறை என்னும் பெயரே ஒரு புதிய அமைப்புடையது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இங்ஙனம் பெரும் புலவராகவும், தத்துவ ஞானியாகவும், அனுபூதிமானுகையும். விளங்கிய சிதம்பரசுவாமிகள் தம்மை

இல்லறத்தான் அல்லேன் இயற்கைத்
துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன்
– சொல்லறத்தின்
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்த திருப்
போரூரா
என்றே நான் ஈடேறு வேன்
(மாலை – 7)

எனவும் இறுதிப் பகுதியில் அமைந்த பொருட்சுவையை ஓசைவிகற்பத்தான் ஓதி யுணர்க.

மெய்யடியார் போல மிகநடிப்பேன்
மெய்யடியார்
செய்யடிமைத் தொண்டேதும்
செய்திலேன் – பொய்யடியேன்
உன்னுட் கமலபதத் துள்நிறையப்
போரூரா
எந்நாட் கிடைக்கும் எனக்கு

எனவும் கூறிக் கொள்வதை நோக்கும் போது நாம் நம் நிலைமைக்கு மிகவும் நாணமுற வேண்டியவர்களாகிறோம். சிதம்பரசுவாமிகள் இச்சந்நிதி முறையில் பொதிந்து வைத்துள்ள தத்துவ நுட்பங்களின் விளக்கங்கள் பல இவர் அருளிய ‘பஞ்சாதிகார விளக்கம்’ என்னும் நூலுள் விளக்கப்பட்டுள்ளன. சந்நிதி முறையைப் பயில்வோர் இவர் அருளிய ஏனைய நூல்களையும் எமது ஆதி குரு முதல்வர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் அருளிய கொலை மறுத்தல், வைராக்கிய சதசம், வைராக்கிய தீபம், அவரோத உந்தியார் என்னும் நூல்களுக்கும், ஒழிவிலொடுக்கம் என்னும் நூலுக்கும் இவர் செய்த உரைகளையும் சேர்த்துப் பயிலுதல் பயன் தருவதாகும்.

சந்நிதி முறையை ஓதுவதால் வரும் பயனுக ஒரு பாடலைக் காட்டி இந்த உரையை நிறைவு செய்வோம்.

பேய்போம் துயரப்போம் பித்தம்போம்
போகாத
நோய்போம் மிடிபோம் நுவலுங்கால் –
தாய்போல
நன்னிதியைப் போல நயந்த திருப்
போரூரன்
சன்னிதியைக் கண்டளவே தான்
(மாலை – 46)

திருப்புகழ் படிக்குமவர் சிந்தை வலுவாலே
ஒருத்தரை மதிப்பதிலை உந்தன் அருளாலே.

திருப்பாற் கடலில் திடுக்கிடும் நிகழ்ச்சி

தவத்திரு முருகதாச சுவாமிகள்
தலைவர், கௌமாரமடாலயம் திருவாமாத்தூர்

உலகில் மக்களாகப் பிறக்கின்ற நமக்கு, வாழ்க்கையில் எப்படி யெப்படியெல்லாமோ பல அல்லல்கள் நிகழ்கின்றன. அவை யாவும் நாம் எதிர்பாராதவாறு நிகழ்கின்றன. அவற்றைப் பிராப்த மென்கின்ற ஊழின் மீதேற்றி நுகர்கின்றோம். அவை ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம், என மூவகையாகப் பிரித்தனர் முன்னோர். ஆன்மக்களால் வருபவை மண் முதலிய ஐம் பெரும் பூதங்களால் நிகழ்பவை. முன்னைய ஊழ் காரணமாக அமைபவை என்பதாம். தெய்விகம் என்பதற்கு ஊழ் எனப்பொருள் கோடல்வேண்டும். 'தெய்வத்தால் ஆகாதெனினும்'' என்ற இடத்துத் தெய்வம் என்ற இடத்துத் திருக்குறளில் ஊழ் என வருதல் கருதக் கூடியது.

வினைவசப்பட்டுள்ள நமக்கு எப்படியும் எதுவும் வரலாம். வினையில் நீங்கிய கடவுள் திருமால். அவருக்கு அப்படியென்ன திடுக்கிடும் செயல்? என்று நமக்கு ஐயம் வருவதில் வியப்பேதுமில்லை. திருமாலுக்கே அப்படி ஒன்று நிகழுமானல் நாமெல்லாம் எம்மாத்திரம்? உருவம் என்று ஒன்றுண்டானல் ஊறும் ஒவ்வோர்கால் வரும். ஆனல் இங்கே நாம் காணவரும் இடர்ப்பாடு, திருமாலுக்கு மட்டுமல்ல, அவர் குடும்பத்துடன் அநுபவித்ததாகவே கவியிற் காண்கின்றோம்.

திருமால் திருப்பாற் கடலில் துயில்வதாகவே புராணங்களும் புலவர்களும் கூறுவதறிவோம். துயில்பவன் கை வசமுள்ள சிறுபொருளும் நழுவிவிடும். இது நாம் கண்ட ஒன்று. திருமால் நம் போன்று துயில்பவரானல் கைகளிலுள்ள சங்கு. சக்கரம் எப்படிக் கரத்திலேயே இருக்கும். துயில் என்றால் நம் போன்று உடலுணர்ச்சியற்றுத் துயில்பவரல்ல. தூங்குபவன் கண்கள் மூடியேயிருக்கும். திருமால் திருவுருவிலும் கூட அப்படியில்லையே. எல்லா உயிர்கட்கும் உணவூட்டுபவன் எப்படித் துயில்வான்? 'விழிமலர் குவியா விண்டு நாயகனே' என்பது திருவரங்கத் திருவாயிரப்பாடல். எல்லாவற்றையும் அறிந்து கொண்டே துயில்பவன். எனவே 'அறிதுயில்' என்றனர் ஆன்றோர். சாதரணமாக இயந்திரச் சகடம் ஓட்டுபவன் சற்றே கண்ணயர்வானாயின்; அவனை நம்பிச்செல்கின்ற மக்கள் என்னாவர்?வண்டி என்னாகும்? இது நாம் காண்பதுதானே. அப்பெருமான் கண்மூடித்துயின்றால் உலகம் என்று ஒன்றிராது. அப்படித் துயில்வதாகச் சொல்வது உபசார வழக்கு. இப்படிப்பட்ட

அரியசெயல் திருமாலிடம் காண்பதால்தான் திருடன் என்றுகூட வழங்கலாயிற்று. இனி செய்திக்கு வருவோம்.

இனிவரும் நிகழ்ச்சி என்று நடந்தது? யார்கண்டது? என்று ஒரு ஐயம் எழுவது இயல்புதான். கண்டதாகத்தான் புலவர் கூறுகின்ருர். வினவயப்பட்ட, சிற்றறிவு உடைய மனிதன் காணமுடியாத திருப்பாற் கடலில் நடைபெற்ற இச்செய்தியைக் கண்டும், கேட்டுமிராத அதி நுணுக்கமான, அருமையான ஒன்றைச் சிந்தனையின் மூலம் கண்டு கவிஓவியமாகப் படைத்த ஆற்றலைப் புலவர்களிடம்தான் காணமுடியும். இப்படி எத்தனையோ செயல்களுண்டு. இதைக் கூறிய புலவர் யார்? என்பதைப் பற்றிப் பின்னர் அறியலாம். செய்தியை, அதிலும் திடுக்கிடுவதான ஒன்றை அறிவது முதற் கடமையல்லவா?

புலவர் கண்டு கூறும் காட்சி பரிதாபத் துக்குரியதாகும். தெரிந்தபோது நாமும் கூட எப்படியாவது, எதாவது உதவ முடியுமா? என்ற எண்ணம் வரும். ஆனல் முடியாதது. அதையறிந்தபோது மனதில் ஒரு வியப்பு. புலவரின் கற்பனைத்திறன் இவற்றைக் காணமுடிகிறது. அதற்கான காரணத்தை அறியும்போது, ஒருசிறிய செயல் எவ்வளவு அபாயத்தை விளைத்தது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. செய்தியை அறிய மனம் விரைகிறது, விழைகிறது. இந்நிலையில் ஏதேதோ கூறிக் காலம் கடப்பதைபற்றிக் கவலைவேண்டாம்.

திருப்பாற் கடல் வெண்ணிறமானது. அதில் ஆதிசேடனை பாம்பரசனைப் பாயலாகக் கொண்டு, நிலமலைப்போலக் கிடந்து அலைகளால் அசைந்துத் தாலாட்டுதல் போலப்பெற்று திருமகள் திருவடிகளை வருடும்படி, ஆனந்தமாகத் துயில்கின்றனர் திருமால். உந்தித்தாமரைமீது இன்னு ருக்கு இப்படி விதிவகுப்பதென்பதை அறியாதுபடைகின்ற குழந்தை பிரமன். எனவே தான் நல்லோர்க்குத் தீயவற்றையும், தீயோர்கட்கு நல்ல பயனையும் துய்க்க வுதகின்றனன். அவன் மகிழ்வுடன் இருக்கின்ருன். தன்கடமையான உணவூட்டு வதை ஒரேவிதமாயிராமல் கருப்பையுள் இருக்கும் நுண்ணுயிர்க்கட்கும், பருவுடலினதானயானை போன்றவற்றுக்கும் ஏற்ற ஏற்றபடி காலந்தவருது தந்து காக்கும் கடமையைச் சரியாகச் செய்த களிப்பினுல் அமைதிபெற்றுத் துயில்வதானுர். மன அமைதி வந்தபோது தானே துயில்வரும்; துயில்வதாலே இன்பமும் ஏற்படும்! இதை நாமும், நம்போற் பலரிடமும் காணும் ஒன்று. அப்படி அமைதியுடன் துயிலும் போது எதோ அதிர்ச்சியான ஒரு செயல் ஏற்பட்டுத் திடீரென எழுந்திருக்க நேர்ந்தால் என்னசெய்வதென்று தோன்றுதல் லவா அந்நிலையைத்தான் திருமால் அடைந்ததைப் புலவர் கூறலானுர்.

ஆதிசேடன்மீது துயின்ற திருமால் அதனின்றும் வீழ்த்தப்பட்டார். கைகளில் வைத்திருந்த சங்கு சக்கரங்கள் கீழே வீழ்ந்தன. அவர் மார்பில் வாழ்ந்த திருமகள் கணவரது நிலைகண்டு கண்ணீர் விட்டுக் கலங்குகின்ருள். சிறுபருவமுள்ள பிரமன், தாய் தந்தையரது நிலைகண்டு, தான் செய்வதுயாதுளது என்றுகதறி அழலானுன். இது நாம் மனைவியையோ மக்களையோ ஒறுக்கும்போது சிறுபருவக் குழந்தைகள் அழும் அதே நிலைதான் பிரமனுக்கு. பிரமனைக் கிழவரென்பதும் உண்டு. படைப்பில் தரக்குறைவு நேர்வதால் பாலப்பருவம் எனக் கூறலாயிற்று. இவர்கள் நிலை இவ்

வாருயின் இவர்களைத் தாங்கியிருந்த ஆதி சேடனை பாம்பு எங்கே என்று அவர்கள் சிந்திக்க முடியவில்லை. தன் தன் நிலைமைப் பற்றியே கவலலாயினர். படுக்கையுமில்லை. பாம்புமில்லை. புலவர் இவர்கள் நிலையையும் அறிந்தார். பாம்பு போன விதத்தையும் அறிந்தார். இவர்கட்கு நாம் என்ன உதவி எப்படிச் செய்யக்கூடும் என்று கருதியப் புலவர், திடீர் நிகழ்ச்சியை நமக்கறிவித்துச் சமாதானமுற்றுர். புலவரே மயங்கினுரென்ருல் எவ்வளவோ காலங்கடந்து பின்னே யுள்ள நாம்தான் என்னசெய்ய முடியும்; நாம் இதனுல் இன்னும் செய்தியை முழுமையாகப் புரிந்துக் கொள்ள முடியவில்லை. இவ்வளவுக்கும் காரணம் ஒன்றேதான். அது என்ன? புலவர் கவிமூலம் கூறியதைக் காண்போம்.

மயிலத்தில் திருக்கோயில் கொண்டுள்ள முருகப்பெருமான் வாகனமான மயில் ஒரு நாள் ஓய்வு பெற்றது. உல்லாசமாக உலாவச் சென்றது.அப்படியே திருப்பாற்கடலின் பக்கம் போயிற்று. கடலோரம் சென்ற அது, தனக்குரிய பகையான பாம்பைக் கண்டது. அவ்வளவுதான் அதற்கு ஆத்திரம் பொங்கியது. தனது கூரியதும் வலியதுமான அலகான மூக்கினுல் கௌவித் தூக்கியது. உதறியது. அதன்மீது படுத்திருந்த திருமாலையோ, திருமகளையோ, பிரமக் குழந்தையையோ அது ஏன் சிந்திக்க வேண்டும் ? ஆத்திரம் காரணமாக எதையும் எண்ணவில்லை. பாப்பு மயிலின் அலகின்கண் இருக்கிறது, திருமால் குடும்பம் இப்படிக் கதிகலங்கித் தவிக்கிறது. சீர் கெட்ட இந்நிலைமை இரக்கத்துக்குரியதாகின்றது. வலிமையான மயில், ஆயிரந்தலை ஆதிசேடனை இவ்வளவு எளிதாகக் கவ்வியது! அதற்கு இது எளிய செயல்தான். அதனுல் விளைந்த இடர்பாடு எவ்வளவு என்பதைத்தான் நாம அறிகின்ருேம். இல்லை அறிய வைக்கின்ருர் புலவர். இதனுல் மயிலின் தீரச்செயலையும் பாம்பின் எளிமையையும், திருமால் குடும்ப நிலையையும் கற்பனை செய்து காட்டுகிறது புலவரது கவி. கவியை இனிப் படிக்கலாம்.

''நீலக் கடல்போற் கிடந்துறங்கும்
நெடுமால் பதறி விழித்து அலறி
நெஞ்சம் திடுக்கிட்டு ஆழிச்சங்கம்
நெகிழ்வுற்று அவசம் உற, உரம்தோய்
சீலக்கமலத் திருமாது
செழுங்கோங் கரும்பாம் முலைநடுவிற்
செவ்வேல் விழிநீர் விடுத்து இரங்கப்
தீதும் நலமும் தெரியாத
பாலப்பருவம் கொளும் உந்திப்
பங்கேருகத்தான் அனைமுகத்தைப்
பார்த்துப் பார்த்துக் கதற அலைப்
பாலாழியிற் பாம்பெடுத்து உதறும்
கோலச் சிகியிற் பவனிவரும்
குமரா தாலோ தாலேலோ
கொடியாடு அணிமாடப் புதுவைக்
குகனே தாலோ தாலேலோ
என்பது கவிதை.

என்ன இனிய பாடல்! அழகிய பொருள் எப்படி! கற்பனை எத்தகையது! மயிலின் சிறப்பு எத்தகையது! என்பதையெல்லாம் நாம் அறிகின்ருேம். இனி இதை இயற்றிய புலவர் யார் என்பதை அறியவேண்டாமா?

திருநெல்வேலியில் இற்றைக்கு 135 ஆண்டுகட்கு முன்னே தோன்றி இளமையிலேயே முருகன் வழிபாடும் இறுதிவரை வேற்பூசையும் செய்து பல்லாயிரம் தமிழ்க் கவிகளைப்பாடி ஏட்டிலும் எழுதிவைத்து தவப்பெருமையும் முருகனருட் சிறப்பும் பெற்ற மகான் வண்ணச்சரபம் தண்டபாணி

சுவாமிகளாவர். அவர் பாடிய புதுவைப் பிள்ளைத்தமிழில் உள்ள பாடல் இது. இதனைப்போல் பிள்ளைத் தமிழும் வண்ணப் பாக்களும் பல பாடியுள்ளனர். ஐம்பதாயிரம் பாடல் வரை பாடிய இவர் விழுப்புரத்தை யடுத்த சிவத்தலமான திருவாமாத்தூரிற் சிவப்பேறெய்தினர். அவரது பல நூல்கள் ஏட்டுச் சுவடியிலேயே உள்ளன. ஒரு சில வெளியாயின. அவை அன்பர்கட்குக் கிடைக்குமாறு பதிப்பாக வேண்டும்.

மயிலின் சிறப்பை இதனலறியும்போது முருகப்பெருமான் மயில் வடிவமான மலையில் எழுந்தருளிய காரணம், இனியும் மயில் அவ்வாறு சென்று திருமாலுக்கு இடையூறு செய்யாவண்ணம் கருதியே போலும் என்று எண்ண இடமுண்டாகிறது. மயில் அம் அழகிய மயிலை ஒப்பது என்ற பொருளில் மயிலமலையமைந்திருக்கிறது. அதுமட்டுமல்ல. அழகிய முருகப்பெருமானுக்கு ஆலயம் முதலியன அமைத்துப் பாரம்பரியமாக, வீரசைவ மரபு காத்துவரும் தமது மரபு தழைய அருளாடலியற்றிய அருளாளர் சிவத்திரு சிவஞானபால்ய அடிகளார் திருமடமும், சந்நிதானங்களும் ஒருங்கிணைந்திருப்பது பெரிய பேருகும்.

அந்த மயிலத்திருமடத்தில் ஆட்சி செலுத்திய பதினெட்டாம் பட்டத்துச் சந்நிதானமவர்கள் திருமுன்னிலையில் மேலம்ங்கலம் தவத்திரு பாலயோகி ராமதாஸ் சுவாமிகளும் பல பேரன்பர்களும் சேர்ந்து நடத்திவரும் படித்திருவிழாவானது இன்று இருபத்தைந்தாவது ஆண்டாக வெள்ளிவிழாக் காண்கிறது பெரிய மகிழ்வுக்குரியது. பத்தொன்பதாம் பட்டத்துச் சந்நிதானமவர்கள் முன்னிலையில் இவ்விழா நடைபெறுகிறது. இதைச் சார்ந்த அனைத்துப் பேரன்பர்களுக்கும் பல நலமும் பெற்று வாழ மயிலாசலத்து முருகப்பெருமானையும் ஆதீன முதல்வர் அவர்களையும் வேண்டுவோமாக. வாழ்க படிவிழாத்தொண்டர்கள்.

சத்தியச் சண்முகன்

ஏதம் அகற்றும் என்அரசே என்ஆ ருயிரே என்அறிவே
என்கண் ஒளியே என்பொருளே என்சற் குருவே
என்தாயே

காதம் மணக்கும் மலர்க்கடம்ப கண்ணிப்புயனே காங்கெயனே
கருணைக் கடலே பன்னிருகண் கரும்பே இருவர்
காதலனே

சீத மதியை முடித்தசடைச் சிவனுர் செல்வத் திருமகனே
திருமா லுடன்நான் முகன்மகவான் தேடிப்பணியும்
சீமானே

சாதல் பிறத்தல் தவிர்த்தருளும் சரணும் புயனே சத்தியனே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவ மணியே
சண்முகனே

—அருட்பா

இலக்கியமும் சமயமும்

குருகுலம் அழகரடிகள்
மதுராந்தகம்

"இலக்கியம்" என்பது, கற்பனை மிக்கது. அதாவது புனைந்துரை பெருகியது. அதோடு, உவமைகள் சான்றது. நகை, அழுகை, வீரம் முதலிய எட்டுச் சுவைகள் மட்டும் அமைந்தது. இது மன நலம்.

'சமயம்' என்பது சமைந்த பக்குவத்தைக் காட்டுவது. ஒன்பதாவது சுவை பொருந்தியது. அது 'பொதுச்சுவை' எனப் படும்; "சமநிலைச்" சுவை என்பதும் அது ! இது உயிர் நலம்

பொதுமை பேசுவதற்குச் சமயந்தான் தகுதி. ஏனென்றால் அது சமநிலைச் சுவை உடையது. இன்பம் வந்தால் நகைச் சுவையும் துன்பம் வந்தால் அழுகைச் சுவையும் அல்லாமல் எவை தோன்றினும் பொதுவாக நிற்கும் நிலை 'சமநிலை'யாகும் இலக்கிய நுகர்வுகள் பல நுகர்ந்த பின், இத்தகைய 'சமநிலை' வாய்க்கும்.

இயற்கை கடந்தது, கடவுள் நிலை. இயற்கையோடு ஒட்டியது இலக்கிய நிலை. சில நூல்கள் இயற்கையை மட்டுங் கூறும். இயற்கையைக் கடந்து சமய நிலையைப் பேசா.

திருக்குறள் இலக்கிய நூலும், சமய நூலுமாய் இருக்கிறது திருக்குறள் இலக்கிய நூலாய் இருப்பதற்கு, அதனில் வருகின்ற சான்று உவமைகளும், கற்பனைகளும்.

கடந்த சமயநூலாய் இருப்பதற்கு சமநிலைச் சுவையாகிய உலகப் பொதுமையை அது மேற்கொண்டிருப்பதே போதும்.

இலக்கிய நூல் திருக்குறள் என்று மக்கள் கொண்டாடுவதற்குக் கற்பனையொன்றை இங்குக் கூறலாம்.

உலகம் நிலையாதது என்று கூற வேண்டிய திருவள்ளுவர், தமது அழகிய கற்பனையினுல்.

'நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்திவ் வுலகு."

என்ருர். இதைப்போல் கற்பனைகள் திருக்குறளில் பெருக வருகின்றன.

'தலையின் இழிந்த மயிரனையர், மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.'

என்று ஓர் உவமையையும் தமது தமிழ்மறையில் திருவள்ளுவர் கூறுவார்.

இங்ஙனம் அது இலக்கியச் சிறப்பிலும் குறைவில்லாதது. சமயநூல் சிறப்பிலும் அது மிக்கதாய் இருப்பதற்கு சமநிலைச் சுவையில் ஒரு சான்று இங்கே கூறலாம்.

'நன்ருங்கால் நல்லவாக் காண்பவர், அன்ருங்கால்
அல்லற் படுவது எவன்.'

என்பதே போதும்.

பொது நிலையாக இருக்கும்படி இக்குறள் கூறுகிறது. அதன் சமநிலைச் சுவைக்கு இது எவ்வளவு பொருத்தம் !

உலகவர் எல்லோரும் விரும்பும் முறையில், பொதுவான வாழ்க்கைக் கருத்துக்களே கூறிய திருக்குறள், உலகத்தார் முன் இங்ஙனம் சிறந்திருக்கிறது.

இலக்கிய உணர்வும் சமய நுகர்வும் வேறுபாடு உடையன?

இயற்கையும், அதனை அடிப்படையாகக் கொண்ட அறிவியலும், இக்காலம் சிறந்துள்ளமை அறிவோம். இயற்கையும் அறிவியலும் அறிவிக்கு விருந்து; அதிலிருந்து கலைகளும் தொழில்களும் பிறக்கும்.

'சமயம்' என்பது, அறிவினுல் எய்துவதன்று; உணர்வு மிக்கது; அது நுகர்வு !

அதனை அடைந்தவரைக் கேட்டால், பேரின்பமாய் இருக்கிறது என்று கூறுகிருர்கள். நால்வர் முதலிய அடியார்களின் வாக்குகள் சான்று.

இயற்கையும் அறிவியலும் சிற்றின்பங்கள். அவையே மிகுதியாகத் தோன்றும் வரையில். பேரின்பச் சமய நுகர்வு, மக்களுக்கு வியப்பாகத்தான் இருக்கும்.

சந்தத் தமிழில் கந்தன் அமிழ்தம்

டாக்டர் சி. பாலசுப்ரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
சென்னைப் பல்கலைக்கழகம்

சந்தமிகு தமிழிலே கந்தப் பெருமானது புகழைப் பாடிய அருளாளருள் சிறப்பிடம் பெறுபவர் அருணகிரிநாதர். தமிழ்நாட்டின் திருத்தலங்கள் தோறும் தம் திருவடி தேய நடந்து முருகவேள் திருப் புகழைப் பாடியவர் அவர். அருணகிரியாரைக் குறித்து, இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர் தமது 'மயிலம் ஸ்ரீமுருகன் பிள்ளைத் தமிழி'ல்

''கொண்டலெனச் சந்தத்தமிழ்
மாரிபெய் கொற்றவன்''

என்று பாடுவார்.

சந்தப்பா வகையில் அருணகிரிநாதருக்குக் குருநாதராக விளங் கியவர் ஞானசம்பந்தப் பிள்ளையார். சம்பந்தர் தம்மைச்

''சந்தமெல்லாம் அடிச்சாத்த வல்ல
மறைஞான சம்பந்தன்''
''சந்தமிகு ஞானமுணர் பந்தன்''
''சந்தமே பாடவல்ல தமிழ்ஞான
சம்பந்தன்''

என்றெல்லாம் கூறிக் கொள்வார். அவரையே 'சந்தத் தமிழின் தந்தை' எனலாம். அவரது பாக்களிலே தோய்ந்தவர் அருணகிரியார். அவரை முருகப்பெருமானாகவே எண்ணிப் போற்றியவர். சம்பந்தர் அருளிய தேவாரத்தில் – குறிப்பாகப் பண்சாதாரி – திருவிராகத்தில் உள்ள (மூன்றும் திருமுறை – பதிகம் 67-81) சந்த வேறுபாடுகளை யெல்லாம் நன்கு உணர்ந்து மகிழ்ந்து அவற்றைப் பின்பற்றியதோடு புதிய புதிய சந்த வேறுபாடுகளையும் ஆக்கித் தந்துள்ளார்.

ஞானசம்பந்தரையே தமது குருவாகக் கொண்டவர் ஆதலின்,

''......... புகலியில் வித்தகர் போல
அமிர்தகவித் தொடை பாட
அடிமைதனக் கருள்வாயே''

என முருகனை வேண்டினர். இவ்வாறு 'அமிர்தகவித் தொடை பாட' என்று வேண்டிய மையினாலே இவரது பாடல்கள் 'திருப்புகழ் அமிர்தம்' என்று பெயர் பெற்றன எனலாம். ஞானசம்பந்தர் 16,000 பாடல்கள் பாடினார் என்பர் திருமுறை கண்ட புராண ஆசிரியர். அது போலவே, அருணகிரிநாதரும் 16,000 பாடல்கள் பாடினார் என்பர்.

கந்தன் புகழ் பாடும் சந்தத் திருப்புகழில் இதுவரை அச்சேறியவை 1311. இவற்றுள் அமைந்துள்ள சந்த வகை 1008 என்பது வியத்தகு சிறப்பாகும்.

"தத்தத் தத்தத் தத்தத் தத்தத்
தத்தத் தத்தத் தனதானா"

என்னும் சந்தத்தில் அமைந்தது கீழ்வரும் திருப்புகழ்.

"சுத்தப் பத்திச் சித்ரச் சொர்க்கச்
சொர்க்கத் தத்தைக் கிளியோனே"

மெல்லோசையே மிகுந்து,

"தந்தந் தனந்த தந்தந் தனந்த
தந்தந் தனந்த தனதானா"

என்ற சந்தம் அமைந்த திருப்புகழ்

"ஐந்திந் த்ரியங்கள் வென்றோன் றுமன்ப
ரங்கம் பொருந்து மழகோனே"

என்பதாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும், சேக்கிழார் பெருமானும் சிவபரம் பொருளே அடியெடுத்துத் தரப் பாடியமைபோல, அருணகிரியாரும் செவ்வேள் எடுத்துரைத்த செஞ்சொல்லால் பாடியவர்.

"முத்தைத்தரு பத்தித் திருநகை"

என்பது அப்பாடலாகும்.

இந்தப் பாடலே சந்தமிகு செந்தமிழாய்க் கேட்போர் சிந்தையி லும் செவியிலும் தேன் பாய்ச்சும் தன்மையதாய் விளங்குகிறது.

இசை ஞானியாராகிய அருணகிரிநாதர் முருகவேளின் தண்டை யொலி, சதங்கையொலி, கிங்கிணியொலி, சிலம்பின் ஒலி இவற்றி னின்றே சந்தத் தமிழின் இலக்கண நுணுக்கங்களையெல்லாம் நன்கறிந்தார்.

"இசைத்திடும் சந்தபேதம்
ஒலித்திடும் தண்டைசூழும் இணைப்பதம்"
"சதங்கை தருகீதம்"
"நாதகீத கிண்கிணி"
"இனியநாதச் சிலம்பு"

இத்தகைய திருப்புகழ்த் தொடர்கள் செவ்வேளின் 'சிலம்பும் சதங்கையும் தண்டையும்' எழுப்பும் ஓசைக்கேற்ற சந்த வேறுபாடுகளோடு அருணகிரியார் முருகனது புகழை இசைத்தார் என்ற உண்மையைப் புலப்படுத்துவன.

தாள நூலின் நுட்பமெல்லாம் உணர்ந்தவர் அருணகிரியார். இன்னிசை முரசம் இயம்பும் ஒலியிலும் பன்னிரு கையனின் திருப் பெயரே கேட்கிறது அவருக்கு,

> ''குமர குருபர குமர குருபர
> குமர குருபர எனதாளம்
> குரைசெய் முரசம்''

என்று பாடுகிறார்.

> ''வாள்வரி கோளபுலி கீளதுரி
> தாளின்மிசை நாளுமகிழ்வர்''.

என்பது போன்ற ஆளுடைய பிள்ளையாரின் அருட்பாக்களில் சந்த இன்பம் மேலோங்கி நிற்கும். எனினும் அருணகிரியாரின் சந்தப் பாக்களில் ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது 'தொங்கல்' எனும் உறுப் பாகும். பாடல்களின் முடிவுகளில் ''பெருமாளே'' ''தம்பிரானே'' என்று அமைவது இத்தொங்கல் என்னும் சிறப்பான உறுப்பாகும்.

இங்ஙனம் 'தொங்கலுடன் பாடுக' எனக் குறிப்பாலருளியவர் குமரவேளே என்று கருதுவர் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை. 'முத்தைத்தரு' என்னும் திருப்புகழில் முருகப்பெருமான் 'முத்தைத்தரு' முதல் 'எனஓது' எனும் தொங்கல் வரை எடுத்துக் கொடுத்து, 'ஓது' என்பதை ஏவல்வினையாக 'ஓதுவாயாக' என – அருணகிரியார்க்குக் கட்டளையிட்டுத் ''தத்தத்தன தத்தத் தனதன'' என்னும் சந்தத்துக்குத் ''தனதான'' என்னும் ஒரு தொங்கலையும் பூட்டிக் காட்டினர் போலும். அங்ஙனம் அமைத்துத் தந்த தொங்கல் தங்கச் சங்கிலிக்கு ஒரு வயிரப் பதக்கம் போன்று பொலிவைத் தருகிறது.

அடியெடுத்துத் தரப் பெற்ற அருணகிரிப் பெருமான் அடங்கா மகிழ்வோடு, 'எனஓது' எனும் ஏவல்வினையையே பெயரெச்சமாகக் கொண்டு 'எனஓது முக்கட் பரமற்கு' எனப் பாடலைத் தொடர்ந்து முடித்தனர் போலும்.

அருணகிரியாரின் மற்றொரு தனிச்சிறப்பு எடுத்துக்கொண்ட தலத்தின் பெயருக்குப் பொருத்தமாகச் சந்தம் அமைத்துக் கொள்வதாகும். எடுத்துக்காட்டாக, 'விருத்தாசலம்' எனத் தலப்பெயர் வரும்பாடலை 'முடத்தாமரை' எனவும், 'மதுராந்தகத்து' என ஈற்றடி

அமைய வேண்டியவிடத்து 'சயிலாங்கனேக்கு' எனவும் எடுத்துப் பாடியுள்ளமை காணலாம்.

சந்தம் எதுவாக இருப்பினும் கந்தவேள் திருப்பெயர்களைத் தடைபடா நடை நலத்துடன் தொடுத்தமைப்பது அவர்தம் சிறப்பு.

"குமர: குருபர: முருக: சரவண: குக: சண்
முக: சுரி பிறகான
குமுக: சிவசுத:"

"வேந்த: குமார: குக: சேந்த: மயூர: வட
வேங்கட மாமலையி லுறைவோனே:"

"சரவண: கந்த: முருக: கடம்ப:
தனிமயில் கொண்டுபார் சூழ்ந்தவனே:"

என்பன முருகன் திருப்பெயர்களை மிடுக்கு நடையில் அடுக்கிச் சொல்லும் சந்தப்பாடல்கள்.

வாழையடி வாழையென வந்த அருட்கவிஞர் மரபிலே தோன்றிய அருணகிரியார் வாக்கில் நால்வர்தம் கருத்தும் சொல்லும் பொருத்த முற அமைந்திருப்பதைக் காணலாம்.

திரு முதுகுன்றத் திருப்பதிகத்தில் ஞானசம்பந்தர் ஒரு அழகிய காட்சியைப் பாடுவார்.

"திறங்கொள்மணித் தரளங்கள் வரத்திரண்டங்
கெழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினுற் கொழித்துமணி செலவிலக்கி
முத்துலைப்பெய் முதுகுன்றமே"

இதே முதுகுன்றத்துத் திருப்புகழிலே இதே கருத்தை அமைத்துப் பாடுவார் அருணகிரியார்.

"முழுகிய புனலில் இனமணி தரளம்
முறுகிடு பவளம் மிகவாரி
முறையொடு குறவர் முதுமகள் சொரியும்
முதுமலை..."

என்பது அவர் வாக்கு.

"காமியஞ் செய்து காலங் கழியாதே"

என்ற அப்பர் அருளுரையை

"காமியத் தழுந்தி இளையாதே"

எனவும்,

"நமனை அஞ்சோம்"

என்ற வீரவுரையை

"மரணப்ரமாதம் நமக்கில்லையாம்"

எனவும்,

"அந்தணாளனுள் அடைக்கலம் புகுக
அவனைக் காப்பது காரணமாக"

என்ற நம்பியாரூரரின் நம்பிக்கைக்குரலை

"அந்தகனும் எனையடர்ந்து வருகையினில்
அஞ்சல் எனவலிய மயிலமேல் நீ
அந்தமறலியொடு சுந்தமவி தன்றும
தன்பன் எனமொழிய வருவாயே"

எனவும்,

"தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக் குடனாகி"

என்னும் கருத்தை

"..................என்
பிழையுடன்பட்டுப் பத்தருள் வைக்கும்
பொறையையென் செப்பிச் செப்புவது"

எனவும்,

"வேண்டத் தக்கது அறிவோய் நீ;
வேண்ட முழுதும் தருவோய் நீ"

என்னும் மணிவாசகர் கருத்தை

"இறைவா எதுதா அதுதா"

எனவும் அருணகிரியார் வாக்கில் இடம் பெறுதல் காணலாம்.

இறைவன் தமக்கு நல்லவாகிய தனுகரணங்களைத் தந்தமை அவனைத் தமிழால் பாடுதற் பொருட்டே என்பதை,

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

எனப் பாடுவர் திருமூலர்.

முருகப் பெருமான் தமக்குச் சந்தத் தமிழை அருளியது அவனது திருவடி மலர்களைப் போற்றுதற்காகவே என்பர் அருணகிரியார். மயிலேறி விளையாடும் பெருமான் அவருக்கு அரிய தமிழை அருளினான். அவ்வாறு அருளியது ஒவ்வொரு நாளும் அச்செவ்வேள் மலரடி தொழுதற்பொருட்டே.

"அருணதள பாதபத்மம்
அனுதினமு மேதுதிக்க

அரியதமிழ் தானளித்த
மயில்வீரா?''

என்பது சந்தக் கவிக்கொண்டலின் வாக்கு.

“தணிகை மலைமேவு பெருமாளே!
நோய்கள் பிறவிகள்தோறும் எனைநலியாத
படியுன தாள்கள் அருள்வாயே’’

எனும் திருப்புகழைப் பாட முருகன் அருளால் நோய் நீக்கமும்,

“இதயந் தனிலிருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள்கலங்க அருள்வாயே”

எனும் பாடலைப் பாடக் கவலை நீக்கமும்,

“நாளென்செயும்’’

எனவரும் கந்தரலங்காரப் பாடலைப் பாடத் துன்ப நீக்கமும்,

“வாழி! இனிப்பிற வாதுநியருள் புரிவாயே”

என்ற பாடலைப் பாட பிறவி நீக்கமும் பெறலாம். என அறிஞர்கள் கூறுவர்.

சுவாமிமலையிலே அவர் அருளிய திருப்புகழிலே சைவ சித்தாந்தத்தின் செம் பொருளாகிய சுத்தாத்துவித நிலையினைக் கண்டு மகிழலாம்.

“நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வதற்குன் அருள்கூறு’’

(திருப்புகழ். 220)

முருகன் மாணாக்கர் பன்னிருவர்

1	பிரமன்	5	இராமர்	9	சிவன்
2	நாரதர்	6	சுகப்பிர்மரிஷி	10	அருணகிரியார்
3	அகத்தியர்	7	பாம்பனடிகள்	11	குமரகுருபரர்
4	பராசரர் மக்கள்	8	வாமதேவர்	13	வடலூர் வள்ளலார்

மயிலந்தண் மாமலை

புலவர் தெ. முருகசாமி, எம்.ஏ., பி. ஓ. எல்.,

திருவண்ணாமலை முதலாகப் பல்வேறு திருத்தலங்களுக்கும் சென்று திருப்புகழ் பாடி முருகனருள் பெற்றவர் அருணகிரி நாதர். அவர் பாடிய பல்வேறு வகைப் பட்ட பாடல்கள் தமிழிலக்கியப் போக்கில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. உலகியல், அருளியல், சைவ வைணவப் புராணக் கதைக் குறிப்புகள், தாளக் கட்டோடமைந்த யாப்பமைதிமிக்க இசைத் தமிழாலான மொழி – நலம் போன்ற பல் வேறு பாங்குகள் அவர் தம் பாடல்களில் விரவிக்கிடக்கின்றன. இவ்வகையிலான அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்களில் "கொலை கொண்ட போர்விழி" எனத் தொடங்கும் பாடல் ஒன்றுதான் மயிலம் திருப்புகழாகும்.

மயூரகிரி, மயிலாசலம் என்ற பெயர்களை யுடைய மயிலம், முருகன் வீற்றிருக்கும் குன்று தோருடலில் ஒன்று. சூரன் மயில் வடிவில் மலையாக நின்று முருகனைத் தாங் குவதாக தலவரலாறு கூறும். தொலை நோக்கிலிருந்து காண்பார்க்கு மயில் போன்ற அழகிய தோற்றந் தருவது இம் மயிலமலை. இது முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்த சுற்றுச் சூழலை யுடையது.

மலைமீதுள்ள கோவிலையொட்டி வீர சைவத் திருமடம் ஒன்று உள்ளது. மலை யடிவாரத்தில் முருகனுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் தமிழ்க் கல்லூரி ஒன்றும் உள்ளது. சிறுபாணாற்றுப் படையின் பாட்டுடைத் தலைவனாய நல்லியற் கோடன் என்பான் ஆண்ட ஒய்மா நாடாகிய இன்றைய திண்டிவனத் திற்குத் தென்கிழக்கில் பாண்டிச்சேரிக்குச் செல்லும் நெடுஞ்சாலையின் எட்டு கல் தொலைவில் உள்ள திருத்தலமே மயிலமா கும். இத்திருத்தலத் திருப்புகழின் பா நலத்தைக் காண்பதே கட்டுரையின் நோக்கமாகும்.

கொலைகொண்ட போர்விழி கோலோ
வாளோ
விடமிஞ்சு பாதக வேலோ சேலோ
குழைகொண்டு லாவிய மீனோ மானோ
எனுமானார்
குயில்தங்கு மாமொழி யாலே நேரே
இழைதங்கு நூலிடை யாலே மீதூர்
குளிர்கொங்கை மேருவி னாலே நானு
விதமாகி
உலைகொண்ட மாமெழு காயே மோகா
அலையம்பு ராசியி னூடே மூழ்கா
உடல்பஞ்ச பாதக மாயா நோயா
லழிவேனோ
உறுதண்ட பாசமொ டாரா வாரா
எனையண்டி யேநம னூர்தூ தானோர்
உயிர்கொண்டு போய்விடும் நாள்நீ
மீதா ளருள்வாயே

அலைகொண்ட வாரிதி கோகோ கோகோ
எனநின்று வாய்விட வேநிள் மாசூர்
அணியஞ்ச ராசனம் வேருய் நீரு
யிடவேதான்
அவிர்கின்ற சோதிய வாரார் நீள்சீர்
அனலங்கை வேல்விடும் வீராதீரா
அருமந்த ரூபக ஏகா வேரோர் வடிவாகி
மலைகொண்ட வேடுவர் காஞு டேபோய்க்
குறமங்கை யாளுட னேமா லாயே
மயல்கொண்டு லாயவள் தாள்மீ
தேவீழ் குமரேசா
மதிமிஞ்சு போதக மேலா ஆளா
மகிழ்சம்பு வேதொழு பாதா நாதா
மயிலந்தண் மாமலை வாழ்வே வானோர்
பெருமாளே!

வீரா, தீரா, அருமந்த ரூபக ஏகா, குமரேசா, மேலா ஆளா, பாதா, நாதா, மயிலந்தண் மாமலை வாழ்வே, வானோர் பெருமாளே என முருகனைப் பலவிதமாக விளித்து உயிர் கொண்டு போய்விடும் நாள் நீ மீதாள் அருள்வாயே என மேற்கண்ட பாடலின் பொருளைப் பின் முன்னுக முறை மாற்றிப் பொருள் கொள்ளவேண்டும்.

பாடலின் முதற்பகுதியில் வழக்கமாக அமையும் பெண்வருணனையோடு அருணகிரிநாதரின் வேண்டுதலும் அமைந்துள்ளது கொலைத் தொழில் மிக்க அம்பு, வாள், வேல் போன்ற விழிகளையுடைய பெண்களின் குயில்மொழி, நூலிடை, மாமேரு மார்பு போன்றவைகளால் உலைக்களப்பட்ட மெழுகுபோல் மயங்கிப் பஞ்சமா பாதகங்களைச் செய்து வீணே அழிந்து எமனுக்கிரையாகாமல் தம்மைக் காத்தருள வேண்டுமென அருணகிரிநாதர் முதலில் விண்ணப்பித்துக் கொண்டார்.

அகமும் புறமும் சங்க இலக்கியக் கொள்கைகளாகும். இவ்விலக்கிய மரபை அரண் செய்யத்தக்க வகையில் பாடலின் அடுத்த பகுதி அமைந்துள்ளது.

முருகன் போர்க்களத்தில் சூரபதுமன் விட்ட படைகளை நீருக்கி அச்சூரன் கடலில் மறைந்தபோது அவனை இரு கூருக்க அனல் கக்கும் வேற்படையை எடுத்தெறிந்த வீரதீரனுகவும் இங்ஙனம் போர் வீரனுக மட்டும் திகழாமல் குறமங்கையாம் வள்ளியிடம் மையல் கொண்டு அவளது தாளில் விழுந்த குமரனுகவும் இவ்வாறு புறத்திலும் அகத்திலுமேயன்றி அவன் உலகியல் அருளியல் ஆகிய துறைகளில் பூரண அறிவுடைய மேலான ஆளாகவும் சிவபெருமானே தொழும் பாதத்தையுடையவனுகவும் மயிலந்தண் மாமலை வாழ்வாகவும் வானேர்க்குத் தலைவனுகவும் உள்ளான் என முருகனைப் பலபடக் கூறினுர் அருணகிரியார்.

முதலில் 'வீரா, தீரா' என வீரக் குறிப்போடு விளிக்கப்பட்ட முருகன் எப்போதும் அவன் அப்போர்க்குறியோடு இருப்பவனில்லை என்பதை அடுத்து உணர்த்தும் முகத்தான் 'அருமந்த ரூபகன்' எனப்பட்டான். 'முன்னியது முடிக்க முருகொத்தியே' என்ற புறப்பாட்டிற்கியைய புறவாழ்வில் வீர தீரனுக விளங்கிய முருகனுக்கு அகவாழ்வில் ஈடுபட 'அருமந்த ரூபம்' வேண்டுமாதலின் அவ்வாறு விளிக்கப்பட்டான் போலும்!

கிடைத்தற்கரிய சாவாமருந்தாகிய அமிர்தத்தை யொத்தவன் முருகனே என்பதால் அருமந்த ரூபக என்றதோடு 'ஏகா' எனப்பட்டான். ஏக பரம்பொருள் முருகன் ஒருவனே என்பது பொருள். மேலும் அருணகிரிநாதர் தலங்கள் தோறும் நேரில்சென்று வணங்கி வழிபட்ட இயல்பினராதலின் இம்மயிலமாமலை முருகனின் தோற்றப்

பொலிவொன்றே அவரை அள்ளிக் கொள்ளும் பேரழகனுகக் காட்டியிருக்க வேண்டுமாதலின் "அருமந்த ரூபக ஏக" என விளித்தார் என்றும் கூறலாம்.

இங்ஙனம் கிடைத்தற்கரிய அமிர்தமாகிய முருகன் மானிட வடிவந் தாங்கி இந்நிலவுலக மங்கை ஒருத்தியிடம் மையல் கொண்டு உலாவித் திரிந்து அவளைத் தன் வயமாக்க அழகிய குமரவடிவம் வேண்டு மன்றே! அதனுல் அருமந்த ரூபக ஏக என்றதும் "குமரேசா" என விளிக்கப் பட்டான்.

மேற்கண்டவாறு முருகன் அக, புற அழகினன் என்பதைப்போல் அறிவை இன்பத்தால் மயக்கும் அறிவழகினன் என்பதை "மதிமிஞ்சு போதக மேலா ஆளா" என அருணகிரிநாதர் விளித்தார், இம்முறை வைப்பால் மனிதன் வல்லவனுகவும் அழகுடையனுகவும் இருப்பதோடு அறிவுடையவனுகவும் இருக்கவேண்டும் என்பது குறிப்புப் பொருளாகும்.

இவ்வாறு வீரா தீரா அருமந்த ரூபக ஏகா என்றெல்லாம் தமிழிலக்கிய மரபிற்கேற்ப முருகனை முறையே வீரனுக, காதலனுக விளித்துப்பின் அறிவுள்ளவனுகவும் விளித்த அருணகிரிநாதர் தாம் நேரில் கண்ட மயிலமாமலைத் திருத்தலத்தின் வரலாற்றுண்மையையும் சுட்டவேண்டும் என்பதற்காக "மகிழ்சம்புவே தொழுபாதா நாதா" என அடுத்து விளித்திருப்பது மயிலம் திருப்புகழில் மிகமிகக் குறிப்பிடத் தக்க ஒன்ருகும்.

மயிலத்தில் முருகனின் சந்நிதி உயர்வான கருவறைப் பகுதியில் உள்ளது. இப்பகுதியின் வலப்புறத்திலுள்ள தாழ்வான கருவறைப் பகுதியில் சிவலிங்கத்தின் சந்நிதியுள்ளது. இவ்விரு சந்நிதிகளின் உயர்வு தாழ்வான இட அமைப்பை நுண்ணிதின் உணர்ந்த அருணகிரிநாதருக்கு முருகனின் பிரணவ உபதேசக்காட்சி ஒரே வழி நினைப்பில் மலர்ந்திருக்கவேண்டும். இதனுல் 'மகிழ்சம்புவே தொழுபாதா' என்ருர்.

சம்பு என்ருல் சிவன். மகிழ்கின்ற சிவனே தொழுகின்ற பாதத்தை உடையவன் முருகன். கந்தபுராணப்படி பிரணவப் பொருளைக் கேட்ட அந்த ஒருநாள் மட்டுமே சிவன் முருகனது தாளைத்தொழுதார். ஆனுல் மயிலத்தின் சந்நிதி அமைப்பின்படி நோக்கினுல் முருகனது தாளைச் .சிவன் நாளும் தொழுபவனுகவே உள்ளார். இப்பொருளாழத்தைத் 'தொழுபாதா' என்பதை இலக்கணக் குறிப்பால் உணரமுடிகிறது.

வீரசைவத் திருமடத்தின் ஆதிகர்த்தாவாகிய சிவத்திரு சிவஞான பாலய சுவாமிகளின் திருவருட் கலப்பு நிகழ்ந்த இடமே அச்சிவலிங்கக் கருவறையின் இடம் என்பதும் ஆதியில் சிவபெருமானே பாலய சுவாமிகளாகிய குருமூர்த்த வடிவில் அவதாரம் செய்து முருகனை வழிபட்டார் என்பதும் இங்ஙனம் முருகனை வழிபடு தெய்வமாகக் கொண்டு வழிவழிவரும் மடாலய ஆதீன கர்த்தாக்களும் வழிபட்டு வருகின்றனர் என்பதும் புராண வரலாறு என்பதால் சிவபெருமானே எப்பொழுதும் தொழுகின்ற பாதங்களையுடையவனுக முருகன் எப்போதும் காட்சியளிக்கின்ருன் என அருணகிரிநாதர் மயிலமலைத் தலஅமைப்போடு சிவன் தொழுகின்ற செய்தியை நிகழ்காலத்தல் சுட்டினுர் எனலாம்.

'தொழுபாதா என்பதைத் தொழுத, தொழும் என இறப்பு எதிர்வு ஆகிய காலங்கட்கும் பிரிக்கலாமாயினும் பொதுவாக

ம – 10

நிகழ்காலத்தால் அவ்விரு காலங்களையும் தழுவிக் கொள்ளும் வகையில் கூறுவதே இலக்கணமரபு. மலைநிற்கிறது என்றால் நின்ற, 'நிற்கும் என முக்காலத்திற்கும் பொருந்துவதுபோலத் தொடுபாதா என்பதற்கு தொழுகின்ற பாதா என்ற நிகழ் காலப் பொருளே முக்காலத்தையும் உணர்த்தும்.

'முக்காலத்திலும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே'
— நன். 383

என்ற நன்னூல் இலக்கணப்படி ஒவ்வொரு கணமும் முருகனின் பாதங்கள் சிவபெருமானால் தொழப் பெறுகின்றன என்பதே சிறப்புப் பொருளாகும்.

'தொழுத பாதா' என்று பொருளைக் கொண்டால் முந்தைய காலத்தில் சிவன் பிரணவ உபதேசத்தின்போது தொழுத நிலையை மட்டுமே சுட்டும். 'தொழும்பாதா' என விரிக்கின் தற்போது சிவன் தொழாத நிலையை உணர்த்தும். 'தொழுகின்றபாதா' எனக் கொண்டால்தான் மலைநிற்கிறதைப் போல முக்காலமும் தொடுகின்ற நிலையை உணரமுடியும். இப்பொருள் ஒன்றே மயிலமலைக் கருவறையின் காட்சியும் சிவமூர்த்தமாம் சிவஞான பாலயசுவாமிகளின் வழிபாட்டு நிலையும் நாளும் காண்பார்க்கு உண்மையை யறிவிப்பதாதலின் தொழுகின்ற பாதா' எனப் பொருள் காண்பதே பொருத்தமாகும்.

ஈண்டு இப்பாடலில் காலில் விழும் நிகழ்ச்சிகளாக இரண்டு சுட்டப்பட்டுள்ளன. அவை வள்ளி காலில் முருகன் வீழ்ந்ததும், முருகன் காலைச் சிவபெருமான் தொழுவதும் ஆகும். கந்தபுராணக் கதைப்படி முருகன் வள்ளியை மனம்புணரவந்தபோது 'பணியா என வள்ளிபதம்' பணிந்தான். ஆனால் ஈண்டு அருணகிரிநாதர் தாள்மீதே வீழ்குமரேசா' என முக்காலத்தைக் காட்டும் வினைத் தொகைப் பொருளின் கருத்தைக் கூறியுள்ளார். அங்ஙனம் கூறியிருப்பினும் 'வீழ்ந்த' என்ற இறந்தகாலப் பொருளை மட்டுமே ஈண்டுக் கொள்ளவேண்டும். ஏனெனில் 'வேறோர் வடிவாகி மலைகொண்ட வேடுவர் கானூடேபோய் மையல் கொண்டு உலவிய தையே' பாடல் சுட்டுவதால் வீழ்குமரேசா என்பதற்கு வீழ்ந்த குமரேசா எனப்பொருள் காண்பதே பொருத்தமுடையதாகும்.

அகப்பொருள் இலக்கணப்படி கற்புக் காலத்தில் தலைவன் தலைவியின் காலில் விழலாம் என்றாலும் அருணகிரியார் அக் கற்புக்கால நிகழ்ச்சியாகப் பாடலில் சுட்டாமல் முருகனின் கனவுக் கால நிகழ்ச்சியை மட்டுமே சுட்டுவதால் 'வீழ்ந்த' என்பதே பொருளாகும். கற்பு நிகழ்ச்சி சுட்டாததால் முருகன் வள்ளியின் காலில் தினமும் வீழ்கிறான் என்றும் களவு நிகழ்ச்சி சுட்டிவிட்டதால் அவன் இனிமேல் வீழ்வான் என்றும் பொருள்கொள்ள முடியாது. எனவே என்றோ ஒருநாள் வள்ளியின் காலில் வீழ்ந்த முருகனின் காலைச் சிவபெருமான் நாளும் தொழுகிறான் என்ற குறிப்பு மயிலம் திருப்புகழை நுண்ணிதின் உணர்வார்க்கு நன்கு விளங்குமன்றோ!

கந்தபுராணப்படி பிரணவ மந்திரப் பொருளைக் கேட்டபோது முருகனது காலைச் சிவபெருமான் தொழுத நிகழ்ச்சிக்குப் பின்னரே முருகன் வள்ளி பதம் பணிந்ததாக உள்ளது. இம்முறையையே அருணகிரியார் வரிசைப்படுத்தாமல் பின் நிகழ்ச்சியை முன்னரும் முன்நிகழ்ச்சியைப் பின்னருமாகச் சுட்டியதால் முருகனின் திருவடிப் புகழ்ச்சி நன்கு விளங்குகிறது.

சிவபெருமான் தொழும் பாதத்தையுடைய முருகன் வள்ளியின் பாதத்தில் விழுந்தான் என முறையாகப் பாடியிருந்

தால் முருகனின் திருவடிப்பெருமை சுட்ட இயலாது. முழுமுதற் கடவுளாலே தொழத் தக்க ஒருவன் குறப்பெண்ணைச் சுற்றித் திரிந்து அவள் காலில் வீழ்ந்தானே என்ற அளவிற்கு முருகனை ஆட்படுத்த வேண்டி வந்துவிடும். எனவே புராண வரலாற்றை முறைமாற்றிக் கூறியதால் ஒரு பெண்ணின் காலில் வீழ்ந்த ஒருவனின் காலை முழு முதற் கடவுளே தொழுகிருன் என முருக னின் திருவடிப் புகழ்ச்சி சுட்டப்பட்டது எனலாம்.

மேலும் புராண நிகழ்ச்சியை மட்டும் மனதில் கொள்ளாத அருணகிரிநாதர் மயி லத்தின் சிவலிங்கக் கருவறையின் அமைப் பையும் சிவபெருமானே வீரசைவத் திரு மடத்து வழிவழியான சிவஞான பாலய சுவாமிகளாகத்தோன்றி நாளும் முருகனை வணங்கி வரும் அமைப்பையும் நன்கு உணர்ந்ததால் நிகழ்ச்சிகளை முறைமாற்றி முற்றிலும் முருகனின் திருவடிப் புகழ்ச்சி யையே கூறினர் என உறுதியாகக் கூற லாம்.

முதற்பொருளாகிய சிவனே தொழு கின்ருன் என்ருல் ஏனையோர்களும் அத் திருவடிகளைத் தொழும் இயல்பினர் என்ற குறிப்பை 'சம்புவே' என்ற ஏகாரம் உறுதிப் படுத்துகிறது. வெறுப்பாகத் தொழாமல் தொழவேண்டும் என்ற விருப்பால் தொழு வதை ''மகிழ்சம்புவே'' என்ற சீரால் உணர்த்துவதால் முருகனைத் தொழவேண் டிய நல்ல மனநிலையை நயமாகச் சுட்டி யுரைக்கும் அருணகிரிநாதரின் பாநலம் நினைந்து இன்புறத்தக்கதாகும். இங்ஙனம் முருகன் சிவனுக்கும் ஏனோர்க்கும் தலைவ ணுகிவிடுவதால் 'மகிழ்சம்புவே தொழுபாதா என விளிக்கப்பட்டதும் ''நாதா'' என விளிக்கப்படுகிருன்.

இங்ஙனம் சிவனும் ஏனேரும் முருகனின் திருவடிகளை நாளும்விடாமல் தொழுது அவனைத் தலைவனுகக் கொள்வதால் அவ னும் மயில மலையை விட்டு நீங்காமல் அம் மலையைத் தன் வாழ்விற்குரிய இடமாகக் கொண்டு தங்கிவிட்டான் என்று கூறலாம். இதனுல் ''மகிழ்சம்புவே தொழுபாதா நாதர்'' என்றதும் ' மயிலந்தண் மாமலை வாழ்வே'' என விளிக்கப்பட்டான்.

மேகங்கள் சூழ்ந்து தண்ணிய தன்மை பெற்று மயிலமலை உயர்வாகக் காணப்படு வதால் அம்மாமலையில் தங்கியிருக்கும் முருகன் வானோர் பெருமாளாகக் காட்சி யளிப்பது இயல்பாதலின் ''வானோர் பெரு மானே'' என இறுதியாக விளித்தார் அருணகிரிநாதர்.

இவ்வாருக மயிலந்திருப்புகழில் காணப் படும் முருகனைப் பற்றிய விளிகள் நினை நினைந்து இன்புறத்தக்கதாயுள்ளன.மேலும் இப்பாடல் கற்பார் நெஞ்சைக் கனிவிக்கும் வகையில் இலக்கிய இலக்கண நயங்களு டன் வரலாற்றுக் குறிப்பையும் தன்னுள் கொண்டு மிளிர்கிறது. எனவே இத்திருப் புகழின் கருத்துப்படி ''மயிலந்தண்மா மலைப்'' பொருளாக உள்ள செந்தமிழ் முருகனைப்பரவி,

> ஏனையண்டி யேநம ஞர்தூ தானேர்
> உயிர்கொண்டு போய்விடும் நாள்நீ
> மீதாள் அருள்வாயே''

என அருணகிரியாரொடு சேர்ந்து நாமும் வேண்டி வழிபடுவோமாக.

கால் பட்டழிந்த கையெழுத்து

பேராசிரியை சரசுவதி இராமநாதன், எம்.ஏ.,
பள்ளத்தூர்

"மருப்புகழ் வல்ல அருணகிரிப்பெயர் வள்ளல்சொன்ன
திருப்புகழ் வல்லவர் சீ பாதத் தூளிஎன் சென்னியதே!"

ஆண்டவனின் அருட்புகழை யார் சொல்லினும் அது திருப்புகழ்தான். ஆனால் 'திருப்புகழ்' என்ற சிறப்புப்பெயர் அருணகிரியார் செய்த நூலுக்கு மட்டும் வழங்குவதன் காரணம், முருகப்பெருமான் திருவாய் மலர்ந்து தந்த தலைப்பு அது என்பதே.

"செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை மறவேனே!"

என்கிறார் அருணகிரிப்பெருமான். இறைவன் திருவருளை எண்ணி ஏங்கி வேண்டிய திறத்தையும், அதைப்பெற்ற அனுபூதி நிலையையும் அருணகிரியார் பாடல்களில் கண்டு இன்புறலாம் "உனைநான் நினைந்தருள் பெறுவேனோ?" என்று ஏங்குவார். "சும்மாயிரு; சொல்லற – என்றலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே!" என்று வியந்து நிற்பார். "பிரபஞ்சம் என்னும் சேற்றைக் கழிய வழி விட்டவா!" என்று உருகுவார். ஆக எல்லா நிலையிலும் நின்று வழிகாட்டியவர் அருணகிரி என்பதால் 'கருணைக்கு அருணகிரி' என்றும், சங்கத்தமிழால், சந்தத்தமிழால் அவனைப்பாடிய திறம் குறித்து 'வாக்குக்கு அருணகிரி' என்றும் போற்றப்படுகிறார்.

"ஐயா! அருணகிரி அப்பா உனைப்போல்
மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார் – வையகத்தார்
சாற்றரிதென் றேசற்றுர் தன்னனையாய் முக்கணெந்தை
நாற்றிசைக்கும் கைகாட்டி னன்"

என்றார் தாயுமான சுவாமிகள். மெய்யாக விளம்பிய எந்தை அருணகிரியின் பாதம் பற்றினால் நமக்கு மெய்யானவழி தெரியும். பொய்யான வழி மறையும். மெய்ஞானம் கிடைக்கும். அஞ்ஞானம் சிதைக்கும்.

"விழிக்குத்துணை திருமென் மலர்ப்பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத்துணை முருகா என்னும் நாமங்கள் முன்புசெய்த

பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே!"

என்று நமக்குத் துணை எது என்று அழகுறக் காட்டுகிறார், அழகனுக்கு "அலங்காரம்" செய்த அருணகிரிநாதர். அவனுடைய திருமென் மலர்ப் பாதங்கள் நம்முடைய விழிக்குத்துணை. மூதண்ட கூட மூகடு முட்டச் சேவடி நீட்டிய பெருமான் மருகனுடைய தண்டைச் சிற்றடி நமக்கு அழியாத விழுத்துணையாயிருந்து நம் தலைஎழுத்தையும் அழிக்கவல்லது.

"சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில்; தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்தலைமேல் அயன் கையெழுத்தே!"

இந்தப்பாடல் தான் எத்துணை அழகு! தீயவை அழியும்போது மகிழ்ச்சி தானே! அழிக்கப் பிறந்த முருகன் நம்மை "அழித்துப் பிறக்க ஒட்டாமல்" செய்பவன். ஆம்! வேலையும் சூரனும் வெற்பும் ஆகிய இவற்றை அழிக்கப் பிறந்தவன்தான் குமரன். "அமரர் இடரும் அவுணர் உடலும் அழிய அமர் செய்தருள்வோனே!" என்றது திருப்புகழ். அந்த முருகனின் பாதம் பட்டு நம் தலைமீது நான்முகன் எழுதியிருக்கும் எழுத்து அழியும்!

பிறக்கும்போதே விதி என்ற ஒன்று தலையில் எழுதப்படுவதாக நம்புகிறோம். "வகுத்தான் வகுத்தவகை" அது. "இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி விட்ட சிவனும் செத்து விட்டானோ?" என்றாள் ஔவைப் பெருமாட்டி. அப்படி எழுதப்பட்ட எழுத்தை மாற்றிக் கொள்ள ஒரே வழி, கந்தன் காலடியை வணங்குவதுதான். மலைக்குமேல் மலை விளக்கான அழகன் திருமாலின் பிள்ளை நான்முகனும் பிரம்மா அவன் நமது மென்மையான நாவிலே 'ஹரி' என்று எழுதிப் பழகக் கூடாதா? (அரிச்சுவடி - 'அரிஓம்' என்று தொடங்குவது தானே மரபு!) அதைவிடுத்து, வலிமையான மண்டையில் எதை எதையோ எழுதுகிறானே!

"மலைக்குமேல் மலைவிளக்காம் அழகா – வேத
வான்குதலை நான்குதலை மகனார் வாளா
தலைக்குமேல் எழுதுகிறார் – அரிஎன்று எங்கள்
காலத்தில் எழுதச் சமர்த்திலாரோ?"

என்றார் ஒரு பக்தர். "மாலின் பிள்ளை எழுதிவிட்டால் என்ன? அதற்கு ஏன் வருத்தம்! மாலின் மருகன் என் முருகன் இருக்கிறான் – வாருங்கள், அவன் பாதமலர் சூடுங்கள். பிரம்மன் கையால் எழுதியது இவன் கால பட்டால் அழியும்!" என்று பெருமிதத்தோடு அழைக்கிறார் அருள் வாரியான அருணகிரியார்.

அப்படி பாதம் பட்டு யாருடைய தலைஎழுத்தாவது மாறியதா? என்று கேட்கலாம். ஆம்! மாறியது.

திருமுருகாற்றுப்படை எழுந்த கலையான வரலாற்றை இங்கு பார்க்கலாம்:—

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலம்- ஒரு நாள் சிவபூஜை செய்து கொண்டிருந்த நக்கீரர் பெருமான் மரத்திலிருந்த இலை ஒன்று விழுந்ததையும், அது பாதி மீனாகவும், பாதிப் பறவையாகவும் மாறியதையும் கண்டு வியந்து நின்றார். சிவபூசையை மறந்தார். அவரைப் பிரம்ம ராட்சத ஒன்று வந்து பிடித்துச் சென்றது. சிவபூஜை பிழைத்த 999 பேரை கற்கிமுகி என்ற பூதம் அடைத்து வைத்திருந்த பாதாளச் சிறையில் இவரையும் தள்ளிற்று. அன்றிரவே ஆயிரம் பேரையும் பலியிட நினைத்தது. அங்கிருந்த அனைவரும் சினமும் வருத்தமும் கொண்டு நக்கீரரைத் திட்டிய நேரம், அவருக்கு, உறுநர்த்தாங்கும் முருகனின்தாள்தான் நினைவில் வந்து நின்றது. ஆயிரமாயிரம் தேவரை அருஞ்சிறை மீட்ட தேவ தேவ தேவாதி தேவப் பெருமானே! இன்று இந்த ஆயிரம் பேரைச் சிறை மீட்க மாட்டாயா என்று உள்ளத்தோடு திருமுருகாற்றுப்படை பாடத் தொடங்கினார். சிறையில் எழுந்த முதல் நூல் தமிழ்நூல். முருகன் வரலாற்றை முதலில் கூறும் தமிழ்நூலும் இதுவே என்பர். அதன் தலைவன் தமிழ் முருகன் என்பது நமது மகிழ்ச்சிக்குரிய தித்திக்கும் செய்தி. நீலக் கடல் மீது சிவந்த சூரியன் உதிப்பதுபோல் நீல மயில்மீது செவ்வேள் முருகன் தோன்றுகிறான். எதற்கு? உலகம் உவப்ப!

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு"

முருகன் தோன்றித் தன் பாதமலரால் அன்று அந்த ஆயிரம்பேர் தலையிலும் நான்முகன் (1000 பேரும் பூதத்தால் அழிய வேண்டுமென்று) எழுதியிருந்த எழுத்தை அழித்தான். நக்கீரரோடு மற்றவரையும் காத்தருளினான் கந்தசாமி! அவரே நமது சொந்தசாமி! இந்தசாமிக்கு எந்த சாமி ஈடு?. மற்றொன்றுங் காண்போம்.

ஸ்ரீவைகுண்டத்தில் சண்முகசிகாமணிக் கவிராயரும் அவரது இல்லத்தரசியும் தவமியற்றி நோன்பிருந்து பெற்ற குழந்தை மூங்கை (ஊமை) யாக இருந்ததுகண்டு மனம் வருந்தினர். செந்திலாண்டவன் சந்நிதியில் போட்டு வேண்டி நின்றனர். வந்தகலி தீர்ந்து, பிள்ளை "கந்தர்கலி வெண்பாப்" பாடுவது கேட்டனர். ஊமையும் செவிடுமாக வாழ—என்று பிரமன் எழுதியிருந்த எழுத்தை மாற்றியது செந்தூரன் கால் அல்லவா? உலகு போற்றும் 'குமரகுருபரனாக' அந்தப் பிள்ளையைத் தந்தது யார்? கந்தனல்லவா? பிள்ளைத்தமிழாலே முத்துக்குமரனை, மதுரை மீனாட்சியைப்பாடிய வாய், சகலகலாவல்லிமாலை பாடி காசியை யாண்ட நவாபிடமும் திறம் காட்டிய சொல் நயம், யார் தந்தது? சங்கத்தமிழின் தலைமைப் புலவன் செந்தமிழ்க் குமரன் தந்ததல்லவா?. வேறொன்றுங் காண்போம்

அருணகிரியார் உளம்நொந்து கோபுரத்திலிருந்து உயிர்விடத் துணிந்த நேரம் உறுநர்த் தாங்கும் மதனுடை நோன்தாளால் தாங்கி, உலகுய்ய அவரை உய்வித்தது குமரனருளல்லவா? நான்முகன் எழுதிய எழுத்தின்படி அன்று கோபுரத்திலிருந்து விழுந்து உயிர்விட வேண்டியவர்தானே, அழித்து மாற்றியவன் யார்? அழகன் முருகன் அடிமலர்தான்.

'அருணதள பாதபத்மம் அதுநிதமுமே துதிக்க
அரிய தமிழ்தான் அளித்த' குமரன் அவனே!
"யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்" தான், இவ்வளவு

அரிய பாடல்கள் பாட முடிந்தது என்கிறார் அருணகிரியார். ஆகவே அவர் சொன்னபடி கந்தன் தாள்பற்றி, நம் வினைஎழுத்தை அழித்துக் கொள்ளலாம். அந்தப்பாதம் எங்கே யிருக்குமென்றும் காட்டினார், அவர். அவை- "தாவடி ஓட்டும் மயிலில்' 'தேவர் தலையில்' 'என்பாவடி ஏட்டில்' ஆக மூன்றிடங்களில்! நாம் எளிதாகப் பற்றக் கூடிய இடம் அருணகிரியின் பாவடிதானே! பற்றுவோம்! இன்புறுவோம்!

வாழ்க வையகம்! வளர்க வடிவேலன் புகழ்!

அருணகிரிக்கருளிய அறுமுகன்

பரங்கிரி அமரும் கற்பகத் தருவைப்
பராபரஞ் சுடரினை எளியேற்(கு)
இரங்கிவந் தருளும் ஏரகத்(து) இறையை
எண்ணுதற்(கு) அரியபேர் இன்பை
உரங்கினர் வானோர்க்(கு) ஒருதனிமுதலை
ஒப்பிலா(து) ஓங்கிய ஒன்றைத்
தரங்கிளர் அருணகிரிக்கருள்பவனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே.

— அருட்பா

முப்பொருள்

பதி, பசு, பாசம், இம் முப்பொருளின் உண்மைகளை விளக்கிக் காட்டுவது திருவதிகை மனவாசங்கடந்தார் அருளிய உண்மை விளக்கம் என்ற சாத்திரநூல்.

வேலும் மயிலும்

நா. முத்தையா "ஆத்மஜோதி"
இலங்கை

வேலே மூலவர்

வெல் என்ற அடியிலிருந்து பிறந்தது வேல். வேல ஞான சக்தி. அஞ்ஞான இருளைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது வேல். ஆகையால், அதனை ஞான சக்தி என்றே கூறுவர். வேல் வேறு முருகன் வேறு அல்ல. வேலே முருகன். முருகனே வேல். முருகன் திருஉருவுக்குப் பதிலாக வேலை வைத்து வணங்கும் கோயில்களுமுண்டு. யாழ்ப்பாணத்தில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலும் செல்வச் சந்நிதியிலும் வேலையே மூல மூர்த்தியாக வைத்து வணங்குகிறார்கள். முருகனுக்கு ஆறுமுகங்கள் இருப்பது போல வேலுக்கும் ஆறுமுகங்கள் உண்டு.

வேலின் வேலை

வேல் உண்டு வினை இல்லை; மயிலுண்டு பயம் இல்லை என்பது நம்மிடையே பழகிப் போன ஒரு வசனம். மூலமலமாகிய ஆணவத்தினாலேயே எல்லாத் துன்பங்களும் நமக்கு விளைகின்றன. ஆணவமலத்தை ஞானத்தால் வலிமை கெடச் செய்வதே சூரசங்காரம். வேலை நினைப்பவர்க்கு வினைப்பகை ஒழியும். வினைவிலங்கு அறுந்தால் உடம்பாகிய சிறையினின்றும் விடுதலை பெறுவோம்.

வேலின் வன்மை மென்மை

அன்பர்களுக்கு வினை ஓடவிடும் கதிர் வேல் அது; அசுரர்களுக்கு அச்சந்தரும் சுடர் வேல் அது. ஒரேவேல் இன்பத்தையும் கொடுக்கிறது; துன்பத்தையும் கொடுக்கிறது. பூனைக் குட்டியினிடம் உன் அம்மாவின் பல் எப்படி இருக்கும் என்று கேட்டால், 'அதுவா பஞ்சுபோல் மெத்தென்றிருக்கும்' எனப் பதில் கூறும். எலியிடம் கேட்டால், 'ஐயோ அதை ஏன் கேட்கிறீர்கள்? எங்கள் உயிரைப் போக்கும் வாள் அதுதானே! நினைத்தாலே உடல் நடுங்குகிறது' என்று கூறும். யாரிடம் அது செயல்படுகிறதோ அதற்கு ஏற்ற விளைவு உண்டாகிறது. வேலும் அத்தகையதுதான்.

வேல் கோட்டம்

"வேலை வணங்குவது நமக்கு வேலை" என்று கூறுவார் சைவ எல்லப்பநாவலர். வேலை உடையவன் வேலன் என்பது மாத்திரம் அல்ல; பண்டைத் தமிழர் வேலையே வேலன் என்று கூறி மகிழ்ந்தனர். பழங்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் முருகப் பெருமானுக்கு திருக்கோயில் இருந்தது. அங்கே வேலை நட்டு அதனையே ஏத்திப் போற்றி பூசை செய்து வந்தார்கள். அதை இளங்கோ

வடிகள் சிலப்பதிகாரத்தில் வேல்கோட்டம் என்றே பாடுகின்றார்.

வேலின் வெற்றி

முருகன் கைவேல் கிரௌஞ்சமலையைப் பொடிப் பொடியாக்கியது; மாயையின் மகனாகிய சூரனுடனும் ஏனைய அசுரர்களுடனும் பெரும்போர் செய்து வெற்றி வாகை சூடியது. அசுரேந்திரனும் சூரன் அமரர்களுக்குச் செய்த இடர்களை எல்லாம் களைந்து தேவர்களுக்கு வாழ்வு அளித்தது; நக்கீரர் முதலான ஆயிரம் அடியார்களைக் குகையில் அடைத்து வைத்த கற்கிமுகி என்ற பூதத்தை நக்கீரர் திருமுருகாற்றுப்டையைப் பாடியபோது, கொன்று குகையை இடித்து நக்கீரருக்கும் அவர் தம்மொடு சேர்ந்தார்க்கும் சிறைவாழ்வு நீக்கிப் பெருவாழ்வு கொடுத்தது. இவ்வாறு இளையபிரானுடைய வேல் என்றும்பக்தர்களுக்குப் பாதுகாப்பாகவே நின்று நிலவுகிறது.

''துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்க இடர்
நினைக்கின் அவர் குலத்தைமுத லறக்களையும்
எனக்கோர் துணையாகும்
தனித்து வழி நடக்குமென திடத்து மொரு
வலத்துமிரு புறத்துமரு கடுத்து இரவு
பகல் துணையதாகும்'

என்று அருணகிரியார் வேலை ஏத்திப் போற்றியுள்ளார்.

''வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் சொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டேதுணை''.

என்று வேலின் பெருமையை நக்கீரர் விரித்துரைப்பார்.

மாமயில்

மயில் ஓங்கார வடிவம். முருகப் பெருமானுடைய வேலினால் துளைபட்ட சூரபத்மாவினுடைய வச்சிரயாக்கையை இரண்டாகப் பிளந்தது. ஒரு பாதி மயிலாகவும் மறுபாதி சேவலாகவும் மாறின. மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் ஆக்கிக் கொண்டார் முருகப்பெருமான். சேவல் நாதவடிவம்; மயில் விந்து வடிவம்.

''நாதவிந்து கலாதி நமோநம''

என்று பாடுவார் அருணகிரியார். உலகத்திலே யார் பெரியதவத்தைச் செய்தவர்கள் என்ற கேள்விக்கு, 'யார் ஒருவர் இறைவன் திருவடியை விட்டு நீங்காமல் இருக்கிறார்களோ, அவர்களே தான் தவத்திற் சிறந்தவர் என்று கூறப் பட்டது. அப்படியானால் முருகப் பெருமானுடைய திருவடியைக் கணப்போதேனும் விட்டு நீங்காத மயிலே தவத்தில் சிறந்தது என்று கொள்ளவேண்டும்.

அன்பர்கள் அடியார்கள் அழைத்த நேரத்திலே விரைந்து வந்து அவர்கள் துயரம் போக்குவதற்காக மயில் மீது முருகப்பெருமான் காலை தயாராக வைத்துக் கொண்டே இருக்கின்றார்.

''நீலம் கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக் கண்டதனாலே
மால் கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே''

என்கிறார் அருணகிரியார்.

விரிந்த நீலவானம் விரிந்த மயிலின் தோகை. அவ்வானில் தோன்றும் சூரியன் மேலேந்திய குமரன் ஆகவே, மண்ணிலும் வேல்மயில். விண்ணிலும் வேல்மயில்.

வேலை வணங்குவது நமக்கு வேலை

பூவும் நாரும்

மாணிக்க சிவசங்கரன்
திருமுறைச்செல்வர், சித்தலிங்கமடம்

தழைத்த செடியில் மலர்ந்து மணம் தருவது பூ. நீர்ப்பூ, நிலப்பூ, மரப்பூ, கொடிப்பூ ஆகிய நான்கு வகைப் பூக்களில் எல்லாம் அழகுடையவைதாம். அவற்றிற் சில மணம் உள்ளவை; சில மணம் அற்றவை. சிறியோர் முதல் பெரியோர் வரை எல்லோரும் பூவை விரும்புவர். சிறுவரும் வாலிபரும் தாங்கள் நுகர்ந்து அணிய விரும்புவார். பக்தர்களும் முதியோரும் இறைவனுக்கு அணிவித்து பரவி வழிபட நினைப்பர்.

யார் யார் எவ்விதம் அணிய வேண்டுமானுலும் அவற்றைத் தொடுக்க நார் அவசியம் தேவைப்படுகிறது. அதற்கான நார் காய்த்து ஓய்ந்த வாழையின் பட்டையேயாகும். இந்த நாருக்குக் கவர்ச்சியும் வாசனையும் கிடையாது. எந்த விதத்தினும் நுகரும் தன்மை அமையாதது. ஆனுல் பூவைக் கட்டி அணிவிப் பதற்கு இது மிகவும் உதவியாக இருக்கிறது. வாசனை அதிகமுள்ள பூக்களுடன் சேர்ந்து அவற்றின் வாசனையைப் பெறுகிறது. மக்கள் தலையிலும் இறைவன் முடியிலும் பொருந்தும் ;வாய்ப்பையும் அடைகிறது. நாரில் கட்டாத பூவை சிறப்பாய் அணிந்து அலங்கரிக்க முடியாது.

இங்கு நாம் கருதிச் சொல்லப்போவது மற்ெருரு விதமான நாரும் பூவும் ஆகும். அத்தகைய பூ இறைவன் திருவடிகள் என்பது மணிவாசகர்,

''போற்றியருளுகநின் ஆதியாம் பாதமலர்''

என்றும், சேக்கிழார்

''சென்னிமிசைப் பாதமலர் சூட்டினுன் சிவபெருமான்''

என்றும் சொல்லுகிருர்கள்.

''திருவடித்தாமரை; பாத தாமரை'' என்பவற்ருல் தெரிந்து கொள்ளலாம். இந்தப்பூ மக்களுக்கு அகப்படாதது. ஆனுல், பக்தர்கள் நினைத்து கசிந்து வேண்ட உள்ளத்தே உற்றுப் பொருந்துவது. நாரும் உடலே நறுமணந்தேக்கிப் பூஞெறைத இன்பமனம் பொருந்தச் செயவல்லது. இதனை எப்படி எடுப்பது? எந்த நாரில் தொடுப்பது? கையால் தொட்டு வாழை நாரில் கட்டவராத

தல்லவா? எடுப்பதற்கும் தொடுப்பதற்கும் நம் ஆன்ருேர்கள் எளிய இனிய முறைகளை வகுத்து உதவியுள்ளார்கள். இந்தப் பூவை காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்கிக் கரையும் உள்ளத்தால் எடுக்கலாம். உள்ளத்தே ஊறும் அன்பு என்னும் நாரில் ஆனந்தமாகத் தொடுக்கலாம். அங்கு இறைவன் வந்து தங்கி நிலைத்த அருள் மணத்தை நிலவச் செய்கிருன். தனியாக அல்ல. சத்தியாகிய மாதிெனடும் வந்து நம் வாழ்வையே மணக்க வைக்கிருன்.

'எந்தமாதவம் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை ஆய பாரபரன்
அந்தமில்புகழ் ஆரூரற நெறி
சிந்தையுள்ளும் சிரத்துள்ளும் தங்கவே
'ஏதுமொன்று அறிவிராகிலும்
ஓதி அழுசெழுத்தும்முணர் வார்கட்கு
பேதமின்றி அவரவர் உள்ளத்தே
மாதுந்தாமும் மகிழ்வர் மாற்பேறரே

எனவே அம்மை அப்பனுடைய திருவடித்தாமரையாகிய மலர்கள் நம்முள்ளத்தே இடைவிடாத தியானத்தால் அடையப் பெறுகிரேம். வந்தமைந்த மலர்களை வாடாமல் சிதருமல் ஊற்றெடுக்கும் அன்பு நாரினுல் அமையப் பிணிக்க வேண்டும்.

''அன்பெனு நார் தொடுத்தலங்கல் சூட்ட''
''நலத்தின்கண் நாரின்மை நாணுமை''

என்பனவாய ஆன்ருேர் வாக்குகளால் ''அன்பு'' நார் எனக் குறிக்கப்பெறுவது தெரிந்தோம்.

இதனைச் சைவ மேன்மையும் ஆக்கமும் உடைய ''குமரகுருபரர்'' ஒரு பாட்டிலமைத்து நம்மை உணரும்படிச் செய்துள்ளார்.

''நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமிழுண்டேனைப்
பாவுண்டினங்கள் பலவுமுண்டே பங்கிற்கொண்டிருந்தோர்
தேவுண் குலைக்கும் கடம்பாடவிப் பசுந்தேனின் பைந்தாட்
பூண்டு நாரொரன் றிலையாந் தொகுத்துப்புனைவதற்கே''

எனவே, மெய்யன்பர்கள் உள்ளத்து அன்பெனும் நாரை மிகச்செய்து திருவடிக் கமலங்களாகிய பூக்களைப் புனைந்து புணர்த்தி மலம் நீங்கி மணம் பெற முயலுவோமாக.

ஒரு மாணவன் தன் தகுதியை வெளிப்படுத்தும் ஆற்றல் பெறும் வரையில், அவனுக்கு உலகில் மதிப்பு ஏற்படாது.

சிவஞானபோதம்
பன்னிரு சூத்திரங்களின் கருத்து

சித்தாந்தக்கடல் அருணை வடிவேல் முதலியார்
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

1) சங்கார காரணனாகிய அரனே உலகிற்குக் கடவுள்.

2) உயிர்களிடத்தில் கடவுள் அத்துவிதமாய்க் கலந்து நிற்கிறார்.

3) எண்ணில்லாத உயிர்கள் அநாதியே உண்டு.

4) உயிர்கள் கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை என மூன்று அவத்தைகளை அடையும், (அவத்தை = நிலை.)

5) உயிர்களுச்குச் செயலின்மையால் அவைகள் கடவுளால் செய்யப்படும் உபகாரத்தை உடையன.

6) அழியும் தன்மையதான உலகிற்கு வேறாய் என்றும் அழியா நிலைமையை உடையது பதி.

7) சார்ந்தத்தின் வண்ணமாய் உள்ளது ஆன்மா.

8) உயிர்கள் தங்கள் அஞ்ஞானத்தை நீக்கி, ஞானத்தை உணரும் முறைமை இன்னது என்பது.

9) ஆன்மாவைத் தெளிவிக்கும் முறைமையால் ஆன்மசுத்தி செய்யும் வழி இன்னது என்பது.

10) பாசத்தை அறுக்கும் வழி இன்னது என்பது.

11) பாச நீக்கமுற்ற உயிர் சிவத்தில் அழுந்தும் என்பது.

12) எக்காலத்தும், உபகாரியான கடவுளுக்குப் பாச நீக்கமும், சிவப்பேறும் பெற்ற உயிர்கள் பணிசெய்து வழிபடும் முறைமை இன்னது என்பது.

சைவ சித்தாந்த ஞான சாத்திரங்கள் பதினான்கு

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மைப் பிரகாசம் – வந்தஅருள்
பண்புவினா போற்றி கொடி பாசமிலாநெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று.

எல்லாம் சிவன் என நின்றாய் போற்றி!

ஆறுமுக வள்ளலும் அருட்பிரகாச வள்ளலும்

சோ. சத்தியசீலன், எம்.ஏ, பி.டி.,
திருச்சி

எல்லாம் தரவல்லவன் எம்பெருமான் ஆறுமுக வள்ளல் ! ஆனால் மானிட இனம் எதைக் கேட்பதென்று அறியாமல் தடுமாறு கின்றதே ! இந்தத் தடுமாற்றத்தை நீக்கி, அவனருளை வேண்டிக்கேட்கும் வித்தையை நமக்கு அருளிச் செய்த பெரியார் இராமலிங்கர்.

பொன்னைக் கேட்கலாமா ? அது போவது எப்போதென்று புரியாதே ! மண்ணைக் கேட்கலாமா ? அது சட்டத்தின் கரங்களால் பறிமுதல் செய்யப்படுமே ! உடல் வலிமையைக் கேட்கலாமா ? அது காலத்தின் கொடிய கரங்களில் கட்டழிந்து, போகுமே ! பட்டம் பதவிகளைக் கேட்க லாமா ? அவை அரசியல் சூருவளியில் ஆலாய்ப் பறக்கின்றனவே ! பின் எவற் றைத்தான் அவன் சந்நிதியின் முன்நின்று கேட்பது ? புரியவில்லையே ! வடலூர் வள்ளல் அந்த அறிவை நமக்கு அள்ளி வழங்குகின்ருர் !

அன்பனே ! சென்னைக்கு வா ! கந்தக் கோட்டம் அறிவாயா? தயங்காதே ? மயங்கும் மனத்தை ஒருநிலைப்படுத்து ! சண்முகத் தெய்வமணியாம் வள்ளல் வீற் றிருக்கும் அழகை நோக்கு ! அலைவீசும் ஆழ்கடலைப் பார்த்திருக்கிருயல்லவா ! இங்கே அலையில்லாச் சிவஞானக் கடலாக அந்த மலைமகள் புதல்வன் அமர்ந்திருப் பதைப்பார் ! ஆனந்த அமுதம் உன் கண் ணெதிரே ததும்பி வழியும் அழகைப்பார் ஒருபுறம் பொற்கொடி ! அவள் தெய்வ யானை ! மறுபுறம் பசுங்கொடி ! அவள் தான் வள்ளி ! இரு கொடிகளும் படர்ந்த அழகுமிகு பொன்மலை ! அவன்தான் ஆறு முகவள்ளல் !

அவனிடம் கேள்! அவன் தருவான்! நீ உய்ய! உன் ஆன்மா பேறு பெற! நான் சொல்வதையெல்லாம் கேள்! நம்பிக்கை யோடு கேள்!

"பெருமானே! எனக்கு ஓர் அருட் குடும்பத்தைக் கொடு! உலகியற் குடும்பம் எனக்கு அளிப்பதெல்லாம் ஓயாத மனக் கவலை! மாயாத பிறவிப்பயணம்! எனவே நிராசை என்னும் மனைவி ஒருத்தி எனக்கு வேண்டும்! சாந்தம் என்னும் புதல்வன்! நெறிதவருத ஈகை என்னும் பொருள்! இருளைத்தராத நல்ல அறிவு என்னும் துணைவன்! நிராங்காரம் என்னும் இனிய நண்பன்! சுத்தமான மனம் என்னும் வேலைக்காரன்! சகல கேவலமில்லாத ஒரு வீடு! இவற்றை எனக்கு அருள்புரிந்து என் ஆன்ம வாழ்க்கையை ஈடேறச் செய்வாய் ஐயனே!"

எதைக்கேட்க வேண்டுமென இப்போது புரிகின்றதா? இவற்றைக் கேட்டுப்பெற

அருட்பிரகாச வள்ளல் நமக்கு வழி காட்டுகின்ருர்!

நிலையுறு நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு
நிகழ் சாந்தமாம் புதல்வனும்
நெறிபெறும் உதாரகுணம் என்னுநற் பொருளும் மருள்
நீக்கும் அறிவாம் துணைவனும்
மலைவறு நிராங்கார நண்பனும் சுத்தமுறு
மனம் என்னும் நல்ஏவலும்
வருசகல கேவலம் இலாத இடமும் பெற்று
வாழ்கின்ற வாழ்வு அருளுவாய்!
அலையிலாச் சிவஞான வாரியே ஆனந்த
அமுதமே குமுத மலர்வாய்
அணிகொள் பொற்கொடி பசுங்கொடி இரு புறம் படர்ந்து
அழகு பெறவரும் பொன்மலையே
தலைவர் புகழ் சென்னையில் கந்த கோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!
(தெய்வமணி மாலை)

நின்று இப்படி உள்ளம் உருகிக் கேட்டால் அவன் அருளாதிருப்பானே! ஆன்மா உய்ய அருட்பிரகாச வள்ளல் நம்மை வழிப் படுத்துகிருர்! அவர் வழி நின்று அருள் பெறுவோமாக!

சைவமணி சண்முகன்

மாலும் அயனும் உருத்திரனும் வானத்தவரும் மானிடரும்
மாவும் புள்ளும் ஊர்வனவும் மலையும் கடலும் மற்றவையும்
ஆலும் கதியும் சதகோடி அண்டப் பரப்பும் தானுக
அன்ருேர் வடிவம் மேருவிற்கொண்டு, அருளும் தூய அற்புதமே
வேலும் மயிலும் கொண்டுருவாய் விளையாட்(டு) இயற்றும் வித்தகமே
வேதப்பொருளே மதிச்சடைசேர் விமலன் தனக்கோர் மெய்ப்பொருளே
சாலும் சுகுணத் திருமலையே தவத்தோர் புகழும் தற்பரனே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த சைவமணியே சண்முகனே

—அருட்பா

இல்லை! இல்லை!

சிவத்துக்கு மேல் தெய்வம் இல்லை சித்திக்குமேல் நூல் இல்லை. சித்தி=சிவஞான சித்தியார் என்ற நூல். இதனை அருளியவர் அருணந்தி தேவர்

திருப்புகழில் வேண்டுகோள்கள்

தருமையாதீனப்புலவர், பேராசியர்
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்

அருணகிரிநாதர் முருகப்பெருமானின் அரிய திருப்புகழ்களையெல்லாம் அற்புதமான சந்தப்பாக்களாக வடித்துள்ளார்; முருகன் அடியார்கள் இடரைக்களைவோன் என்பதனை எண்ணற்ற இடங்களில் குறிப்பிடுகின்றார் வேண்டுவது இறைவன் திருவடிப் பேறென்றே என்பதனைத் தெளிவாக்கி யுள்ளார்; இனிய இசை கலந்த இந்த அற்புத விருந்தை முருகனடியார் கள் நாளும் துய்த்து வருகின்றார்கள்.

"அறிவால் அறிந்து உன் இருதாள்
இறைஞ்சும் அடியார் இடைஞ்சல்
களைவோனே"

முருகனை ஞானத்தின் வழியே அறியவேண்டும் என்பதும், அதுவும் ஒரு வழிபாடு என்பதும் இங்குக் குறிப்பாக உணர்த்தப்படுகின்றன.

முருகனை வழிபடுவதற்கும் அவன் திருவருளே வேண்டும்; "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்பது மணிமொழியன்றோ? திருச்செந்தூர்த் திருப்புகழிலே இதனைத் தெளிவாக்குகின்றார் அருணகிரி நாதர்:

"வரியார் கருங்கண் மடமாநர்
மகவாசை தொந்தம் அதுவாகி
இருபோது நைந்து மெலியாதே
இருதாளின் அன்பு தருவாயே"
"இயலிசையில் உசித வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே
உயர்கருணை புரியுமின்பக் கடல் மூழ்கி
உனை யெனதுளறியும் அன்பைத் தருவாயே"

அவன் அந்த அன்பைத் தராவிடில் அது பெறுதற்கரியது என்ற உண்மை யைத் திருப்புகழ்ப்பாக்கள் பல்வேறிடங்களில் தெளிவுறுத்தும்.

திருவாவினன் குடித் திருப்புகழில் இதனை உணர்த்துவார்:

"கனக மருவும் இருபாதம்
கருத அருளி எனது தனிமை
கழிய அறிவு தரவேணும்"

உன்னுடைய திருவடிகளைத் தியானிக்கின்ற பேறும், அதனை அறியும் அறிவும் நீயே தரவேண்டும் என்று வேண்டுகின்றார் அடிகள்.

இம்மை மறுமை நலங்களை இறைவன் அருளவேண்டும் என்று விண்ணப்பிக்கும் வேண்டுகோள்களும் திருப்புகழில் உள்ளன; எடுத்துக் காட்டாக இரண்டொன்றைக் காட்டுவது பொருந்தும்:

"வசன மிகவேற்றி மறவாதே,
மனது துயராற்றில் உழலாதே,
இசைபயில் சடாட்சர மதாலே
இகபர சௌபாக்யம் அருள்வாயே!
பசுபதி சிவாக்யம் உணர்வோனே!
பழனிமலை வீற்ற ருளும்வேலா!
அசுரர் கிளை வாட்டி மிகவாழ
அமரர் சிறைமீட்ட பெருமானே!"

"வந்தசரணார விந்த மதுபாட
வண்டமிழ் விநோத மருள்வாயே!"

பிரணவத் திருமந்திரத்தில் ஊறிநிற்கும் ஞான அனுபவத்தை அருளவேண்டும் என்று உருகிவேண்டும் இடங்களும் உள:

"காமியத் தழுந்தி !இளையாதே
காலர்கைப்படிந்து மடியாதே
ஓமெழுத்தில் அன்பு மிகவூறி
ஓவியத்திலந்தம் அருள்வாயே"

"நாள்போய் விடாமல் ஆருறுமீதில்
நானுபதேசம் அருள்வாயே"
"உபதேச குருபர
சம்ப்ரதாய மொடேயுநெறியது பெறுவேனோ"

"நானென்ப தற்று உயிர் ஊனென்பதற்று வெளி
நாதம் பரம்பிரம ஒளிமீதே
ஞானம் சுரப்பமகிழ் ஆனந்த சித்தியொடே
நாளும் களிக்கபதம் அருள்வாயே"
"சீவனொடுக்கம் பூதவொடுக்கம்

தேறவுதிக்கும் பரஞான
தீபவிளக்கம் காண எனக்குன்
சீதளபத்மம் தருவாயே''
''நாளுமிகுந்த கசிவாகி.
ஞானநிருத்த மதை நாடும்
ஏழை தனக்கும் அநுபூதி
ராசிதழைக்க அருள்வாயே''

ஒப்பற்ற பக்தி தமக்கு வேண்டும் என்று கசிந்துருகும் பல பாக்கள் ஓத ஓத உள்ளம் உருக்கும் தன்மை உடையவை:

''எதிரிலாத பத்தி தனை மேவி
இனிய தாள்நினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் உறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே''

என்று கதிர்காமத்தில் வேண்டுவார்.

''பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனுமா றெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே''

என்று இரத்னகிரி எனப்படும் வாட்போக்கிரிலே வேண்டுவார். யானை உண்ட விளாம்பழம்போல, உடலைக்கொண்டு, பக்தியில் ஊறி வாழும் நிலை வேண்டும் என்பார் காசித்திருப்புகழில்:

''வேதமுண்ட விளாகனி யதுபோல
மேனிகொண்டு வியாபக மயலூறி
நாளுமிண்டர்கள் போல்மிக அயர்வாகி
நானுநைந்து விடாதருள் புரிவாயே''

''விரகற நோக்கியும், உருகியும், வாழ்த்தியும்
விழிபுனல் தேக்கிட அன்புமேன்மேல்
மிகவும் இராப்பகல் பிறிதுபராக்கற
விழைவு குராப்புனையும் குமார
முருக சடாட்சர! சரவண! கார்த்திகை
முலைநுகர் பார்த்திப! என்றுபாடி
மொழிகுழறுத் தொழு தழுதழுதோட்பட
முழுதுமலாப் பொருள் தந்திடாயோ''

என்ற பகுதிகள் பக்தி நிலைகளை இனிது விளங்குதல் காணலாம்.

மயில்மீது வள்ளி தெய்வயானை புடைசூழ வரவேண்டும் பெருமானே என்று உருகிவேண்டும் பகுதிகள் எண்ணற்றவை.

''வனச மாமியாராட மலரில் வேதனுராட
மயிலுமாடி நீயாடி வரவேணும்''

ம — 12

''அருள தருளி எனையு மனதொ
டடிமை கொளவும் வரவேணும்''

''மருவியின்றெனக்கு மரகதம் சிறக்கு
மயிலினில்வந்து முத்தி தரவேணும்''

''பழைய அடியவ ருடனிமையவர்கணம்
இருபுடையு மிருதமிழ்கொடு மறைகொடு
பரவவருமதில் அருணையில் ஒருவிசை
தரவேணும்''

''இருநிலமீதில் எளியனும் வாழ
எனதுமுனோடி வரவேணும்''

''மயிலேறி
அடியனிருவினை நீறுபட அமரர்இதுபூசை
அதிசயமென அருள்பாட வரவேணும்''

முதலிய பல்வேறு பகுதிகள் இத்தகைய வேண்டுகோள்களைத் தாங்கி நிற்கின்றன.

ஞானவாழ்வு வேண்டும் என்று மதுரையில் அடிகளார் உருகி வேண்டினர்;

''கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே''

சித்திர ஞானபாதம் அருளவேண்டும் என்று புன்னிருக்கு வேறுரில் தொழுதார்?

''சித்தினிலாடலோடு முத்தமிழ்வானரோது
சித்திர ஞானபாதம் அருள்வாயே''

தமக்குத் தீட்டை தரவேண்டும் என்று உருகியதும் உண்டு:

''அறிவிலேனை மெறிநிற்க நீ தீட்சை
தரவேணும்''

தீட்சை முதலிய கிரியா மார்க்கங்களில் ஏனைய பக்தி. ஞான, யோக மார்க்கங்களைப் போன்றே அடிகளாருக்கு ஈடுபாடுண்டென்பதனை இது காட்டும்.

தீட்சையை விழைந்த அடிகளார், திருவிளக்கிட்டுத் திருமுருகனை வழிபட்டுப் பூசிக்க விழையும் இடமும் இதனை இனிதுணர்த்தும்:

''விரிந்த நாடும் குன்றமும் நிலையெனமகிழாதே
விளங்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே''

இவ்வாறு திருப்புகழ் முழுவதும் அருணகிரிநாதரின் வேண்டுகோள்கள் விரவியுள்ளன. அவை அனைத்தும், அவற்றை ஓதுவோர்க்கு உருகி விண்ணப்பிக்க ஏற்றவையாக உள்ளன.

"வாழினும் வறுமை கூரினும் நினது
வார்கழல் இணைகள் மறவேனே"

என்ற உறுதிப்பாடுடைய அடிகளாரது திருப்புகழ் வேண்டுகோள்கள், உறுதியானவை; தெளிவானவை; பாடும் அடியார்க்கு மெய்யான பயன் விளக்கும் திட்பநுட்பம் உடையவை.

"உருகி நானுனைப் பருக வைத்தவா"

என்று ஒவ்வொரு நாளும் வேண்டி செவ்வேட் பரமனால் செவ்வையாக வாழ்வோமாக!

வேல் கையன்

வேல்கொளும் கமலக் கையனை எனையாள்
மெய்யனை ஐயனை உலக
மால்கொளும் மனத்தர் அறிவரும் மருந்தை
மாணிக்க மணியினை மயில்மேல்
கால்கொளும் குகனை எந்தையை எனது
கருத்தனை அயன் அரிஅறியாச்
சால்கொளும் கடவுள் தன்அருள் மகனைத்
தணிகையில் கண்டிறைஞ் சுவனே.

— அருட்பா

இழப்பு

பணத்தையே குறிக்கோளாகக் கொள்பவன் தர்மத்தை இழக்கிறான்.

கவலையால் வித்தையையும் அதன் பலனையும் இழக்கிறான்.

உலோபி தன் சுகத்தையே இழக்கிறான்.

தெய்வம் பற்றித் தொல்காப்பியர்

பேராசிரியர் ஆ. சிவலிங்கனுர்
மயிலம்

முதற்பொருள்:

தொல்காப்பியம் மனித வாழ்வுக்குரிய நூல். சிறப்பாகத் தமிழர் வாழ்வின் இயல்பைக் கூறும் நூல். தொல்காப்பிய ஆசிரியராகிய தொல்காப்பியர், தம் காலத்தில் வாழ்ந்த தமிழரின் வாழ்வு நலம் பற்றிக் கூறிய வகையில் உலகுக்குத் தொல்காப்பியத்தைத் தந்தார். மனித வாழ்வுக்கு முதலாய் இருப்பது எது என்ருல் 'தெய்வம்' என்பர் பலர். உலகம் ஆதிபகவனை முதலாகவுடையது என்ருர் வள்ளுவர் (குறள் 1.) தொல்காப்பியரோ கடவுளை மனிதனுக்கு – உலகுக்கு முதற் பொருள் என்ருர் இல்லை. மனிதன் வாழ்தல் அவன் உரிமை; அவ்வுரிமை யாவது அவன் ஒழுகும் ஒழுக்கம்; அவ்வொழுக்கமே அவனின் உரிமைப் பொருள். அதனுல் ஒழுக்கத்தை உரிப் பொருள் என்ருர் தொல்காப்பியர். அவன், ஒழுக்கத்தைத் தான் இருக்கும் இடத்தில் காலத்துக்கு ஏற்ப மேற் கொள்கின்ருன். அவனின் ஒழுகலாற்றுக்கு இடமும் காலமும் அடிப்படையாகின்றன. அதனுல் நிலமும் பொழுதும் அவனுக்கு – அவன் உரிமைப் பொருளுக்கு முதற் பொருள் ஆகின்றன. அதனுல் தொல்காப்பியர்,

முதல்எனப் படுவது நிலம்பொழு
திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்
தோரே (தொல்பொருள். அகத். 4)

என்ருர்.

தெய்வம் கருப்பொருள்

இருக்குமிடத்திருந்து காலத்துக்கேற்பத் தன் ஒழுகலாற்றை மேற்கொள்ளும்போது, அவன் அனுபவிக்கும் பொருள்கள் கருப் பொருள்களாகும். கருப்பொருள்கள் என்பன நிலத்தில் காலங்களில் தோன்றும் அனுபவப் பொருள்களாம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலப்பிரிவு ஐந்தாகும். அவற்றுக்குக் காலப்பகுப்பும் உண்டு. அவ்வந் நிலத்தில் அவ்வக்காலத்தில் தோன்றும் அனுபவப் பொருள்களை அவ்வந்நிலக் கருப்பொருள்கள் என்பர். ஆசிரியர் தொல்காப்பியர்,

தெய்வம் உணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு
தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப
(தொல். பொருள் அகம் 20)

என்ருர். நிலத்தில் தோன்றி மனிதனுல்

அனுபவிக்கப் பெறும் பொருள்களுள் முதலாவதாகத் தெய்வத்தைக் கூறினர் தொல்காப்பியர். எனவே தெய்வம் மனிதனால் அனுபவிக்கப்படும் பொருள் என்பது விளங்கும். தத்துவப் பேராசிரியர், டாக்டர், வை. இரத்தினசபாபதி அவர்கள்,

"கடவுளைப் பற்றிய கருத்து எதுவாயிருப்பினும் அது மனிதனின் அனுபவப் பொருளாக அமைந்து அனுபவிக்கப் பெற்ற காரணத்தால் தோன்றப் பெறுவது என்பதே தொல்காப்பியரின் உள்ளக் கிடை. அனுமானம், ஆகமம் போன்ற அளவை முறைகளால் உண்டு எனக் கருதப்படும் பொருளன்று கடவுள். உணவு, விலங்கு, மரம், பறவை, இசைக் கருவிகளைப் போன்றவை அவ்வந்நிலத்துக்கேற்பவும், காலத்துக்கேற்பவும் மக்களின் அனுபவ நிலைக்கொத்ததாக அறிந்து, துய்த்து அமைதி கொள்ளுதற்குரியவை. அவ்வாறே தெய்வமும் என்று குறிப்பிடுகிறார், தொல்காப்பியர்."
(திருமுறைத் தெளிவே சிவஞான போதம் பக். 22)

என்று கூறித் தொடர்ந்து தெய்வம் அனுபவப் பொருளே என்பதைத் தெளிவுபட விளக்கியுள்ளார்கள்.

தெய்வமும் நிலமும்

தொல்காப்பியர் தெய்வம் பற்றிக் கூறியிருப்பினும் தெய்வத்தின் முழுமை பெற்ற இலக்கணம் இன்னது என்று எங்கும் கூறவில்லை. உணா, மரம் முதலிய கருப் பொருள்கள் குறிஞ்சி முதலிய நிலங்களுக்கு வெவ்வேறாக இருத்தல் போலவே தெய்வமும் வெவ்வேறாக ஓதப்பட்டது.

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
(தொல். பொருள் அக. 5)

எனக் குறிப்பிட்டார் தொல்காப்பியர். மற்றைய கருப்பொருள்கள் வெளிப்படையில் கண்ணுக்குப் புலனாகத் தோன்றுவன. ஐம்புலனுக்கும் நுகர்ச்சிப் பொருள்களாக அமைவன. ஆனால், தெய்வம் தோன்றி வடிவம் காட்டவில்லை. அவ்வந்நிலத்து மக்கள் தாமே ஏற்றுக்கொண்ட பெயருடையதாயிற்று. அதனால் நிலங்கள் தோறும் வேறுபட்டிருக்கும் உணவு முதலிய கருப் பொருள்களை விவரிக்காமல், தெய்வத்தை மட்டில் நிலங்களுக்குரியனவாக வேறுவேறு விவரித்தார். தனக்கென நிலமில்லாத பாலைக்கு அவ்வந்நிலத் தெய்வமே தெய்வமாக அமைதலோடு கொற்றவை சிறப்புத் தெய்வம் ஆம்.

தெய்வம் பிற கருப் பொருளின் வேறுபட்டது:

தெய்வம் அனுபவப் பொருளாயினும்-மற்றைய உணா முதலியனபோல ஐம்புலனும் துய்க்கும் பொருளாயினும், கண்ணுக்குப் புலப்படாமையானும், புலப்படும்படியான தொழிலை வெளிப்படையில் செய்யாமையானும் உணா முதலிய கருப்பொருள்களுக்கு மாறுபட்டதாகும். உணா முதலிய கருப்பொருள்களின் நிகழ்ச்சிகளைக் கண்டு – குறிப்பாக ஒருவர்க்கொருவர் கூறும் உள்ளுறைக்குத் தெய்வம் பயன்படவில்லை. அதனால்,

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே
(தொல். பொருள். அக 49)

என்றார் தொல்காப்பியர்.

தெய்வ இலக்கணம்

தெய்வத்தின் இலக்கணமாகத் தொல்காப்பியர் யாதும் கூறவில்லையென்றாலும், மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை எனப் பெயர்கள் கூறியிருத்தலின், தெய்வம் நிலங்களுக்கேற்றவாறு பெயரும் வடிவும் கொள்ளும் என்பது பெறப்படும். இதுவும் இலக்கணம்.

தெய்வம் ஒன்றே; அதுவே திரிந்து பல வடிவம் கொள்ளும்; அது உயர்திணையாகவே கருதப்படும்; உயர்திணையாகக் கருதப்படினும் ஆண், பெண் என்பனவற்றுக்கேற்ப இறுதி எழுத்துக்களை - அதாவது ஆணை உணர்த்தும் ணகர எழுத்தையோ, பெண்ணையுணர்த்தும் ளகர அல்லது இகர எழுத்தையோ உடையதன்று. அதனால் அது ஒரு பொருளே. ஆனால் அதுவே மனிதனிடம் வரும்போது தன் வடிவு மாறி ஆணுக்குரிய ணகர ஈறு பெற்றோ பெண்ணுக்குரிய ளகர அல்லது இகர ஈறு பெற்றோ வரும். தெய்வத்தையுணர்த்தும் சொல் 'தேவு' என்பது. இது 'தேவன்' என ஆண்பாலாகவும் 'தேவி' எனப் பெண்பாலாகவும் திரிந்து வரும். இதுவும் தெய்வத்தின் இலக்கணம் என்பதை,

> பெண்மை சுட்டிய......................................
> ....
> தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்
> கிளவியும்
> இவ்வென அறியும் அந்தந்தமக் கிலவே
> உயர்திணை மருங்கிற் பால்பிரிந்
> திசைக்கும்.
> (தொல். சொல். கிளவி. 4.)

என்ற நூற்பாவால் அறியலாம்.

இதுவரை தெய்வத்தைப்பற்றி நாமறிந்தன மூன்று; தெய்வம் என்பது ஒரே பொருள். (தொல். சொல். கிளவி. 4.), அது, மனிதனின் அனுபவப் பொருள். (தொல். பொருள். அக. 20) அது, அவன் அனுபவத்துக்கேற்பப் பலவடிவில் வரும் பொருள் (தொல். பொருள். அக. 5) என்பனவாம்.

தெய்வம் அனுபவப் பொருளாமாறு:

இனி அத்தெய்வம் மனிதனின் அனுபவப் பொருளாக வருமாறு காணலாம்.

1. காத்தல்:

> வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
> பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
> பொலிமின் என்னும் புறநிலை
> வாழ்த்தே.
> (தொல். பொருள். செய். 106)

எனத் தொல்காப்பியர் கூறுதலினால் தெய்வம் என்பது தன்னை வழிபடுவானைப் புறம்நின்று காக்கும் என்பது பெறப்படும். 'நிற்புறங்காப்ப' என்பதற்கு, 'நின்னைப் புறமேயிருந்து காக்க' எனவும், 'நின்னிடத்திருந்து காக்க' எனவும் பொருள் கொள்ளலாம். எனவே தெய்வம் வழிபடுபவனை அகத்தும் புறத்தும் இருந்து காக்கும் என்னலாம்.

2. அச்சுறுத்தல்: தன்னை வழிபடுவாரைக் காத்தல் போலப் பிறர்க்குத் தீங்கு செய்வாரை அச்சுறுத்தவும் செய்யும்.

> "மன்ற மராத்த பேஎமுதிர் கடவுள்
> கொடியோர்த் தெறூஉம் என்ப"
> (குறுந்தொகை. 87)

எனவருவது காணலாம். இல்லறத் தொழுகுவார் - அல்லது இல்லறத்துக்கு முன்னதாகிய களவொழுக்கத் தொழுகுவார் பொய்ச் சூளுரை செய்வரேல் அவரைத் தெய்வம் அச்சுறுத்தும். அதனால் பொய்ச்சூளுரை செய்தோர்க்காக அவரைச் சார்ந்தோர் (தோழி,

தலைவி) தெய்வத்துக்கு அஞ்சுதல் உண்டு. இதனைத் தொல்காப்பியர் "தெய்வம் அஞ்சல்" (தொல். பொருள். மெய்ப். 24) என்று குறிப்பிட்டார்.

3. துணை நிற்றல்

தெய்வம் தன்னை வேண்டுவார்க்குத் துணை நிற்கும். தலைவனும் தலைவியும் உடன் போயினராகத் தோழி மூலம் அதனையறிந்த செவிலித்தாய் நற்றாய்க்கு அறிவிக்காமல் உடன் போனவர்க்கு யாதொரு தீங்கும் நேரலாகாது என்பதற்காகத் தெய்வத்தை வாழ்த்துவாள். அதனால் தெய்வம் துணை நிற்கும். செவிலியின் தொழிலாகத் "தெய்வம் வாழ்த்தல்" (தொல். பொருள் கள. 25)

4. நோய் தீர்த்தல்:

நோயைத் தீர்ப்பதேயன்றி நோயின் காரணத்தை அறிவிப்பதும் தெய்வத்தின் தொழில். இத்தொழிலை முருகன் மேல் ஏற்றினர் பண்டையோர். முருகன் படையாகிய வேலை ஒருவன் ஏந்திக் கொண்டு ஓரிடத்தில் முருகனை நினைந்து நிற்க, முருகன் அவனுள் தோன்றி அவன் வாய் மொழியாக மக்கள் வேண்டுவனவற்றை நன்மை தீமைகளைத் தெரிவிப்பான். அப்போது வேலேந்தியவன் தன் உணர்வின்றி வேலைத் திரித்து ஆடிக்கொண்டேயிருப்பான். அதனால் அவனுக்கு 'வேலன்' எனப் பெயர். அவன் ஆட்டத்துக்கு 'வெறியாட்டு' என்று பெயர். சர்த வேலன் முருகன் கோயிலில் மலர்தூவி ஒழுங்கு படுத்தப்பட்ட ஓரிடத்தில் இருந்து, தன்னிடம் வந்து கேட்போர்க்கு வேண்டுவன சொல்வான். இதை இக்காலத்தில் 'குறி சொல்லுதல்' என்பர். அக்காலத்தில் 'வெறிக்கூத்து' என்பர். ஒரு பெண் – பருவப்பெண் வழக்கத்துக்கு மாறாகத் தாயிடம் – மற்றையத் தோழியரிடம் நடப்பாளானால் – அதாவது தாயின் பக்கத்தில் உறங்காமலும், உணவு சரிவர அருந்தாமலும் எப்போதும் தனிமையையே விரும்புதலும் போல்வன செய்வாளேயானால் அதை ஓர் நோய் எனக் கொண்டு வேலனிடம் அதன் காரணத்தை வினவுவர். அவன் அதற்கு அவள் கொண்ட காதல் என்றோ அல்லது பிற காரணங்களோ கூறுவான். அவனைத் தொல்காப்பியர்,

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன் (தொல். பொருள் புற. 5) என்றும், அவன் ஆட்டத்தை காந்தள் என்றும் கூறினர்.

5. விதி வகுத்தல்

தெய்வம் உயிர்கள்தாம் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்யும். அதனால் தொல்காப்பியர் அதைப் "பால் வரை தெய்வம்" (தொல். சொல். கிளவி. 58) என்றார்.

6. மக்களுள் கலந்திருத்தல்

தெய்வம் கடவுள் என்றும் தொல்காப்பியரால் சொல்லப்பட்டது. கடவுள் ஒன்றாயினும், மாயோன், சேயோன் எனப் பலவடிவில் வருதலின், மனிதர்போலக் காமம் கொள்ளுதலும் உண்டு. கடவுள் ஆணினைக் கடவுட்பெண் விரும்புதலும், அவனை மானிடப்பெண் விரும்புதலும், கடவுள் ஆண் மானிடப்பெண்ணை விரும்புதலும் உண்டு. அவ்வாறு செய்யுள்கள் வந்துள்ளன. கடவுள் ஆணைக் கடவுட்பெண் விரும்புதலும்-கடவுட் பெண்ணைக் கடவுள் ஆண் விரும்புதலும் புராணங்களில் காண்கின்றோம். முருகவேளாகிய கடவுள் வள்ளி என்ற மானிடப்பெண்ணை விரும்பியதும், ஆண்டாளாகிய மானிடப்

பெண் கண்ணனுடிய கடவுளை விரும்பி யதும் கதைகளிற் கேட்டுள்ளோம். தொல்காப்பியர்,

> காமப் பகுதி கடவுளும் வரையார்
> ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்
> (தொல். பொருள். புற. 23)

என்றார். எனவே தெய்வம் மனிதருள் மனிதனாகவும் வாழும் என்பது பெறப் படும்.

இக்காலத்தும் சில ஊர்களில்-முருகன் கோயில் உள்ள ஊர்களில் – அதிலும் முருகனைத் தம் வழிபடு தெய்வமாகக் கொண்டுள்ளோர் சேர்ந்து வாழும் ஊர் களில், முருகன்கோயில் தனித்திராமல், ஊர்த்தெருவின் ஒருபக்க வீடு வரிசை யின் இடையில் அக்கோயிலும் ஒரு வீடாகக் கருதும்படி இருத்தலைக் காண லாம். அதன் கருத்து "முருகன் தனிப் பட்டவன் அல்லன்; மக்களுள் கலந்திருக் கும் ஒருவன்'' என்பதாகும்.

7. தெய்வம் உவமப் பொருளாக அமைந்தும் அனுபவப் பொருளாகும்:

> கூற்றொத் தியே மாற்றரும் சீற்றம்
> வலியொத் தியே வாலி யோனைப்
> புகழ்ஒத் தியே யிகழுநர் அடுநனை
> முருகொத் தியே முன்னியது
> முடித்தலின்
> (புறநானூறு. 56)

இப்படி இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய பாண்டியன் நன்மாறனை நக்கீரர் சிறப் பித்துப் பாடியுள்ளார்.

இந்நிலையினைப் பூவைநிலை என்றார் தொல் காப்பியர்

> மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
> தாவா விழுப்புகழ்ப் பூவை நிலை
> (தொல். பொருள். புற. 5)

என்று மாயோனைக் குறித்தார் பிற கடவுளரை உவமித்துவரினும் பூவை நிலை எனக் கொள்ளவேண்டும்.

8. விருப்பத்தை நிறைவேற்றல்:

கடவுளுக்கு 'அமரன்' என்ற பெயரும் உண்டு. தொல்காப்பியர் பன்மையில் 'அமரர்' என்ற சொல்லைக் குறித்துள் ளார். (தொல். பொருள். புற. 21) 'அமர் தல்' என்பதற்கு 'மேவல்' எனப் பொ ருள் உரைத்தார். (தொல். சொல். 380) மேவல் என்பதற்குப் பொருந்துதல், விரும்புதல் என்ற பொருள்கள் உண்டு. "நம்பும் மேவும் நசையாகும்மே" (தொல் சொல். உரி. 31) என்று கூறிய அவர், தம் நூற்பாவிலேயே மேவுதல் என்பது விரும்புதல் என்ற பொருளில்

> எல்லா வுயிர்க்கும் இன்பம் என்பது
> தானமர்ந்து வருஉம் மேவற் றாகும்.
> (தொல். பொருள் 219)

ஆண்டுள்ளார், அமர் என்பதற்கு விருப் பம் என்பது பொருளாதலின் 'அமரர் என்பதற்கு, 'விருப்பத்தை நிறைவேற்று பவர் எனப் பொருள் கொள்ள வேண்டும் அமரர் தேவர். அவர் இருக்குமிடம் வானம். அதனால் வானோர் எனவும்படு வர் (தொல் பொருள் 144)

தலைமகன் ஒருவன், தன் மனைவி புதல்வனைப் பெற்றாளாக அது குறித்து அமரர்க்குச் சிறப்புச்செய்வான். என்ப தைத் தொல்காப்பியர்,

> "புதல்வரைப் பயந்த புனிறுதீர்
> பொழுதின்
> நெய்யணி மயக்கம் புரிந்தோள்
> நோக்கி
> ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
> செய்பெருஞ் சிறப்பு" (தொல். பொ
> ருள். 144)

என்று குறித்துள்ளார். அமரர் என்பதற்கு, 'விருப்பத்தை நிறைவேற்றும் கடவுளர்' என்பது இவ்விடத்துக்கு ஏற்ப அமைந்த பொருளாகும்.

'தெய்வம்' என்பது 'அமரர்' என்ற பெயர்க்கு ஏற்பத், தன்னை நோக்கி வேண்டுவார்க்கு வேண்டுவதை அளிக்கும் இயல்புடையது என்பதற்கு "கொற்றவை நிலை" (தொல். பொருள். 62) என்ற பகுதியும் சான்றாகும். கொற்றவை, வெற்றிதரும் பெண் தெய்வம். அதனை நினைந்து முயன்றால் எக்காரியமும் – பகைவரை வெல்லுதல் முதலியன எல்லாம் கைகூடும் வெற்றியாம்.

தெய்வ இலக்கணத் தொகுப்பு

இதுவரை கூறியவற்றிலிருந்து, "தெய்வம், (1) ஒரு பொருளாக இருந்து (2) பல வடிவு கொண்டு (3) வழிபடுவாரைக் காத்தும் (4) தீங்கு செய்வாரை அச்சுறுத்தியும் (5) வேண்டுவார்க்குத் துணை நின்றும், (6) நோய் தீர்த்தும் (7) உயிர்கட்கு விதிகளை வகுத்தும் (8) மக்களுள் கலந்திருந்தும் (9) மக்களுக்கு உவப்பொருளாகச் சிறந்தும் (10) விருப்பத்தை நிறைவேற்றியும் அருள்புரியும் இயல்புடையது," எனத் தெய்வத்தின் இலக்கணத்தைத் தொல்காப்பியர் நமக்கு அறிவித்துள்ளார் என்னலாம். இறுதியாக ஒன்று காண்போம்

மனிதன் – தெய்வம்

தெய்வத்தை மக்களின் அனுபவப் பொருளாக்கிக் காட்டிய தொல்காப்பியர், மக்களைத் தெய்வமாகக் காட்டியதும் உண்டு. போரில் வீரங்காட்டி விழுப்புண் பெற்று இறந்தவனுக்குக் கல்எடுத்து வழிபடுதலையும் கூறியுள்ளார். இறந்த வீரனுக்குக் கல்லை ஆராய்ந்து கொள்ளுதலும், அதை நீர்ப்படுத்தலும், ஓரிடத்து நடுதலும், அதற்குக் கோயில் எடுத்தலும், அதை வாழ்த்துதலும் பண்டையோர் செய்தனர் என்றார் தொல்காப்பியர்,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபிற்கல்" (தொல். பொருள். 63)

என்றார்.

எனவே, மனிதனைத் தெய்வமாக்கிய பெருமையும் தொல்காப்பியர்க்குண்டு. பண்டையோர் செய்த செயலே எனினும் தம் நூலில் அதற்கு இடம் கொடுத்துச் சிறப்பித்தமையால் அவர்க்கு மனிதனும் தெய்வமாகலாம் என்ற கருத்துண்டு என்னலாம். செங்குட்டுவன் கண்ணகிக்கு வடக்கே இமய மலையில் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படுத்தித் தன் நாட்டில் கோயில் எடுத்து வழிபாடு செய்த செயலை நாம் கேட்டிருக்கின்றோம். கல்வெட்டுகளில் கல்நாட்டிய செய்திகள் மிகவுண்டு. அக்கற்களே இக்காலத்தில் வரந்தரு தெய்வங்களாக வெவ்வேறு பெயர்களுடன் விளங்கக் காண்கின்றோம். எனவே மனிதன் தெய்வமாகலாம்.

திருமூலர் கண்ட திருநீறு

டாக்டர் B. மாசிலாமணி
பாண்டி

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான சேவடி. சேர்வரே
— திருமந்திரம்

அயன், அரி என்னும் இருவர் முழு எலும்புக் கூட்டினை சுமக்கும் சிவபெருமான் கங்காளன் எனப்படுவான். இதை மாணிக்க வாசகர் "கங்காளன் தோள் மேலே காத லித்தான் காணேடி" என்று குறிப்பிடுகின்ருர். இறைவன் ஆருயிர்கள் உய்வதற்குக் காவலாக உள்ளவன். மேலும் உடல் முழுமையும் திருவெண்ணீறை அணிந்த வன். இறைவனுடைய உடல் பவள நிறம் ஆகியதால் இத்திருநீற்றை அணிந்து கொள்கின்ருன் என்று அப்பர் சுவாமிகள் குறிப்பிடுகிருர். பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும். இத்திருவெண்ணீற்றை இறைவன் அணிந்து கொண்டிருப்பதால் ஆருயிர்களெல்லாம் நோயில்லாமல் வாழ வகை செய்கிறது. மேலும் (அணிகிலார் அவரைக் கண்டால் அம்மனும் அஞ்சு மாறே) என்றும் மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்ருர். இத்திருநீற்றை எப்பொழுதும் மங்காமல் பூசிக் கொள்பவர்களுக்கு எத்தகைய வினைத்துன்பங்களும் தங்காது. மேலும் சிவன் நிலையும் சாரும். அழகிய திருவடிப்பேறும் கைகூடும்.

திருமூலர் குறிப்பிடும் திருநீறு பசும் சாந்தியிலிருந்து செய்து எடுப்பது அல்ல.

அரசுடன் ஆல் அத்தி யாகும்அக் காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
நிரவயன் நின்மலன் தாள்பெற்ற நீதர்
உருவம் பிரமன் உயர்குல மாமே

இப்பாட்டின் கருத்தை நாம் சிந்திக்கில் திருவெண்ணீருனது அரசு, ஆல், அத்தி ஆகிய மூன்றின் மரக்கிளைகளைக் கொளுத்தி சாம்பலாக்கி அதை உடலில் பூசுவது என்பதாகும்.

சிவபெருமான் எட்டு திருவுருவங்களில் ஒன்ருகிய சிவவேள்வியின் கண் ஒளிவிட்டு எரிந்து உருமாறி காணப்படுவது உருவம், அருவம், உருவருவம் என்னும் மூன்று நிலையும் கடந்த சிவபெருமான் திருவுருவம் திருநீற்றின் திருவுருவமே ஆகும். அத் திருநீற்றை அணிந்த செல்வர்களே மெய்ப் பொருள் அடையவும் உயர்குலத்தினர் ஆவார்.

இக்கட்டுரை அறிஞர்களால் சிந்திக்கத்தக்கது மலர்க்குழு.

(விறவு கனலின் வியன் உருமாறி) அரசு, ஆல், அத்தி சிவயாகக் காரியத்தில் இச் சமுத்துகள் எரிக்கப்பட்டு நீருக்கப்படுவ தால் இது ஏற்படுகிறது அதன் குணதிசயங் களை நாம் பார்க்கும்பொழுது அரசு, ஆல், அத்தி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்த மருத்துவப் பெரியார்கள் மூன்று மரங்களின் குணங்களை தெள்ளத் தெளி வாக எழுதியுள்ளார்கள்.

அரசு:- அரசுமேல் இரணம் ஆற்றும். வித்து சுக்கில நோய் மீட்டும். குரல் கம்மல், தாகம் ஒழிக்கும் கொழுந்து தாது தரும். வெப்பம் அகற்றும், முத்தோஷம் போக்கும் மெய். (அகத்தியர் குணவாகடம்)

அத்தி:- வீறு காணும், பித்தம், வெண் சீதம், இரத்தமொடு நாறும் விரணங்கள் எல்லாம் நாடாவாம். கூறுங்கால் அத்தி மேகம்போம் ஆகியனயே இந்நான்கும் அத்தி மரக்கரி.

(அகத்தியர் குணவாகடம்)

ஆல்:- அட்சரம், புண்கிரந்தி யாவும் பறந்தோட அச்சமுற மேகம் போம் - இச் சகத்தில் நாதன் என மூவரும் நற்றுணை யாம் யாக்கைக்கு பூதம் அதிபதியைப் போல் தேரையர் இதைப்பற்றி அகத்தியர் குணவாகடத்திலும் சொல்லுகின்ற மேகத் தை ஒட்டி ஒழிக்கும். கொல்லுகின்ற நீரிழி வை கொல்லுங்காண் என்று கூறுகிறார்.

திருமூலர் இதைத் தன் அநுபவத்தில் கொண்டு வந்துள்ளார். அரசு, அத்தி, ஆல், இக்கட்டைகளைக் கொளுத்தி வெண் மையான சாம்பலைத் தினமும் ஆறுகாலம் அணிந்துள்ளதால்தான் மூவாயிரம் ஆண்டு கள் இருந்து திருமந்திரத்தை மக்களுக்கு ஈந்தார் என்றுதெரியவருகிறது. ஆகையால் நமது உடல் நோயில்லாமல் நீண்ட நாள் வாழ வேண்டுமென்று கருதுவோமானல் இம்மாதிரி நிருநீற்றை செய்து உபயோகிப் பது நலனே ஆகும்.

இஞ்சி, பாகற்காய், கஞ்சி, கட்டித்தயிர். கீரை, நெல்லிக்காய் இவற்றை இரவில் உண்ணலாகாது.

நாள் ஒரு கீரை நலத்திற்குத் தேவை.

பாலும் தேனும் உடலுக்கு உறுதி வேலும் மயிலும் உயிருக்கு உறுதி.

ஏழையின் உள்ளத்தில் இறைவனைப்பார்

கரவாது இடுவாய், வடிவேல் இருதாள் நினைவாய்.

முருகன் குமரன் குகன் என்று மொழிந்து உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்?

ஆதாரமிலேன் அருளைப்பெறவே. நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே!

அன்னம், நெய், உப்பு கையால் படைக்காதே.



வள்ளலார் வாழ்க்கைக் குறிப்பு

காலம்: 1823 – 1874

பிறப்பு: 5-10-1823, சுபானு, புரட்டாசி 21, ஞாயிறு, சித்திரை நாள்

சித்தி: 30 1–1874, ஸ்ரீமுக, தை 19, வெள்ளி, பூசநாள் இரவு 12 மணி

பிறந்த ஊர்: மருதூர் (சிதம்பரம் வட்டம், தென்ஞர்க்காடு மாவட்டம்)

மரபு; சைவ வேளாளர் குலம், கருணீகர் மரபு

பெற்ருேர்: இராமையா பிள்ளை, சின்னம்மையார் (ஆருவது மனைவி)

உடன் பிறந்தோர்: சபாபதி பிள்ளை, பரசுராம பிள்ளை, சுந்தரம் அம்மையார் உண்ணுமுலை அம்மையார் (அடிகள் ஐந்தாவது பிள்ளை)

இயற்பெயர்: இராமலிங்கம், சிறப்புப்பெயர்: திருவருட்பிரகாச வள்ளலார்

திரு அவதாரம் மீன லக்கினம் 5–10 1823

மாதம் 5-ல் சிதம்பர தரிசனம் 1824

வயது: 7–ல் கண்ணுடியில் தணிகேசன் தரிசனம் 1830

இடம்: 39, வீராசாமி பிள்ளை தெரு, சென்னை.

வயது: 12-ல் சென்னையில் உபந்நியாசம் செய்யத் தொடங்கியது 1835
,, 26 ல் தொ. வேலாயுத முதலியார் அடிகளாருக்கு சீடரானது 1849
,, 27-ல் அடிகளார் திருமணம் 1850
,, 32-ல் சென்னையை விட்டு சிதம்பரம் வந்தது 1855
,, 35 ல் கருங்குழியில் உறையத் தொடங்கியது 1858
,, 44–ல் வடலூர் வாசிகள் நிலம் விட்டது 1867
,, 44-ல் தருமச்சாலை அமைத்தது பிரபவ-வைகாசிமீ 11-வியாழன் 1867
,, 44 ல் வடலூரில் சத்தியஞான சங்கம் நிறுவியது 1867
,, 48 ல் மேட்டுக்குப்பத்தில் சித்தி விளக்கமுற்றது 1871
,, 49 ல் முதல் தைபூச வழிபாடு 1872
,, 50-ல் திருமாளிகையில் திருவிளக்கு வழிபாடு அமைத்தது 1873

மனிதநெறி புனிதநெறி

புலவர் எழிலன்

எழுந்து முதற்கடன் கடவுளை நேசி
இறையருள் பெற்றோர் பாடலை வாசி
விழுந்து தொழுபவர்க்(கு) அறம்உப தேசி
வீண்காலம் போக்கில் நீபர தேசி.

இனிமை வாய்மை நலம் ஈவதே பேசு
ஏழ்மை தரும்காம கோபத்தை வீசு
தனிமைப் பயிற்சியே மனதிற்குத் தேசு
தருக்கும் கோளும்உன் வாழ்விற்கே மாசு.

ஐம்பொறி அவாவினை அன்றன்றும் குறை
அன்னை தந்தையரைத் தொழல் என்றும் முறை
தெம்புள போதுபொன் தேடுவதே நிறை
தெய்வம் இகழ்வாரை நாடுவதோ கறை.

அறிவங் குசத்தால் மனத்தை யடக்கு
அவாவினால் துள்ளும் சினத்தை முடக்கு
தெரிந்தும் உறங்கத்தலை வைக்காதே வடக்கு
தெய்வ உயிர்கட்கென்றும் செய்யாதே இடக்கு.

மதுபுகை மாமிசம் படிப்படி நீக்கு
மாற்றரும் உனக்கு உறவென்றே நோக்கு
பொதுப்பொருள் களுக்கும்நீ நன்மையுண் டாக்கு
பொய்பேசில் உன்நாக்கு புழுத்தபிண் ணாக்கு.

தெய்வச் சைவப் பன்னிரு திருமுறை

அருட்கவி - தவத்திரு ஸாதுராம் ஸ்வாமிகள்,
சென்னை

தெய்வம்

"சிவனொ(டு)ஒக் கும்தெய்வம் தேடினும் இல்லை
அவனொ டு)ஒப் பார்இங்கு யாவரும் இல்லை
புவநம் கடந்(து)அன்று பொன்ஒளி மின்னும்
தவநச் ஜடைமுடித் தாமரை யானே"

என்னும் திருமூலர் திருமந்திர வாக்குக்கு இணங்கத் தெய்வத்துள் தெய்வம் – தலைசிறந்த தெய்வம் – சிவபெருமான் ஆவார். 'தெய்வம்' என்ற சொல் 'திவி', 'தேவ' என்ற வேர்ச்சொற்களின் அடியாகப் பிறந்து, ஒளிமயமானது, இயற்கைப் பேரொளி வடிவமானது – கடவுள் – என்னும் பொருளைக்கொடுக்கும்.

"ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும்
ஜோதியை" — திருவாசகம் (திருவெம்பாவை 1)
"அருட்பெருஞ் ஜோதி தனிப்பெரும் கருணை" — ஸ்ரீ இராமலிங்க
வள்ளலார்

தெய்வம், தேவன், ஆண்டவன், கடவுள், இயவுள், இறைவன், ஸ்வாமி, தேவு, பகவான் இப்படிச் சில சொற்கள் நிர்க்குணமான – நிஷ்கனமான – பரப்ரம் மத்தைக் குறிக்கும் வார்த்தைகளாக அமைந்துள்ளன. நாம ரூபங்கள் அற்றதும் குணாதீதமானதும் ஆன பரம்பொருளைப் பொதுப்படக் குறிக்க மேற் சொன்ன சொற்கள் உதவுமாயினும். ஒன்றே ஆன அந்தப் பரவஸ்து குணத் துக்கும், பேருக்கும் உருவத்துக்கும் கட்டுப்பட்டு வருகின்ற போது கணபதி, முருகன், சிவன், திருமால், (குருவாயூரப்பன்), தேவி, ஸூர்யன், ஐயனார் (ஐயப் பன்), ப்ரம்மா, இந்த்ரன் முதலிய ஸகுணப் ப்ரம்மங்களாகி அநேகமாகிப் – பிரிந்து செயல்படும் போது நாமரூப பேதங்கள் உண்டாகின்றன. "ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க" – மாணிக்கவாசகர் (சிவ புராணம்)

"ஏகம் ஏவ அத்விதீயம் ப்ரஹ்ம"; ஏகம் ஸத் விப்ரா: பஹுதா
வதந்தி" — வேதம்.
"ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து)இவ் வுல(கு) எங்குமாய்
நின்றாள்" — அபிராமி அந்தாதி. ('ஒன்றாய்').

சைவம்

பரசிவம் (மேலான, மங்களகரமான பரப்ரம்மம்) பரசிவன் ஆகி (ஸதாசிவன், மஹேஸ்வரன்) சிவன் ஆகி அநுக்ரஹம் (அருளல்), திரோதாநம் (மறைத்தல்), ஸம்ஹாரம் (அழித்தல்) ஆகிய முத்தொழில்களையும் செய்யக் கருணை செய்து இறங்கி – இரங்கி – வருகிறபோது அந்தச் சிவனோடு ஸம்பந்த முடையது எனும் ஸமயம் சைவ மதம் ஆகிறது. (சைவம் = சிவத்தோடு தொடர்பு உடையது; சைவ ஸமயம்.)

"சைவத்தின் மேற்சம யம்வே றிலைஅதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்" என்பது திருவருணைக்கலம்பகம்.

அத்தகைய வைதிக சைவ ஸமயத்துக்குப் ப்ரமாண நூல்கள் ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் ஆகிய நால் வேதங்கள், உபநிஷத்துகள், 'காமிகம்' முதல் 'வாதுளம்' ஈறான சிவாகமங்கள், (ஆகத் திருமறைகள்), மற்றும், திருஞாந ஸம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள், திருநாவுக்கரசு தேவநாயனர், ஸுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் ஆகிய மூவரின் தெய்வத் திருவாக்குகளான தேவாரமும், மணி வாசகஸ்வாமிகளின் மணிமொழித் திருவாசகமும், திருக் கோவையாரும், மேலும், ஒன்பதின்மர்கள் திருவாய்மலர்ந்த திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும், திருமூலர்திருமந்த்ரமும், திருவாலவாயுடையாருட்படப் பன்னிருவர் திரு வாக்குகளான பதினோராம் திருமுறையும், தெய்வச் சேக்கிழார் ஸ்வாமிகளின் 'திருத்தொண்டர் புராணம்' என்னும் பெரிய புராணமும் ஆகிய "சைவப் பன்னிரு திருமுறைகள்" என்னும் ஸ்தோத்ர நூல்கள் (ஆகத் திருமுறைகள்) பின்னும் மெய்கண்டார், அருள்நந்தி சிவாசாரியார், மறைஞாநஸம்பந்தர், உமாபதி சிவாசாரியார் ஆகிய ஸந்தாநகுரவர்கள் நால்வர் மற்றும் சிலர் இயற்றிய சிவக்ஞாநபோதம் – ஸூத்ரம் முதலிய பதினான்கு சாஸ்த்ர நூல்கள் இவையுமாம்.

பன்னிரு திருமுறை

சிவபரம் பொருளைப்பற்றியும், சிவத்திலிருந்து எப்போதும் பிரிவு அடையாத சக்தியைப்பற்றியும், சிவ குடும்பத்தைச் சேர்ந்தவர்களான சிவ ஸுதர்கள் ஸ்ரீ மஹாகணபதி, ஸ்ரீ ஸுப்ரம்மண்ய ஸ்வாமி இவர்களைப் பற்றியும் பர சிவனது மெய்யடியார்களைப் பற்றியும் ஸ்தோத்திரமாகவும் சரித்ரமாகவும் பேசும் இனிய தமிழ்ப்பாடல்கள் அனைத்தும் பன்னிரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்று, அழகாக முறைப்படுத்துற்ற தொகுப்பே 'பன்னிரு திருமுறை' எனப்பெறும். திருமறைகளான ஸம்ஸ்க்ருத வேதங்களை ஸ்ரீ வ்யாஸபகவான் ரிக், யஜுர், ஸாம, அதர்வணம் என நான்கு வகைகளாகப் பிரித்துப் பாகுபாடு செய்து, 'த்ரயீ' என்ற பேர்மட்டுமல்லாமல், சதுர்வேதம் என்றும் பெயர் பெறச் செய்தது போலத் திருமுறைத் தமிழ் வேதத்தையும் 'நால்வர் பாடல்கள்' என்று சொல்வதுண்டு. திருஞாநஸம்பந்தமூர்த்தி நாயனர் பாடியருளிய 'திருநெறிய தமிழ்' என்னும் திருக்கடைக்காப்புத் தேவாரப்பாக்கள் யாவும் ரிக்வேத ஸாரமாம்.

'சிவபக்தி ருக்கு ஐயம் போக உரைத் தோன்' — கந்தர்
அந்தாதி ('திருக்கையம்')

திருநாவுக்கரசு ஸ்வாமிகள் என்னும் அப்பர் பெருமான் ஓதி உதவிய தேவாரம் யாவும் யஜுர்வேத ஸாரம் எனப்பெறும். யஜுர்வேதத்தின் நடுமையத்தில் 'ஸ்ரீருத்ரப் ப்ரச்நமும்', அதன் நட்ட நடுவில் ''நம: சிவாய'' என்னும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமும் வருவதுபோல, அப்பர் அடிகளின் தேவாரப் பாக்களுள் கிடைத்துள்ள பதிகங்களுள், நடுப்பதிகத்தின் நடுபாட்டில் 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுந்து அமைந்திருப்பதும் இதுவே யஜுர்வேதப்பிழிவு என்பதற்கு உற்றதொரு அத்தாட்சியாகும். ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளின் தேவாரப் பாக்களுக்குத் 'திருப்பாட்டு' என்றும் ஒரு பேர் உண்டு. இதுவே ஸாம வேதஸாரம். ஸாமவேதம் இசைமயமானது. ஸங்கீத முழக்கம் வழக்கமாயிருக் கிறது. ரிக்வேதக் கருத்துகள் ஸம்பந்தர் தேவாரத்திலும், யஜுர்வேதக் கருத்துக்கள் அப்பர் தேவாரத்திலும், நிரம்ப விரவி வருதல்போல், ஸாமவேதக் கருத்துக்கள் ஸுந்தரர் தேவாரத்தில் பலபடக் கலந்து வருதல் கண்கூடு. ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் அதர்வண வேதக் கருத்துக்கள் பல உள்ளூடுருவி விரவி வரலால் மணிவாசகம் முழுதும் அதர்வணவேத ஸாரம் என்பர் பெரியோர். இப்படி நால்வர் பெருமக்கள் தோன்றி வடமொழி நான்மறை களையும் தமிழ்மொழி நான்மறைகளாக மொழி பெயர்த்துதவியுள்ளார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

வடமொழி வேதங்களை ஓதத் தொடங்கும்பொழுதும் முடிக்கும்பொழுதும் ''ஹரி: ஓம் என்று கூறுதல் வழக்கம். அதுபோல திருமுறைப்பாடல்களை ஓதத் தொடங்கும் முன்பும் ஓதி முடித்த பின்பும் 'திருச்சிற்றம்பலம்' என்று கூறுதல் மரபு. வேதபாராயணம் வேதம் ஓதுதல், என்பதுபோல் திருமுறைப் பாராயணம் திருமுறை ஓதுதல், ஓதுவார் என்ற தொடர்களும் கருதற்பாலனவாம்.

1, 2, 3 திருமுறைகள்

தாக்கில் திருஞானஸம்பந்தர்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டில், முதல் மூன்று திருமுறைகட்கும் ஆசிரியர் 'பண்மொழி வேந்த'ராம் ஆளுடைய பிள்ளையார், ஸம்பந்தர் பாடிய தேவாரம் மொத்தம் 16,000 என்பர். அவற்றுள் நாலில் ஒரு பங்குகூட நமக்கு பூரணமாக கிடைத்திலது. பாரத தேசத்தில் இருக்கும் அநேக சிவன் தலங் களுள் 274 தலங்கள் மொத்தத்தில் மூவராலும் தேவாரம் பாடப்பெற்றவை. அவற்றுள் 'திருநெறித் தமிழ்' பெற்றவையே அதிகம் எனலாம். 'திருவிடை வாய்' என்னும் தலத்துடன் சேர்ந்து 220 தலங்கள் ஸம்பந்தர் தேவாரம் பெற் றவை. திருவிடைவாய்ப் பதிகம் சேரத் திருஞானஸம்பந்த ஸ்வாமிகளின் தேவாரப் பதிகங்கள் மொத்தம் 385ம் முதல் மூன்று திருமுறைகளுக்குள் அடங் கும். இவரது பாடல்கள் 16,000க்குள் இவ்வளவு பதிகங்கள்தாம் இதுவரை கிடைத்துள. பிற செல்லின் வாயுட் செல்லலுற்றன போலும் !

திருஞானஸம்பந்தர் காட்டிய மார்க்கம்:

க்ரியா மார்க்கம்; பக்தியோகம்; ஸத்புத்ரமார்க்கம் என்றெல்லாம் பேசப் பெறும் ஞானபாதங்கள் நான்கில் க்ரியாபாதத்தை வளர்த்தவர் இவர்; யோக மார்க்கங்கள் நான்கில் பக்தியோகத்தைப்பரப்பியவர் இவர்; சிவநெறியாகிய

தவநெறியில் சிவபிரானைத் தந்தையாகத் தாம் மைந்தனாக இருந்து வழி பாடு செய்த நன்னெறி இவரது செந்நெறி. பரமனால் (ஞாநப்) பாலைக் காட்டி ஆட்கொள்ளப் பெற்றவர் இவர். இவர் ஆசு, மதுர. சித்ர, விஸ்த்தார நாற்கவிராஜர். இவரது செந்தமிழ்ப்பனுவல்களில் தெய்வமணமும் சைவமணமும் இயற்கையன்னையின் எழிலும் சிவபுராணப் பொழிலும் பூத்துக் குலுங்கும்; ஞாநப் பால்மணம் துலங்கும்.

முதல் மூன்று திருமுறைகளுள் முதல் திருமுறை 'தோடுடைய' என்ற பதிகத்தில் தொடங்குகிறது. மூன்றும் திருமுறையில் முடிவான பதிகம் 'கல்லூர்ப் பெருமணம்' எனத் துவக்குகிறது. இவை ''கொஞ்சும் தமிழ்கள்'' இயல், இசை, நாடக முத்தமிழ்கள்.

கடைசி பாடலில் அவரைப்பற்றிய புகழ்ச்சியும் அவர் பெயர் முத்திரையும் அப்பதிகத்தை ஓதுவர் பெறக்கூடிய பயனும் கூறப்பட்டிருக்கும். இது ஸத்புத்ர பாவத்தால் வந்த பெருமிதம் போலும். ஸம்பந்தர் தேவாரத்தில் ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாம் பாட்டில் ராவணன் கைலாய மலையைத் தூக்கியதும் சிவபிரான் தம் கால்விரலால் அழுத்தியமையும் அதனால் ராவணனுடைய கைகளும் தோள்களும் தலைகளும் நெறிபட்டமையும் காணப்பெறும்.

பத்தாம் பாட்டில் சமணர்களைப் பற்றிய குறிப்பு இருக்கும்.

4, 5, 6 திருமுறைகள்

''சொற்கு உறுதிக்கு அப்பர்''

சைவத் திருமுறைகளுள் 4 முதல் 6 வரை உள்ள திருமுறைகளின் ஆசிரியர் தாண்டக வேந்தராம் ஆளுடைய அரசு; இவரது இயற்பெயர் மருள் நீக்கி; இவரை ஆண்டவன் (சிவன்) திருநாவுக்கரசர் என அழைத்தார்; இவரைத் திருஞாநஸம்பந்த ஸ்வாமிகள் 'அப்பர்' எனப் பேரிட்டுக் கட்டி அணைந்து கொண்டார். அப்பர் தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள் 126 இவர் பாடிய மொத்தத் தேவாரப்பாக்கள் 49,000 என்பர். இவற்றுள் கிடைத்துள்ள 313 பதிகங்களும் 4, 5, 6 திருமுறைகளுக்குள் அடங்கும். மற்றவை செல்லரித்துப் போயினவோ ?

வாகீசராம் நாவரசர் காட்டிய மார்க்கம்:-

சர்யா மார்க்கம்; கர்ம யோகம்; தாஸ மார்க்கம் என்றெல்லாம் சொல்லப் பெறும் ஞாந பாதங்கள் நான்கனுள் சர்யாபாதத்தையும், நால்வகை யோகங்களுள் உழவாரத் திருப்பணி செய்து கர்ம யோகத்தையும், நால்வகை வழிபாட்டு முறைகளுள் 'ஆண்டான் — அடிமை' என்னும் தாஸ மார்க்கத்தையும் வாழ்ந்து காட்டி வளர்த்தவர் அப்பர்; இவரைச் சூலைகாட்டி ஆட்கொண்டார் அரனார்; இவரது பாடல்கள் திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என இப்படிச் சில பிரிவுகளுள் அடங்கும். தாம் அடிமையாகி ஆண்டவனை யஜமாநனாக்கி இவர் வழிபட்டமையால், தம்குறை கூறல்; தம்மை மிகமிக இழிவுபடுத்திக் கொள்ளல் — அதற்கேற்ப ஆண்டவனின் கருணையையும்

ம – 14

பெருமைகளையும் அளவு கடந்து புகழ்தல் முதலியன இவரது பாக்களிற் பொது வாகக் காணப்பெறும் கருத்துகள். உழைத்துக் கூலி கொண்ட தாஸர் ஆதலினுல் தான் திருவீழிமிழலையில் வாக்கின் வேந்தர் பெற்ற பொற்காசு வட்டமின்றிச் செல்லுபடியாயிற்று என்பர்.

அப்பர் தேவாரத்தில் ஒவ்வொரு பதிகத்திலும் ராவணனுக்கு பரமேஸ்வரன் அருள்செய்த செய்தி காணப்படும். இவரது பாக்களில் அவருடைய பெயர் முத்திரை இல்லே. தன்னைப்பற்றி புகழ்ந்து கூறிக்கொள்ளுதலும் இல்லே. தாஸ பாவத்தினுல் வந்த அடக்கம் போலும் இது!

''ஸம்பந்தன் தன்னைப்பாடுவான்; சுந்தரன் பொன்னைப் பாடுவான்; என்னப் பன் என்னைப் பாடுவான்'' என்னும் தொடர்கள் அப்பர் ஸ்வாமிகள் பாடல் களின் ஏற்றத்தை விளக்குவனவாய் அமைந்துள்ளன.

ஏழாம் திருமுறை

சைவத்திருமுறைகளுள் 7ஆம் திருமுறையின் ஆசிரியர் நம்பி ஆரூராம் ஆளுடைய நமபிகள். இவரது இயற்பெயர் ஆரூரான்; திருக்கயிலேயில் இவர் ஸிவபிரானுக்கு அணுக்கத் தொண்டாற்றிக் கொண்டிருந்தவர்; ஹாலாஹல விஷத்தைக் கையேந்திவந்து ஸிவன் ஆணைப்படி அவர் கையில் தந்து 'ஆலாலஸுந்தரர்' ஆனுர்; இவருக்கு, நம்பி ஆரூரர், வன்றெண்டர், தம்பிரான் தோழர், ஸுந்தர மூர்த்திஸ்வாமிகள், நாவலூராளி இப்படிப் பலபெயர்கள் உண்டு. ஸுந்தரர் தேவாரம் மொத்தப் பாடல்கள் 38,000 என்பர். இவற்றுள் 100 பதிகங்களே இதுகாறும் கிடைத்தவை; எஞ்சியவை செல்லால் அரிபட்டன வோ ? ஸுந்தரர் தேவாரம் பெற்ற சிவஸ்தலங்கள் மொத்தம் 84. கிடைத்த இவரது 100 பதிகங்களும் 7 ஆம் திருமுறையாகவே தொகுக்கப் பெற்று விட்டன.

ஸுந்தரமூர்த்தி நாயனுர் காட்டிய மார்ச்கம்:

யோகமார்க்கம்: ஸி(சிவ) ராஜயோகம்; ஸஹ (ஸகா) மார்க்கம். தவயோக நெறியைக்காட்டிய சிவராஜயோகி ஸுந்தரர். தம்மை நண்பனுக்கித்தாமும் பரம சிவனே நண்பனுகப்பாராட்டித் தோழமைப் பக்திசெய்தவர் 'தம்பிரான் (ஸிவன்) தோழர்' என்றே பேர்பெற்ற நாவலூரார். (கண்ணனும், அர்ஜுநனும்போல முக்கண்ணரும் ஸுந்தரமூர்த்தியும் நட்புரிமை நெறிகாட்டியவர்கள்) இவரை ஓலே காட்டி ஆட்கொண்டனர் திருவெண்ணெய்நல்லூர்ப் பித்தராம் பிரான். இவரது தேவராப்பாசுரங்கள் இயல், இசை, நாடக முத்தமிழ் நயம் கொஞ்சும்; தோழமை வாஸனே ஈஸன்பால் வீசும் ஆசைப்பாடல்கள்; பண்கள் பல விரவிப் பரவும் இனிய பைந்தமிழ்க் கவிகள்.

'பித்தாபிறை' எனத்துவக்கமாகும் முதல் பதிகத்திலிருந்து, 'தானெனேமுன். என ஆரம்பமாகும் 100 ஆம் பதிகம் ஆகும் இறுதிப் பதிகம் வரையுள்ளன யாவும் 7ஆம் திருமுறைக்கண் அடங்கும். இவை முழுதும் ''மிஞ்சும் தமிழ்''கள்'

இவரது பதிகங்களிலும் தன்னைப்பற்றிப் புகழ்ந்து கூறுதலும் பெயர் முத்திரையும் இருக்கும் தோழமையினுல் வந்த உரிமையை வெளிப்படுத்துவன இவை எனக்கொள்ளல் வேண்டும்.

எட்டாம் திருமுறை

'வாதவூரார்கனவில்'

திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறைக்கண் இடம் பெறுகின்றன. திருவாசகம் மொத்தப்பாக்கள் 656. திருக்கோவையார் 400. பாடல்கள் இவற்றைப்பாடியருளியவர் ஆளுடைய அடிகள், திருவாதவூரடிகள், மணிவாசகர் என்றெல்லாம் அழைக்கப்பெறும், 'அறிவாற் ஸிவனே' ஆன மாணிக்க வாசக ஸ்வாமிகள். இந்த 1056 பாக்களேயும் ஏடெழுதியவர் தில்லே நடராஜ மூர்த்தியே. திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்பது பழமொழி. 'பாவை பாடிய வாயாற் கோவைபாடுக!' எனச் சிவபிரானே கேட்டுப் பாடப்பெற்ற நூல் திருக்கோவையார் என்ப. இது அகப்பொருள் துறையது.

திருவாசகம் பெற்ற தலங்கள் பல. தேவார மூவராலும் பாடப்பெருத பல தலங்கள்கூடத் திருவாசகம் & திருக்கோவையாரில் இடம் பெறுகின்றன. திருவாசகம் உருகாத உள்ளத்தையும் உருக்கி வரும் ஆற்றலுடையது; திருவருட்ப்ரகாச - வள்ளலார் ஸ்ரீராமலிங்க ஸ்வாமிகள் முப்போதும் எப்போதும் திருவாசகமும் கையுமாக இருப்பாராம். அவரது 'திருவருட்பா' நூலே திருவாசகத்துக்கு ஒரு விளக்கம் என்பர் சான்ருேர்.

மணிமொழியார் காட்டிய மார்க்கம்:-

க்ஞாந (பாத) மார்க்கம்; க்ஞாந யோகம்; ஸந்மார்க்கம். மெய் அறிவு நெறியைக் காட்டியவர் மணிவாசகஸ்வாமிகள். 'அறிவால் அறியும்' யோகமே அவர் காட்டிய அருள்நெறி; 'நாயகி – நாயக' பாவம் அல்லது 'நாயக – நாயகி பாவம்' (மாதுர்ய பாவம்) – ஸத்மார்க்கம் – ஸந்மார்க்கம் பயின்று வளர்த்தவர் இவர். கடவுளைக் கணவனுக, உயிரை மனைவியாக வைத்து அல்லது பரமாத்மாவைப் பத்நியாக ஜீவனைப் பதியாக வைத்துப் பாடுவதோ - பக்தி பண்ணுவதோ ஆன மார்க்கத்துக்கு 'ஸந்மார்க்கம்' என்று பேர்.

'நமஸிவாய வாழ்க' எனச் சிவபுராணத்தில் தொடங்கி, 'அச்சோப்'பதிகத்தின் 9ஆம் பாட்டுடன் ('செம்மை நலம்') திருவாசகநூல் முடிவுறுகிறது. 'திருவளர்தாமரை' எனத் தொடங்கும் முதற்பாட்டுடன் 'காரணி' எனத்தொடங்கும் 400ஆம் பாடல் வரை கொண்டது திருக்கோவையார் நூல். 'அச்சப்பத்து' முதலியன அடங்கிய திருவாசகம். பதிபக்தி மிக்க பதிவ்ரதைக்குப் பதியினிடத்தில் பயமும் (பக்தியால்) இருக்குமாதலின் பெரிதும் இயற்பாவினுல் ஆன 'அஞ்சும் தமிழ்'கள்.

எட்டாம் திருமுறை வரை பாடிய நால்வரை 'ஸமய குரவர் நால்வர்' என்றே உலகு வழங்கும். இவர்களைப் பற்றிய பாடல்கள் இன்பமூட்டுவன.

நால்வர் திருநக்ஷத்ரம் (குருபூஜை நன்னுள்)

விருத்தம்

''சித்திரைச் சதயம் அப்பர் சிறந்தவை காசிமூலம்
அத்தரைப் பணிஸம் பந்தர் ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர் முதியநல் ஆடி தன்னில்
சுத்தமாம் ஜோதி நாளில் ஸுந்தரர் கைலை சேர்ந்தார்''

நால்வர் வயது (வெண்பா)

அப்பருக்(கு) எண் பத்தொன்(று) அருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினில் தெய்விகம் — இப்புவியில்
ஸுந்தரர்க்கு மூவாறு தொல்ஞாந ஸம்பந்தர்க்(கு)
அந்தம் பதினு(று) அறி.

நால்வர் பெருமை (வெண்பா)

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் எம் ஸுந்தரரும்
சிற்கோல வாதவூர்த் தேஸிகனும் — முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல் தான்எங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்(து) எங்கே?

நால்வர் பாட்டின் சிறப்பு (வெண்பா)

தேவர் குறளும் திருநாண் மறை முடிவும்
மூவர் தமிழும் முநிமொழியும் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம் ஒன்(று) உணர். (ஔவையார்)

ஒன்பதாம் திருமுறை

திருஇசைப்பாவும், திருப்பல்லாண்டும் ஆகிய இருவகை நூல்களும் சேர்ந்து மொத்தம்

திருஇசைப்பா ஆசிரியர்கள் ஒன்பதின்மர்		ஒவ்வொருவரும் பாடிய திருஇசைப்பாடல் தொகை
1	திருமாளிகைத் தேவர்	45 (4 பதிகங்கள்)
2	சேந்தனுர்	34 (3 பதிகங்கள்)
3	கருவூர்த் தேவர்	103 (10 பதிகங்கள்)
4	பூந்துருத்தி நம்பி காடநம்பி	12 (2 பதிகங்கள்)
5	கண்டராதித்தர்	10 (1 பதிகம்)
6	வேணுட்டடிகள்	10 (1 பதிகம்)
7	திருவாலி அமுதனுர்	42 (4 பதிகங்கள்)
8	புருஷோத்தம நம்பி	22 (2 பதிகங்கள்)
9	சேதிராயர்	10 (1 பதிகம்)
	திருஇசைப்பா மொத்தப்பாக்கள்	288
	சேந்தனுர் திருப்பல்லாண்டு	13 (1 பதிகம்)
	ஆகமொத்தம் 9-ஆம் திருமுறைக்கு	301 பாக்கள்

திருஇசைப்பா முழுதும் தேவார திருவாசகங்களைப்போல பண்ணோடும் தாளத்தோடும் இசையுடன் பாடத்தக்கன. 'திருப்பல்லாண்டு' இறைவனை வாழ்த்துக்கூறும் (வைஷ்ணவ பரிபாஷையில் "மங்களாஸாஸநம்' செய்யும்) பாக்களாய் அமைந்துள. 9-ஆம் திருமுறைக்கு 9 ஆசிரியர்களே அமைந்துள்ளமை ஒரு சிறப்பு. உள்ளத்தைத் தொடும் — அருள் வெள்ளத்தைப் பாய்ச்சும் – தெள்ளுதமிழ்ப் பனுவல்கள் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும், தேவார, திருவாசகம் பெற்ற தலங்கள் தவிர, அவை பெறாத சில தலங்களும் கூடத் திருவிசைப்பாப் பெற்றனவாகத் திகழ்கின்றன; பெரும் பகுதி தில்லையைப்பற்றிய பாக்களே.

பத்தாம் திருமுறை

'திருமூலர் திருமந்த்ரம்' — முழுதும் (3000க்கும் மேற்பட்ட பாக்களும் அதாவது 3108ம்) 10ஆம் திருமுறைக்குள் அடங்கும். இதைப் பாடியருளியவர் திருமூல தேவநாயனார். இவரது வரலாறு 12 ஆம் திருமுறையாகிய பெரிய புராணத்தில் (திருத்தொண்டர் புராணத்தில்) 30 ஆவது புராணமாக 29 பாடல்களைக்கொண்டு அமைந்து அணி செய்கிறது. 'காமிகம்' முதல் 'வாதுளம்' ஈறாகச் சொல்லப்பெறும் (28) 108 ஸிவாகமங்களின் ஸாரத்தை வடித்துச் சொல்வது திருமந்த்ர நூல் என்பர். சதுர்வேத ஸாரம் நால்வர் தமிழ் ஆனால், ஸகலாகம ஸாரம் 10 ஆம் திருமுறை என்பது ஆன்றோர் துணிபு. 'மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்' என்பர் அவரே. பத்தாம் திருமுறை 'மூலன் தமிழ்' 'திருமந்த்ர மாலை', 'திருமந்த்ரம்'' "தமிழ் மூவாயிரம்','தமிழ் ஆகமம்' இப்படிப் பலபேர்கள் பெறும்; இது கடவுள் வாழ்த்து, பாயிரம் தவிர, 9 தந்த்ரங்களாக வகுக்கப்பெற்றுள்ளது.

ஸுந்தரநாதரே திருமூல நாதனாரானார். இவர் 3000 ஆண்டுகட்கு மேல் பூமிமேல் வாழ்ந்து திருவாவடுதுறைச் சிவபோதி வ்ருக்ஷ நிழலில் தவமிருந்து தவம் கலைந்து கண்விழித்து ஆண்டுக்கொரு முறை 1 பாடல் வீதம் 3000 ஆண்டுகட்கு மேல் வாழ்ந்து 3000க்கும் மேலான 'திருமந்த்ர'ப்பா நூலை யாத்தனர் என்பர் சேக்கிழாரே.

"தமிழ் மூவாயிரம் சாத்தி மன்னிய மூவாயிரத்தாண்(டு) இப்புவிமேல் மகிழ்ந்திருந்து'' — திருத்தொண்டர் புராணம்.

'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்'
— திருத்தொண்டத்தொகை (ஸுந்தரர் தேவாரம்)

'பிரான் மூலனாகின்ற அங்கணனே' திருத்தொண்டர் திருவந்தாதி திருமூலர் நந்திதேவரின் திருவருள் பெற்றவர்.

பதினொன்றும் திருமுறை (40 வகை நூல்கள்)

11ஆம் திருமுறையைப் பாடியருளிய ஆசிரியர்கள். பன்னிருவர். அவருள் ஒருவர் கடவுளாகிய புநிதர். மற்றையோர் பதினொருவர் மனிதர்.

பன்னிருவரால் பாடப்பெற்ற 40 வகை நூல்களுக்கும் 11 ஆம் திருமுறையில் ஆகமொத்தம் அடங்கும் பாடல் எண்தொகை 1393 ஆகும். பதினோராம் திருமுறை முழுதும், கணபதி, கந்தவேள், ஸிவபிரான் ஸிவன், அடியார்கள் இவர்களைப் பற்றிய ஸ்தோத்ர க்ரந்தங்கள், இன் தமிழ்ச் செய்யுள்கள்.

பன்னிரண்டாம் திருமுறை

சைவப்பன்னிரு திருமுறைகளுள் கடைசித் திருமுறையாகிய இது 'திருத்தொண்டர்' புராணம் எனப் பேர்பெறும்; இதையே 'பெரியபுராணம், என்றும் வழங்குப. இது மொத்தம் 4286 பாக்களில் 33 இடைச்செருகல் பாடல்கள் நீங்களாக 4253 பாக்களைக் கொண்டு 2 காண்டங்களாக அமைந்துள்ளது. இதனைப் பாடியவர் குன்றத்தூர்ச் சேக்கிழார் ஸ்வாமிகள் ஸௌந்தரமூர்த்தி ஸ்வாமிகள் பாடியருளிய திருத்தொண்டத் தொகை. அதை அடியொற்றி நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருஅந்தாதி இவற்றைப் பின்பற்றி எழுந்தது பெரியபுராணம்.

திருத்தொண்டத் தொகை	திருத்தொண்டர் திருஅந்தாதி	திருத்தொண்டர் புராணம்
ஸௌந்தரர்	நம்பியாண்டார் நம்பிகள்	சேக்கிழார் அடிகள்
முதல் நூல்	வழிநூல்	சார்புநூல்
தொகை நூல்	வகை நூல்	விரிநூல்

9 தொகை அடியார்கள், 63 தனி அடியார்கள் ஆக ஸௌந்தரர் உட்பட 72 ஸிவன் அடியார்களின் வரலாற்றைச் செய்யுள் நடையில் சொல்வது சேக்கிழார் வாக்காகிற இப்பெரியபுராணம். பெரியரைப்பற்றியது பெரிய புராணம் என்றாயிற்று (பெரியர்-தொண்டர்கள்) "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" -ஔவையார்.

தில்லை நடராஜப் பெருமானே, 'உலகெலாம்' என்ற முதல் அடிஎடுத்துக் கொடுக்க (ராமதேவர்) அருண்மொழித்தேவர் என்ற இயற்பேர் உடைய குன்றைமுநி (தெய்வச் சேக்கிழார் பெருமான்) பாடியருளித் தில்லையில் அநபாய சோழன் வீற்றிருந்த அவையில் (சிதம்பரம் கோயிலில்) அரங்கேற்றிய நூல் இது. அநபாய சோழனின் அமைச்சரவையில் முதலமைச்சராக இருந்தார் 'மாதேவடிகள்', 'உத்தம சோழப் பல்லவன்' என்றெல்லாம் சிறப்புப் பட்டங்கள் பெற்றிருந்த 'செல்வ(ம்)மலி குன்றத்தூர்ச் சேக்கிழார்'. அப்போது அரசன் 'ஜீவக சிந்தாமணி' முதலிய சமணக் காப்பியங்களிலே மனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தமை கண்டு வருந்தி, அரசனைச் சைவ நூல்களிலே பற்றுக் கொள்ளவைக்க வழிதிருப்பிவிட வேண்டிய கடப்பாடுடையவராய்-மதிநுகியாய்ச் சிவபக்த ஸிகாமணிகளின் சரித்ரங்களை யெல்லாம் அரசற்கு எடுத்துரைத்து வரலானார் முதலமைச்சனார். அவை கேட்ட மன்னன் மனம் மிக மகிழ்ந்து அவர்கள் வரலாற்றையெல்லாம்

தொகுத்து ஒரு பெருந்தமிழ்க்காப்பியம் ஆக்கித்தர வேண்டினன். அது கேட்ட அடிகளாரும் உடன் இசைந்து, செய்யுள் நடையிற் தொண்டர் புராணம் யாக்கப் பரமபதியாகிய கநகசபேஸ்வரன் உத்தரவு வேண்டிப் பிரார்த்தித்தபோது, ஆகாயஸ்தலமாகிய – ஒலிக்கு மூலமான–சிதம்பரத்தில் – ஆடலரசின் அருளால் 'உலகெலாம்' என்ற அசரீரி கேட்க அதையே முதல்வன் தந்த முதற் சொல்லாக் கொண்டு,

"உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் ஜோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என்ற முதற் செய்யுளைப்பாடி மேற்கொண்டு புராணத்தை முழுமையையும் மார்கழித் திருவாதிரையிற் றொடங்கி, மறு மார்கழித் திருவாதிரை வருவதற்குள் யாத்து முடித்து அன்றே அரங்கேற்றமும் செய்தனர் என்பர். அநபாய சோழன் அதுகேட்டுச் சைவ நெறியிலேயே நிலைநிற்கின்றனர். சேக்கிழாரைக் கௌரவப்படுத்தி யானைமேல் ஏற்றித் தான் பின்னிருந்து வெண்தாமரைக் கவரி வீசிக் கவிராஜரைப் புவிராஜன் போற்றி வணங்கிப் பவனி கொணர்வித்தனன்.

—o—

அல்லல் அகற்றும் ஆறுமுகம்

ஆறு முகமும் திண்தோள்க ளாறும் கருணை அடித்துணையும்
வீறு மயிலும் தனிக்கடவுள் வேலும் துணை உண்(டு) எமக்கிங்கே
சீறும் பிணியும் கொடுங்கோளும் தீயவினையும் செறியாவே
நாறும் பகட்டான் அதிகாரம் நடவா துலகம் பரவுறுமே

— அருட்பா

தான் மட்டும் வாழ நினைத்தல் பற்று.

தான், தன் இனம், தன் நாடு வாழ நினைத்தல் அன்பு.

பிறரைக் கெடுத்து தான் மட்டும் வாழ நினைத்தல் ஆசை.

அகில உலக சராசரம் அனைத்தும் வாழ நினைத்தல் அருள்.

மயிலம் மலையில் ஓர் படிவிழா

ஓம் முருகாஸ்ரம தாஸன்

எம்பெருமான் முருகன் இப்புவியின்கண் பல குன்றுகளிலும் அமர்ந்து அருள் புரிகின்றுன். முருகப்பெருமானின் பெருமையை தேனனைய சொல்லான பைந்தமிழில் பாமாலை சூட்டி மகிழ்ந்து இவ்வையகமெல்லாம் உய்ய வழிகோலிய அருணகிரி பெருந்தகையார், இவற்றை,

''அதிரும்கழல் பணிந்து'' என்ற திருப்புகழ் மூலம் ''பல குன்றினுமர்ந்த பெருமாளே'' என்றும், ''எழு திகழ்புவன'' என்ற பாட்டின் மூலம் ''பலமலையுடைய பெருமாளே'' என்றும் கூறி முருகப்பெருமான் உறையும் ஆறுபடை வீடுகளில் ஒன்றுன ''குன்று தோருடல்'' என்ற 5ம் படை வீடாக உருவகப் படுத்தியுள்ளார்.

''விநாயகமலை, விராலிமலை, வள்ளிமலை, பழனிமலை, கயிலைமலை, கழுகுமலை, குமரமலை, தீர்த்தமலை, தணிகைமலை, திருக்கோணமலை, சென்னிமலை, செங்கோட்டு மலை, சிவன்மலை, வட்டமலை, ரத்னமலை, சுருளிமலை, மருதமலை'' என்று பக்தர்கள் பாடிக்களிக்க 64 மலை ஸ்தலங்களில் எம்பெருமான் வீற்றிருப்பதாக பெரியோர் கூறுவர்.

''வரிசேர்ந்திடு சேல்கய'' என்ற பாட்டின் மூலமும் ''சாந்தமில் மோக வெரி'' என்ற பாட்டின் மூலமும் திருவேங்கிட மலையிலும் முருகன் உறைவதாகக் கூறும் அருணகிரியார் ''கொலைகொண்ட போர் விழி'' என்ற திருப்புகழ் மூலம் மயிலமலையில் முருகன் அமர்ந்த பெருமையை உணர்த்துகிருர்.

முருகப்பெருமான் மலைகள்மீது அமர்வானேன்? அவருக்கு படிவிழா எடுப்பதின் அவசியம்தான் என்ன? என்ற பல சந்தேகங்கள் எழும்புவது இயல்பாகிறது.

பல குன்றுகளிலும் இருந்து திருவிளையாடல் புரிதல் முருகனின் இயல்பு என்று மேலெழுந்தவாரியாக உலகம் அறிந்தாலும் இவற்றிற்கு அப்பால் ஓர் உட்பொருள் இருக்கவேண்டுமல்லவா?

அவற்றை சற்று இங்கு ஆராய எம்பெருமானை வேண்டுவோம்!

1) மலை மிக தொன்மை வாய்ந்தது. கல் தோன்றி மண்தோன்ருக் காலந்தொட்டே முருகப்பெருமான் இப்புவியின்கண் ஆவிர்பவித்து ஆன்மாக்கள் உய்ய அருள் கூட்டுகிருன் என்று ஆன்ருேர் கூறுவர்.

2) ஆதியில் நிர்குண பிரும்மமாய் நின்ற அரிய பெரிய கடவுள்சக்தி தன் இச்சையால் விரிவடைந்து அண்ட சரா சரங்களாகி, மண், காற்று, நெருப்பு, ஜலம், ஆகாயம் என்ற பஞ்சபூதங்களுடன் கலந்த பலகோடி ஜீவராசிகளாகி அவற்றின் உள்ளே உறையும் ஞான ஒளியாக திகழ்கிறது. அந்த

இறைவனின் தன்மையான பஞ்சபூதங்களின் தன்மையை ஒருங்கே உள்ளடக்கி நிற்பது கடின கற்பாறைகளான மலே.

உதாரணமாக, 1) இரண்டு கற்களே உரச நெருப்பு உண்டாகிறது. 2) கடின பாறைகள் கொண்ட மலேஉச்சியில் பாறைகளினிடுக்கில் ஜலம் தோன்றி சுனேகளாக விளங்குகின்றன 3)4) பாறைகளின் இடுக்கில் மண்ணும் காற்றும் நிரம்பி தாவர வர்க்கங்கள் செழிக்கின்றன 5) தன்னேச் சுற்றிலும் உள்ளும் புறமும் ஆகாயம் என்ற வெட்ட வெளியுடன் தழுவி நிற்கிறது.

ஆக இறைவனின் தன்மைகளே ஒருங்கே உள்ளடக்கிய மலேகளே இறைவனின் உறைவிடமென்றும், இறைவனே என்றும் கருதி நம் முன்னேர்கள் வழிபட்டுள்ளனர். 3) முருகன் என்ற அகண்ட ஈஸ்வர சக்தி சூரபதுமனே அடக்கும் நிமித்தமாக உலகில் தோன்றுவதற்கு முன்பே உள்ளது என்பதை முருகபக்தர்கள் பலரும் அறிந்திருக்கலாம்!

கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தில் இதை கருத்தில்கொண்டே ''ஒரு திருமுருகன் வந்து ஆங்கு உதித்தனன்'' என்று பறைசாற்றுகின்ருர். அந்த அகண்ட சக்தி முன்பொரு சமயம் ஆணவத்தால் அறிவிழந்த தன் வாகனமாகிய மயிலே, புவியின்கண் ''குன்றக்குடி'' என்ற மலேயுருவாய் கிடக்க சபித்ததாகவும், சூரன் நிமித்தம் உலகில் தோன்றியபோது அதற்கு சாபவிமோசனம் கொடுத்து அதை குன்ருகவே நின்று சாயுச்யமடைய அருளினுரென்று தலபுராணம் கூறுகின்றது.

4) ''நான்'' ''எனது'' என்ற அகங்கார, மமகாரத்தை ஒருங்கே யமைந்த சூரனே பிளந்தது எம்பெருமானின் வெற்றிவேல். அகங்காரம் நீங்கப்பெற்ற சூரன் இனி நான் இல்லே நீயே என்று கூறுவது போல் குகா - குகா என்று கத்தும் மயிலாகவும், மமா காரத்தை (மாமரத்தை) அறுத்த கோவே'' என்று கூவும் கோழியாகவும் மாறி அருளேப் பெற்ருன். அந்த மயில் மயிலம் என்ற குன்றில் நின்று தவம் செய்து பேறுபெற்றதாக தலபுராணம் கூறும்.

ம – 15

ஆக மேற்கண்ட இரண்டு கூற்றிலிருந்தும் நாம் அறிவது:- ஆணவம் அழிக்கப்பட்ட ஜீவன் (இறைவன் தன்மையை உள்ளடக்கிய மலேயாக மாறியதால் / மலேயைச்சார்ந்து தவமெய்தியதால்) இறைவன் தன்மையை அடைகிறது என்பதாம்.

5) 'மான்' என்ற சொல்லிற்கு ஜீவன் என்ற பொருள் உரைப்பார். ஜீவதத்துவத்தை வலியுறுத்தவே மானின் வயிற்றில் தோன்றினுள் வள்ளியம்மை. பக்தி செய்து பரமனே அடைய விழையும் ஜீவனேநோக்கி, பக்தி என்ற தவம் தூதாக வருமுன், ஓடி வரும் பரமனின் பரமகருணேயை சித்தரிக்கிறது முருகன் வள்ளியை தடுத்தாட்கொண்ட சம்பவம். ஜீவான்மா பரமான்மாவிடம் உறைவதே வள்ளித்திருமண தத்துவம்.

ஜீவான்மாக்களான நம் உடலில் a) மூலாதாரம் b) ஸ்வாதிஷ்டானம் c) மணிபூரகம் d) அநாகதம் e) விசுத்தி f) ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்கள் உண்டென்றும், ஜீவாத்மா ஸ்வரூபமான குண்டலினிசக்தி படிப்படியாக மேலேறி மேற்படி ஆறு ஆதாரங்களே கடந்து ''சகஸ்ராரம்'' என்ற பகுதியை அடைந்து பரமாத்ம சக்தியுடன் ஐக்யமாவதாக யோகிகள் கூறுவர்.

அந்த ஆறு ஆதாரங்களும் ஆறுமலை களுக்கு ஒப்பாகுமென்றும் ஒவ்வொரு மலை யாக (கிரந்தி அல்லது முடிச்சு) ஓர் ஜீவன் கடக்க எம்பெருமான் முருகன் அங்கு வந்து அந்த ஜீவனுக்கு அருள் சொரிவதாக பெரியோர் கூறுவர். இதையே அருணகிரி யார் "நிடார் ஷடாதரத்தின் மீதே பரா பரத்தை" என்று பாடி நமக்கு உபதேசித் துள்ளார்.

6) ஜீவன் தன் தவ (கர்ம, ஞான, பக்தி யோக) முறைகளில் ஒன்றைபற்றி வலிமை யால் மேற்சொன்ன ஒவ்வொரு மலையை யும், படிப்படியாய் மேலேறிச் சென்று கடக்க:-

முதல்மலையைக் கடந்தவுடன்:- எம்பெரு மான் குழந்தை வடிவாக காட்சி தந்து
—ஏறுமயில் ஏறி விளையாடும்.

2-ம் மலையைக் கடந்தவுடன்:- ஞானசிகர மாய் தோன்றி
— ஈசருடன் ஞானமொழி பேசும்.

3-ம் மலையை கடந்தவுடன்:- தயாபரனாய் தன்பெயரைக் கூறும் அடியார் (முன் ஜன்ம மகன் மகம்) வினை தீர்ப்பவனாய்
—கூறுமடியார் வினைதீர்க்கும்.

4-ம் மலையைக் கடந்தவுடன்:- ஜீவனிட முள்ள மாயாமலத்தை ஒழிப்பவனாய்
—குன்றுருவவேல் வாங்கி நிற்கும்.

5-ம் மலையைக் கடந்தவுடன்:- ஜீவனிட முள்ள (ஆணவமலத்தை) அகங்கார, மமா காரத்தை ஒழித்து
—மாறுபடு சூரனை வதைக்கும்.

6-வது மலையைக்கடந்தவுடன்:- பலகோடி ஜன்மங்கள் எடுத்து ஆருத்துன்பமடைந்த ஜீவனுக்கு ஆறுதல் அளித்து, தன்னுள் ஐக்யபடுத்தும்.
—வள்ளியை மணம் புரிய வந்த முகம் ஒன்று என்பதேத் தத்துவம்.

பரமாத்மா என்ற நிலை ஒன்றே என்று விளக்கி ஜீவனை உய்விக்கின்றான் எம் பெருமான்.

மேற்சொன்னபடி, பரமாத்மாவை ஜீவாத் மா அடைய பல படிகளைக் கடந்து பல மலை சிகரங்களை தாண்டி மெள்ள செல்வதையே (ஜீவதத்துவத்தை குறிப்பதையே) முருகப் பெருமானின் படி உத்ஸவம் விளக்குகிறது.

பலபடிகளைக் கொண்ட மலையில் ஏறுவது வயது முதிர்ந்தோருக்கும், வியாதியஸ்தர்க ளுக்கும் மிகச்சிரமமான காரியம். முடியாம லும் போகலாம். ஆகையினால் முருகனை வழி பட வயதானபின் (உத்யோகத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகு) பார்த்துக் கொள்ளலா மென்று இராதே, உடலில் வலு உள்ள போதே வந்துவிடப்பா" என்று கூறுமல் கூறுகிறது. ஓங்கி உயர்ந்து நின்று, குமரன் தாள்பட்டு இறையுணர்வை பரப்பும் குன்று கள்.

பக்தியுடன் ஏறும் ஒவ்வொரு படியும், ஜீவனின் கர்ம தொந்தங்களை நீக்கி பரமப வித்திரனாக்கி பரமனுடன் சேர்க்கச் செய் கிறது.

பக்தன் ஓரடி வைத்தால் பரமன் பத்தடி ஓடிவருவான்" என்பதற்கிணங்க, வாலிப முறுக்கில் பரமனை மறந்து, வயது முதிர்ந்து தள்ளாடி, வியாதி கொண்டு (பொன்னான காலத்தை வீணடித்தோமே என்று ஏங்கி நிற்கும்) எளியோர்க்கும் அருளைச் சொரிய மலை அடிவாரத்திற்கே முருகப் பெருமான் ஓடிவருகிறானென்பதை, பக்தர்கள் படி விழாவில் பலரும் கூடி பக்தியுடன் மலையடி வாரத்தில் பாடி ஆடி பரவசப்படும் நிலையில் கண்கூடாகக் காணலாம்.

நாமும் அவர்களுடன் சேர்ந்து அவன் அருள் பெற

"மயிலம் மலையில் ஏறிடுவோம்"
முருகன் புகழைப் பாடிடுவோம்"
ஹரஹர குகாவென்று முழக்கிடுவோம்"
அவன் அருளை வாரிப் பருகிடுவோம்

என்று பாடுவோமாக.

ஓம் முருகா

திருச்சிற்றம்பலம்



சைவத் திருமுறைப்பாக்கள்

முதல்திருமுறை (சம்பந்தர்தேவாரம்)

வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழன நகராரே.

இரண்டாம் திருமுறை

பீடினால் பெரியோர்களும் பேதமைகெடத் தீதிலா
வீடினால் உயர்ந் தார்களும் வீடிலார்இள வெண்மதி
சூடினார் மறை பாடினார் சுடலைநீறணிந் தார்அழல்
ஆடினார் அறை யணிநல்லூர் அங்கையால் தொழுவார்களே.

மூன்றாந்திருமுறை

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே

இதுவோ எமையாளுமா றீவதொன் றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடு துறையரனே.

நான்காம் திருமுறை (அப்பர் தேவாரம்)

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

ஐந்தாம் திருமுறை

குராமனும் குழலாள் ஒரு கூறனர்
அராமனும் சடையான் திரு ஆமாத்தூர்
இராமனும் வழிபாடு செய் ஈசனை
நிராமயன் தனை நாளும் நினைமினே.

ஆறுந்திருமுறை அப்பர் திருத்தாண்டகம்

முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றி என்தாதாய் போற்றி
தொக்கணா என்றுஇருவர் தோள்கை கூப்பத்
துளங்காது எரிசுடராய் நின்றாய் போற்றி
எக்கண்ணும் கண்ணிலேன் எந்தாய் போற்றி
எறிகெடில விரட்டத்து ஈசா போற்றி.

மூவன்காண் மூவர்க்கும் முதலானான் காண்
முன்னுமாய்ப் பின்னுமாய் முடிவானான் காண்
காவன்காண் உலகுக்கோர் கண்ஆனான் காண்
கங்காளன்சாண் கயிலை மலையினான் காண்
ஆவன்காண் ஆவகத்துஅஞ்சு ஆடினான் காண்
ஆரழலாய் அயற்(கும்) அரிக்கும் அறியவொண்ணா
தேவன்காண் திருமுண்டீச் சரத்துமேய
சிவலோகன் காண்அவன் என்சிந்தை யானே.

ஏழாம் திருமுறை சுந்தரர் தேவாரம்

தன்மையினால் அடியேனைத் தாம்ஆட்கொண்ட நாள்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்டன் என்பதோர் வாழ்வுதந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந் தென்னைப் போகம்புணர்த்த
நன்மையி னார்க்கிடம் ஆவதுநம்திரு நாவலூரே.

எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் திருவாசகம்

உடையாள் உன்றன் நடுவி ருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன் நின்றே

ஒன்பதாம் திருமுறை திருமாளிகைத்தேவர் திரு இசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாக் கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம்சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுஉள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே

பத்தாம் திருமுறை திருமூலர் திருமந்திரம்

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத்(து) உள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்(து)
அப்பரி சாக அமர்ந்திருந் தாரே.

பதினோராம் திருமுறை நக்கீரதேவ நாயனார்

குன்றம் எறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய் – என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத்(து) உறை.

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்(கு) அமரர்இடர் தீர்த்ததுவும் – இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா – பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

பனிரெண்டாம் திருமுறை சேக்கிழார்

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும் இனிஎதிர் காலத்தின்சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபேறு இதனல் எற்றைக்கும் திருவருள்
உடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும் மேன்மையும்
படைத்தனம் என்பார்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினல்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்ற எங்கும் நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்



அருட்பிரகாச வள்ளலார் அருளிய

திருவருட்பா

கந்தன் கருணை இல்லையெனில்......

வானம்எங் கேஅமுத பானம்எங் கேஅமரர்
வாழ்க்கைஅபி மானம் எங்கே
மாட்சிஎங் கேஅவர்கள் சூட்சிஎங் கேதேவ
மன்னன்அர சாட்சி எங்கே
ஞானம்எங் கேமுனிவர் மோனம்எங் கேஅந்த
நான்முகன் செய்கை எங்கே
நாரணன் காத்தலை நடத்தல்எங் கேமறை
நவின்றிடும் ஒழுக்கம் எங்கே
ஈனம்அங் கேசெய்த தாருகனை ஆயிர
இலக்கமுறு சிங்க முகனை
எண்ணரிய திறல்பெற்ற சூரனை மறக்கருணை
ஈந்துபணி கொண்டிலை எனில்
தானமிங் கேர்சென்னை கந்தகோட்டத்துள் வளர்
தலம்ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.



பக்தர்கள் சூழ்ந்தனர் பாடல் பயின்றனர்
பன்னிரு தோளரே வாரும் பொன்மலர்த் தாளரே வாரும்.



திருவிளக்கு வழிபாடு (108 போற்றி)



குறிப்பு: 1 ஐந்துமுக குத்துவிளக்கோ, ஏகமுக விளக்கோ வைத்துக்கொள்ளலாம். ஐந்து முகம் சிவபெருமானின் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாம தேவம், சத்தியோஜாதம் ஆகிய ஐந்து முகங்களைக் குறிக்கும். ஏகமுகம் அவன் ஏகநாயகனாக உள்ளான் என்பதைக் குறிக்கும்.

2 விளக்கின் பாதம் முதல் திரியிடும் உச்சிவரை பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய ஐந்து பீடங்களைக் குறிக்கும். சுடர் சிவன், சக்தி, முருகன், கணபதி முதலியவற்றைக் குறிக்கும்.

3 ஐந்துவகைப் பூக்களையோ, நல்ல குங்குமத்தையோ, அட்சதையையோ கொண்டு வழிபடலாம்.

7 பால், பழம், தேங்காய், வெற்றிலைபாக்கோ, சர்க்கரை அன்னமோ, நிவேதிக்கலாம்.

5 சிறப்பாகப் பெண்களும், பொதுவாக ஆண்களும் வழிபடலாம். வெள்ளி செவ்வாய், திருவிழாக்காலங்களில் கூட்டுவழிபாடாகச் செய்வது நலம்.

6 முதலில் ஓம் என்றும் முடிவில் போற்றி என்றும் ஒவ்வொன்றிற்கும் சொல்லுக.

ஓம் நமசிவாய போற்றி 1
சிவாய நம
சிவசக்தியே
இச்சா சக்தியே
கிரியா சக்தியே 5
ஞான சக்தியே
சொர்ண ரூபியே
சோதி லெட்சுமியே
தீப லெட்சுமியே
மகாலெட்சுமியே 10
தனலெட்சுமியே
தான்யலெட்சுமியே
தைரிய லெட்சுமியே
வீர லெட்சுமியே
விஜய லெட்சுமியே 15
ஜய லெட்சுமியே
வர லெட்சுமியே
கஜ லெட்சுமியே
சுப லெட்சுமியே
சந்தான லெட்சுமியே 20
கிரக லெட்சுமியே
இராச லெட்சுமியே
சித்த லெட்சுமியே
சீதா லெட்சுமியே
திரிபுர லெட்சுமியே 25
சௌபாக்யலட்சுமியே
சர்வமங்கள காரணியே
சர்வதுக்க நிவாரணியே
சர்வாங்க சுந்தரியே
நவக்கிரக நிவர்த்தனியே 30

விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபம் கொண்டுனை வழிபட அருள்வாயே. — அருணகிரிநாதர்

அண்ட நாயகியே
அலங்கார நாயகியே
ஆனந்த நாயகியே
அகிலாண்ட நாயகியே
பிர்மாண்ட நாயகியே
பேரண்ட நாயகியே
அறிவொளி நாயகியே
அறம்வளர் நாயகியே
அருட்சுடர் நாயகியே
மங்கள நாயகியே
மாமணி நாயகியே
மாங்கல்ய நாயகியே
மாமலர் நாயகியே
தாமரை நாயகியே
தயாநிதி நாயகியே
தினம் வரும் நாயகியே
தூமன நாயகியே
துணைவரும் நாயகியே
திருவிளக்கு நாயகியே
தில்லைக் கூத்தன் நாயகியே
திரு நிறை நாயகியே
மூவுலகு தொழும் நாயகியே
முக்கண் பரமன் நாயகியே
மணி விளக்கே
மலை விளக்கே
விண் ஒளியே
மண் ஒளியே
ஆகமப் பொருளே
அருமறைப் பொருளே
சொல்லின் பொருளே
ஒளி வளர் விளக்கே
உடம் பினுள் ஒளியே
உணர் வினுள் ஒளியே
உயிரினுள் ஒளியே
ஆதிநடு அந்த ஒளியே
கற்பனைக் கடந்த ஒளியே
அரு வே!
உரு வே
அருவுரு வே
செந்தாமரைத் தேவி
தீபமங்கள தேவி
குருவாய் விளங்கும் தேவி
ஆறுதல் அளிக்கும் தேவி
பக்திக் கிரங்கும் தேவி
இகபரம் நல்கும் தேவி
ஈரேழு புவன தேவி
அஞ்சல் என்பாய் தேவி
பூங்குழல் விளக்கே
புவனம் துதிக்கும் விளக்கே
தாயாய் விளங்கும் விளக்கே
தயவுடன் அருள்வாய் விளக்கே
தண்ணருள் தருவாய் விளக்கே
கணபதியைத் தந்த விளக்கே
கந்தனைத் தந்த விளக்கே
சிவனுக் குகந்த விளக்கே
மாலின் மார்பு விளக்கே
மாங்கல்யக் காப்பு விளக்கே
நான்முகன் நாவு விளக்கே
நலமெலாம் நல்கும் விளக்கே
நிலவளம் நல்கும் விளக்கே
நித்தியம் நல்கும் விளக்கே
பரிவுடன் காக்கும் விளக்கே
பக்தருக் கிரங்கும் விளக்கே
பிள்ளைகள் மகிழும் விளக்கே
பெருங்கல்வி நல்கும் விளக்கே
பர்வத ராஜ விளக்கே
பால்மதிக் கதிர் விளக்கே
சூல்முதல் காக்கும் சுகமே
உடம்பெனும் மனையுள் விளக்கே
வரம்பிலா இன்ப விளக்கே
வாழ்த்துவார்க் கருளும் விளக்கே
விரைவினில் எனையாள் விளக்கே
வீர ஈர விளக்கே

மானமும், உயிரும் போனால் வராது.
ஞானமும் பக்தியும் வந்தால் போகாது.

திருப்புகழ் முதலிய பாராயணப் பாக்கள்

ஸ்ரீ கணபதி துதி

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரயா னைபதம் பணிவாம்.

ஸ்ரீ அருணகிரிநாதர் துதி

அருவம்ஒரு நான்காகி உருவம்ஒரு நான்காகி அறையிரண்டு
மருவியுள உருஅருவம் ஒன்றாகி மூத்திரமும் வழுத்த ஒண்ணுப்
பெருவெளிக்கும் அப்பாலாய் உள்ளபொருள் ஈதெனவே பெரிதும் சேயோன்
ஒருவனையே புகழ்ந்தஅருள் அருணகிரி சேவடிப்போது உளத்துள் வைப்பாம்

ஸ்ரீ திருப்புகழ்ச் சுவாமி துதி

சிறப்புடன் யாரும் பிறப்புயர் பெறவே
திருப்புகழ்த் திருமுறை விருப்புடன் தந்த
திருப்புகழ்ச் சுவாமி சச்சிதானந்தர்
குருப்படி வாழ்வோர் கருப்புகார் தாமே.

திருப்புகழைக் கேளீர் தினம்

வேதம்வேண் டாம்சகல வித்தைவேண் டாம்கீத
நாதம்வேண் டாம்ஞான நூல்வேண்டாம் – ஆதி
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் தாள்போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்.

திருப்புகழ்ப் பயன்

ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம் – மோனவீ(டு)
ஏறலாம் யானைக்(கு) இளையான் திருப்புகழைக்
கூறினர்க்(கு) ஆமேயிக் கூற்று.

ம – 16

மயிலமலை முருகன் துதி

அடியார் புடையூ டணுகிக் கருதும்
படிவாழ் வுபடைத் திடும்நாள் உளதோ
பொடியா டியபுங் கவனுர் உதவும்
வடிவேல் முருகா மயிலத் தரசே.

விநாயகர் துதி திருப்புகழ்

உம்பர்தருத் தேநுமணிக் கசிவாகி-
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி;
இன்பரசத் தேபருகிப் பலகாலும்-
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே;
தம்பிதனக் காகவனத் தணைவோனே-
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே;
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே-
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

ஆறுபடைவீட்டுத் திருப்புகழ்

திருப்பரங்குன்றம்

சந்ததம் பந்தத் தொடராலே-
சஞ்சலம் துஞ்சித் திரியாதே;
கந்தனென் றென்றுற் றுனைநாளும்-
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ;
தந்தியின் கொம்பைப் புணர்வோனே-
சங்கரன் பங்கிற் சிவைபாலா;
செந்திலங் கண்டிக் கதிர்வேலா-
தென்பரங் குன்றிற் பெருமாளே.

திருச்செந்தூர்

இயலிசையி லுசித வஞ்சிக் கயர்வாகி-
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே;
உயர்கருணை புரியுமின்பக் கடல்மூழ்கி-
உனையெனது ளறியு மன்பைத் தருவாயே;
மயில் தகர்க லிடைய ரந்தத் தினைகாவல்-
வனசகுற மகளை வந்தித் தணைவோனே;
கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே-
கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே.

பழநி

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்;

ஏறுமயில் வாகனகு காசரவ ணனது
ஈசஎன மானமுன — தென்றுமோதும்
ஏழைகள் வியாகுலமி தேதெனவி னவிலுனை
யேவர்புகழ் வார்மறையு — மென்சொலாதோ
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை — தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும — டங்கல்வேலா
சீறிவரு மாறவுண னவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி — அண்டகூடஞ்
சேருமழ கார்பழநி வாழ்குமர னே பிரம
தேவர்வர தாமுருக — தம்பிரானே.

சுவாமிமலை

காமியத் தழுந்தி — யிளையாதே-
காலர்கைப் படிந்து — மடியாதே;
ஓமெழுத்தி லன்பு — மிகவூறி-
ஓவியத்தி லந்த — மருள்வாயே;
தூமமெய்க் கணிந்த — சுகலீலா-
சூரனைக் கடிந்த — கதிர்வேலா;
ஏமவெற் புயர்ந்த — மயில்வீரா-
ஏரகத் தமர்ந்த — பெருமாளே.

குன்றுதோருடல்

அதிருங் கழல்ப ணிந்து — னடியேனுன்-
அபயம் புகுவ தென்று — நிலைகாண;
இதயந் தனிலி ருந்து — க்ருபையாகி-
இடர்சங் கைகள் கலங்க — அருள்வாயே;
எதிரங் கொருவ ரின்றி — நடமாடும்-
இறைவன் றனது பங்கி — லுமைபாலா;
பதியெங் கிலுமி ருந்து — விளையாடிப்-
பலகுன் றிலும மர்ந்த — பெருமாளே.

பழமுதிர்சோலை

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி — அகமாகி-
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி — அவர்மேலாய்;
இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி — வருவோனே-
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி — வரவேணும்;
மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும் — வடிவோனே-
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம — முடையோனே;
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடும் — மயிலோனே-
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு — பெருமாளே.

கந்தர் அநுபூதி

காப்பு (கலிவிருத்தம்)

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் து) உருகத்
தஞ்சத்(து)அருள்சண்முகனுக்(கு) இயல்சேர்
செஞ்சொல் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக்கரஆனை பதம் பணிவாம்.

நூல்

ஆடும்பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்!
தேடுங் கயமா முகனைச் செருவில்
சாடுந் தனியானைசகோதரனே. 1

உல்லாச, நிராகுல, யோக விதச்,
சல்லாப விநோதனு நீ அலையோ?
எல்லாம்அற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே 2

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடம்
தானோ பொருளா வதுசண் முகனே. 3

வளைபட்ட கைம்மாதொடு மக்க ளெனும்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே. 4

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாயை மடந்தைய ரென் றயருஞ்
சகமாயையுள் நின்று தயங்குவதே. 5

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்த மரும்புமதோ
பணியா வென வள்ளி பதம் பணியும்
தணியா அதிமோகதயாபரனே. 6

கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. 7

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம்பொரு தானவ நாசகனே. 8

மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டு டறவேல் சயிலத் தெறியும்
நிட்டுர நிராகுல நிர்ப் பயனே. 9

கார்மா மிசைகா லன்வரில் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே. 10

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே. 11

செம்மான் மகளைத் திருடுந்திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொரு ளொன்று மறிந்திலனே. 12

முருகன் தனிவேல் முனிநங் குருவென்று
அருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்று
இருளன் றொளியன் றெனநின் றதுவே. 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லுமவாவினையே. 14

முருகன் குமரன் குகனென்று மொழிந்து
உருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே. 15

பேராசை யெனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந்தரனே. 16

யாமோதிய கல்வியு மெம்ம றிவுந்
தாமேபெற வேலவர் தந்ததனாற்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவிர் நடவீ ரினியே. 17

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதி காவலசூர பயங்கரனே. 18

வடிவுந் தனமும் மனமும் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென்றொரு பாவி வெளிப் படினே. 19

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த் தியவா
விரிதாரண விக்ரம வேள் இமையோர்
புரிதாரக நாக புரந்தரனே. 20

கருதா மறவா நெறிகாண எனக்கு
இருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூர விபாட ணனே. 21

காலைக் குமரேச னெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாலைக் குழல் வள்ளி பதம்பணியும்
வேலைச் சுரபூபதி மேருவையே. 22

அடியைக் குறியா தறியா மையினன்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. 23

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வே னருள் சேரவு மெண்ணுமதோ
சூர்வே ரொடுகுன்று தொளைத்தநெடும்
போர்வேல புரந்தர பூபதியே. 24

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்து
ஐயோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலேறிய சேவகனே. 25

ஆதார மிலே னருளைப் பெறவே
நீதா னொரு சற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோதமனோ
தீதா சுரலோக சிகாமணியே. 26

மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலேறிய வானவனே. 27

ஆனா அமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய வென்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின்றது தற்பரமே. 28

இல்லே யெனுமாயையி லிட்டனைநீ
பொல்லே னறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வேலவனே 29

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்று
ஒவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. 30

பாழ்வா ழ்வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. 31

கலையே பதறிக் கதறித்தலையூடு
அலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவேடர் குலப் பிடிதோய்
மலையே மலைகூறிடு வாகையனே 32

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென்று விடப் பெறுவேன்
மந்தா கினிதந்த வரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே 33

சிங்கார மடந்தையர் தீனெறிபோய்
மங்காம லெனக் குவரந் தருவாய்
சங்க்ராம சிகாவல சண்முகனே
கங்கா நதி பால க்ருபாகரனே. 34

விதிகாணு முடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழ லென் றருள்வாய்
மதிவாள் நுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே. 35

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. 36

கிரிவாய் விடுவிக் ரம வேல்இறைவன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோடு மகந்தையையே. 37

ஆதாளியை யொன் றறியே னையறத்
தீதாளியை யாண் டதுசெப் புமதோ
கூதாள கிராத குலிக் கிறைவா
வேதாள கணம் புகழ்வே லவனே. 38

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவேடணை யென்று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங்கர தேசிகனே. 39

வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதணோடு திரிந்தவனே. 40

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயும்நாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞான உபதேசிகனே. 41

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்று
அறிவற் றறியாமையு மற்றதுவே. 42

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே. 43

சாடும் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடும் சுரர்மா முடிவே தமும்வெம்
காடும் புனமுங் கமழும் கழலே. 44

கரவா கியகல்வி யுளார் கடைசென்று
இரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக தயாபரனே. 45

எம்தாயுமெனக் கருள்தந் தையும்நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. 46

ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே. 47

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவ ரோடுறும் வேலவனே. 48

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னம் களையும் க்ருபைசூழ் சுடரே. 49

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திர ஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. 50

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 51

கந்தரலங்காரம்

வேலே விளங்குகை யான்செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு 'வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகல்வதுவே.

அந்தாதி

சிறுமிக் குமர நிகர்வீர் பகிரச் சிலையுயிர்த்துச்
சிறுமிக் குமர சரணமென் னீருய்வீர் செந்திணைமேற்
சிறுமிக் குமர புரைத்துநின் றேன்சிலை வேட்டுவனெச்
சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீறடிக்கே.

மயில் விருத்தம்

சந்தான புஷ்பபரி மளகிண் கிணீமுகச்
சரணயுக ளமிர்தப்ரபா
சந்த்ரசே கரமுஷி காரூட வெகுமோக
சத்யப்ரி யாலிங்கனச்
சிந்தா மணிக்கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகன்முதற்
சிவனைவலம் வருமளவி லுலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாப மயிலாம்
மந்தா கிநிப்பிரப வதரங்க விதரங்க
வனசரோ தயகிர்த்திகா
வரபுத்ர ராஜீவ பரியங்க தந்திய
வராசலன் குலிசாயுதத்
திந்த்ராணி மங்கல்ய தந்துரட் சாபரண
இகல்வேல் விநோத னருள்கூ
ரிமையகிரி குமரிமக னேறுநீ லக்ரீவ
ரத்நக் கலாபமயிலே.

மற்றும் நாமவளி முதலியன முடிந்தபின் "நாதவிந்து கலாதி" "நிருதர்க்கொரு கால ஜெய ஜெய" என்ற திருப்புகழைப்பாடி ஆறிருதடந்தோள் வாழ்க, "வான்முகில் வழாது பெய்க" பாடி முடிக்கவும்.

மங்களம்

மத்திமாவதி ஆதி

பல்லவி

சிவகுரு நாதருக்கு ஜெயமங்களம் – நல்ல
செங்கமல பாதருக்கு சுபமங்களம் (சிவ)

அநுபல்லவி

பவமறுத் தெம்மையாளும் பன்னிரு தோளருக்கு
தவமுனி வோர்கள் தொழும் தண்ணரு ளாளருக்கு (சிவ)

சரணம்

வள்ளிதெய்வ யானைஇரு மங்கையர்க்கு மங்களம்
வாழ்வில் வளங் காட்டுகின்ற வேலருக்கு மங்களம்
தெள்ளு தமிழ் வேதஞ்சொன்ன யாவருக்கும் மங்களம்
தேவதேவ மகாதேவ மூவருக்கும் மங்களம் (சிவ)

— தவத்திரு ஆறுமுகநாவலர்



பரிபாடலில் முருகன்

மு. வைத்தியநாதன், M.A., B.Sc., B.E.D., Dip in Kanada

"முருகா என ஓர்தரம் ஓதடியார் முடி மேல் இருதாள் அணிவோனே" என்று போற்றப்படுபவன் முருகன். அவன் "வைதாரையும் வாழவைப்பவன்". என்றும் இளையனாய், அழகனாய் உலகம் உய்ய அருள் பாலித்து வருகின்றான். முருகன் வழிபாடு நம் தமிழகத்தில் அன்று தொட்டு இன்றுவரை சிறப்புடன் நடைபெற்றுவருவது அனைவரும் அறிந்த ஒன்றே. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செவ்வேள் வழிபாடு நம் தமிழகத்தில் மேலோக்கி இருந்த செய்தியினைத் தொல்காப்பியம் முதலிய இலக்கிய இலக்கண நூல்களைக் கொண்டறியலாம். "சேயோன் மேய மைவரை உலகம்" என்று குறிஞ்சி நிலத் தெய்வமாகப் போற்றப்படுகிறான். அன்றிலிருந்து இன்றுவரை அவனைக் குன்று தோறாடும் குமரனாகப் போற்றி வணங்குகின்றோம். அம்முருகப் பெருமான் புகழைப் பல பாடல்கள் மூலம் சங்க இலக்கியங்களில் காணலாம். அவற்றுள் "ஓங்கு பரிபாடல்" என்று போற்றப்படும் பரிபாடல், எட்டுத்தொகை நூலில் ஐந்தாவதாக வைத்து எண்ணப்படும் நூலாகும். அதில் செவ்வேளின் புகழ் எட்டுப் பாடல்களில் அழகுறப் பேசப்படுகின்றது. அவைகள் படிப்போர் நெஞ்சில் என்றும் நீங்கா இடம்பெறும் அற்புதக் காவியங்களாக, சிறந்த நாடகங்களாக, இன்பச் சுவையை அள்ளித் தரும் தேனமுதமாக உள்ளன. அவற்றுள் ஒரு காட்சி.

முருகப் பெருமான் அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்பவன். களவு, கற்பு என்ற இரண்டு ஒழுக்கங்களுக்கு ஏற்ப, அவன் களவு, ஒழுக்கத்திற்கு வள்ளியையும், கற்பொழுக்கத்திற்கு தெய்வயானையையும் மணம் புரிந்தான். ஆயினும் அவனுக்கு வள்ளியம்மையின்பால் அதிக நாட்டம் உண்டு அவனின் "தேனுறு கிளவிக்கு வாயூறி நின்றவன்" என்றும் போற்றப்படுவதால் அவன் வள்ளியம்மையின்பால் கொண்டுள்ள தனி அன்பு நன்கு புலனாகும்.

ஒரு சமயம் செவ்வேள் தெய்வயானையைக் கண்டு அவளோடு அளவளாவச் சென்றான். ஆனால் அவள் அவன் மீது ஊடினாள் அவன் சதாசர்வகாலமும் வள்ளியம்மையுடனேயே இருத்தல் அவளுக்கு அவன் மீது சினத்தை உண்டாக்கியது. அவள் அவனைக் கண்டு, வஞ்சகனே! உன்னை அறியாமலேயே உன் மையலில் பல மகளிர் அகப்பட்டனர். அவர்கள் நிலை என்ன தெரியுமா? மழையை எதிர் நோக்கி வருந்தும் பொழிலைப் போன்றுள்ளனர். இது யாருடைய தவறு. நின்தவறு? இல்லை. இது அவர்களின் தவறே. அவர்களிடம் சென்று ஆறுதல் கூறி அவர்களின் காம மயக்கத்தைப் போக்குதல் உனக்கு எளிதன்று. ஏன்

தெரியுமா? நீ வள்ளியின் மையலில் சிக்குண்டு அவள் பிடியில் உள்ளாய். ஆதலால் என்னைப் போன்ற மங்கையர்களின் துயர் தீர்க்க நீ எங்ஙனம் வருதல் இயலும்'', என்று கூறி அவள் ஊடிச் சென்றாள். அதனால் வருத்தமுற்ற முருகவேள், அவள் ஊடல் தணிப்பான் வேண்டி, அவளது அழகியத் திருவடிகளில் தன் தலையில் அணிந்துள்ள மாலைகள் தரையில் தோய வணங்கினான். இச்செயலினால் மனம் மகிழ்ந்த தெய்வயானை அவனைத் தழுவினாள்.

இதனைக் கண்டாள் வள்ளி. அதனால் அவள் சினம் கொண்டாள். அவள் முருகப் பெருமானின் கைகளை இறுக இறுகக் கட்டிவைத்துத் தனது மாலையையே அடிக்கும் கோலாகக் கொண்டு, "நீ அவள்பால் செல்லாதே செல்லாதே'' என்று கடிந்து அவனை அடித்தாள். இதனைக் கண்டு அங்கு இருந்த வள்ளி, தெய்வயானையின் மயில்கள், தங்கள் தலைவியருக்காகப் பரிந்து, தங்களுக்குள் போர் தொடங்கின. இருவருடைய அழகிய கிளிகளும் தம்முட் பகைகொண்டு ஒன்றையொன்று மழலைச் சொற்களாலே வையத் தொடங்கின. அதே சமயத்தில் வள்ளியின் வண்டு, தேவசேனையின் கொண்டையின் கண் செறிந்த வண்டின் மேல் சென்று மோதத் தொடங்கின.

இவ்வாறு மயில்களும், கிளிகளும், வண்டுகளும் தங்களுக்குள் போரிடுவதைக் கண்ட தேவயானையின் தோழியர் சினம் கொண்டவராய் வள்ளியின் தோழியருடைய மாலைகளோடு தம் மாலையை வீசிப்பின்னினர். தம் தலையில் அணிந்துள்ள மாலைகளை எறிந்து கோபத்தால் மனம் தடுமாறினர். தம் மாலைகளையும், வரிப்பந்துகளையும் போர்ப் படையாகக் கொண்டு எறிந்தனர். தம் கொங்கையின் கண் இறுக்கியச் கச்சினையே மத்திகையாகக் கொண்டு அடித்துக் கொண்டனர். இவ்வாறு தேவயானையின் தோழியர்கள் தம் தலைவிக்காகப் பரிந்து போரிடுவதைக் கண்ணுற்ற வள்ளியின் தோழியர் யானையைப் போல பலம் கொண்டவராய், வெற்றியைத் தேடி வேகமாகச் செல்லும் குதிரையைப் போல வேகமாகச் சென்றனர். அம்புகள் தம் மார்பினைப் பொருந்தும்படி தமது வரியப்பட்ட வில்லினை நன்கு வளையுமாறு வளைத்துச் சீறினர். தம் தோளின்கண் அணியப்பட்ட வளையங்களையே ஆழிப் படையாகச் கொண்டு சுழற்றினர். இதனைக் கண்டு அஞ்சிய தேவயானையின் தோழியார் முருகவேளைச் சூழ்ந்து கொண்டனர். சிலர் சுனையின்கண் மூழ்கி மறைந்தனர். சிலர் வண்டுகளாக மாறினர். சிலர் மயிலாக மாறித் தம் தோகையை விரித்து ஆடினர். இன்னும் சிலர் குயிலாக மாறிக் கூவினர். இவ்வாறு அவர்கள் துன்பப்பட்டனர். வள்ளியின் தோழியர் தேனும் தினையும் உண்டு வாழும் மலைவாழ் மக்கள் அல்லவா! அவர்களின் வீரத்திற்குக் காரணம் கூற வேண்டுமோ! எனவே வள்ளியின் தோழியர் தேவானையின் தோழியரை வென்று வாகை சூடினர். இது முருகப் பெருமானுக்குப் பெரிதும் உவகையை உண்டு பண்ணியது.

மேற்கூறிய அற்புதமான நிகழ்ச்சியினை பரிபாடலில் அழகுறப் படம் பிடித்துக் காட்டுகின்றார் குன்றம் பூதனார் என்னும் புலவர். முருகப்பெருமானின் மனைவியரான வள்ளி தெய்வயானையரின் இறைவன்பால் ஏற்படும் காதலையும், அதனால் ஏற்படும் சண்டையினையும், கவிநயம் தோன்ற, இலக்கிய மணம் கமழ, கற்பனை அழகு மிளிர எடுத்துக் கூறும் நயம் போற்றத்தக்கது.

நன்றியுரை

திருத்தணிகேசன் திருப்படிவிழா கண்டு, அங்ஙனமே ஒன்றிய உள்ளத்தினலே, மயிலந் தன் மாமலையிலும் திருப்படிவிழாவை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தை அவன் திருக்குறிப்பால் தோற்றுவித்து, இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் சனவரித்திங்கள் குடியரசுத் திருநாளில் இத்திருப்படிவிழா மிகச் சிறப்பாக நடைபெற அருள்பாலித்து வரும் எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவடிகட்கு முதற்கண் பணிவான வணக்கத்தைச் செலுத்திக் கொள்ளுகின்றோம்.

படிகள் தோறும் பரமன் புகழ்பாடி, மயிலையும், அவன் திருக்கை அயிலையும், அவன் கடைக்கண் இயலையும் கண்டு இன்புற்றிட இருபத்து நான்கு ஆண்டுகளாக இத்திருப்படிவிழாச் சிறப்புற நடைபெறும் வண்ணம் அருளாசி தந்தருளும் மயிலம் மகா சந்நிதானம் சிவத்திரு சிவஞான பாலய சுவாமிகளின் பொன்னர் திருவடிகட்கு வணக்கத்தையும், நன்றியினையும் காணிக்கையாக செலுத்திக் கொள்கின்றோம்.

இத்திருப்படிவிழாவின் இருபத்தைந்தாண்டு கால வரலாற்றில் கலங்கரை விளக்கமாகத் திகழும் அருட்பெருஞ்சோதி ஆண்டவன் அருள் மறவாத சிந்தையராம் மேலமங்கலத்தில் உறையும் தவத்திரு சுவாமி இராமதாஸ் சுவாமிகள் அவர்கள் இத்திருப்படி விழா மேன்மேலும் சிறக்கவும், பக்தியினைப் பாமர மக்களிடையே பரப்பிடவும், பல அன்பர்களை யும் விழாவோடு தொடர்பு கொள்ளச் செய்தும், இவ்விழா முறையோடு நடைபெற வழிவகுத்துக் கொடுத்தும் தாமே முதல் ஆண்டிலிருந்து முன்னின்று நடத்தியும் வருகின்றார்கள். அன்னாரின் திருவடிக் கமலங்களுக்கு எங்கள் நன்றியும் வணக்கமும் உரியதாகுக.

வெள்ளிவிழா நினைவு மண்டபம் ஒன்று நிறுவ வேண்டுமென்று எங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து, நல்லாசி வழங்கிவரும் தவச்சீலர் அருட்கவி சாதுராம் சுவாமிகள் அவர்களுக்கு எமது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திருப்புகழ் அடியார் திரு V. சுந்தரமய்யர் அவர்கள், புகழ் விரும்பாத பொதுநோக்கும், ஆத்ம தரிசனமும் கொண்ட அருள்செல்வர் ஆவார். வேதாந்த சிரோன்மணி திரு P. V. இராஜகோபால் B.E. ஆகிய இருவரும் படிவிழாவினைத் தொடக்கி வைத்த பெரியார்கள் என்பதில் மிகையாகாது. இவ்விருவருக்கும் விழாக் குழுவின் சார்பில் நன்றி கலந்த வணக்கம்.

இவ்விழாவின் சென்ற கால வரலாற்றில் நிர்வாகப் பொறுப்பேற்று பணிபுரிந்தவர்களான அமரர்கள் விழுப்புரம் திரு P. V. அருணசலம் செட்டியார் அவர்கள், வளையாம்பட்டு பெருநிலக்கிழார் திரு S. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், சிறுவந்தாடு திரு V. புருஷோத்தம ரெட்டியார்

அவர்கள், பனமலைப்பேட்டை திரு சி. கோவிந்தசாமி செட்டியார் அவர்கள் ஓரத்தூர் திரு M. D. இராமசாமி ரெட்டியார் அவர்கள், காட்ராண்பாக்கம் வழிபாட்டரசி திருமதி ஜெயலட்சுமி அம்மையார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர் ஆவார்கள். அவர்களின் ஆன்மா சாந்தியடைய முருகப்பெருமான் திருவடியினை இறைஞ்சுகின்றோம்.

இன்று இத்திருப்படிவிழா மேலும் சிறப்புடன் நடைபெறுவதற்கு உறுதுணையாக நின்று தொண்டாற்றி வரும் உயர்திருவாளர்கள் A. பாலசுப்ரமண்ய பக்தர், G. A. இராதாகிருஷ்ண செட்டியார், M. இரத்தினசபாபதிப்பிள்ளை, A. கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை, A. இராம மூர்த்திப்பிள்ளை, G. ஜெயராமப்பிள்ளை, S. B. பட்டாபிரெட்டியார், K. P. முத்துவிஜயம் ரெட்டியார், V. முத்துசாமிப்பிள்ளை, N. குமாரசாமிப் பிள்ளை, B. மாசிலாமணி, முத்துவீரா ரெட்டியார், T. G. கணேசன் செட்டியார், A. கந்தசாமிக்கவுண்டர், A. சரவணமுதலியார், திருநாவுக்கரசுப்பிள்ளை, S. N. பாலசுப்ரமண்யம் முதலானோருக்கும் மற்றும் தளராது தொண்டாற்றிவரும் உறுப்பினர்களுக்கும், நன்கொடை யாளர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றி.

எமது வேண்டுகோளுக்கிணங்கி விழாவில் வந்து கலந்துகொண்டு சொற்பொழிவு, கருத்தரங்கம், இசையரங்கம், பட்டிமன்றம், கதாகாலட் சேபம் ஆகியவை சிறப்பாக நடைபெற உதவிசெய்த புலவர் கலைஞர் பெருமக்கள் அனைவருக்கும், தேவாரம், திருப்புகழ், அருட்பா, பிரபந்த பஜனைக் குழுவினருக்கும், வெள்ளிவிழா மண்டபம் நிறுவ பேருதவி புரிந்த அனைவர்க்கும் எமது நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

இவ்வெள்ளி விழா நினைவு மண்டபத்தினை விரைவாகவும் சுதை சித்திர வேலைப்பாட்டுடனும் கட்டி முடித்த அன்பர் திரு. G. சந்திரசேகரன் அவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இவ்வெள்ளி விழா மலர் வெளியிடுவதில் பெரிதும் துணைபுரிந்த மலர்க்குழுப் புலவர்களுக்கும் நன்றி.

இம்மலர் சிறந்த முறையில் விரைவாகவும் அழகாகவும் அச்சிட்டு உதவிய சிதம்பரம் வேலன் அச்சகத்தாருக்கும் உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மயிலையும் அவன்திருக்கை அயிலையும் அவன் கடைக்கண்
இயலையும் நினைந்திருக்க வாருமே நீங்கள் வாருமே.

இங்ஙனம்

தென்மங்கலம்
25—I—80

T. M. திருக்காமுப்பிள்ளை
செயலர், மயிலம் படிவிழாக்குழு